Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 16 வெள்ளி - 18 24 - 30 - யூன் - 2005



## பொதுக்கட்டமைப்பு; அதிசயங்கள் அற்புதங்கள் நிகழ்ந்தால் மட்டும்







## வவுனியா பூந்தோட்டம் முகாமிலிருந்து எப்போது போவோம்...

# சந்திரிகாவின் சுய அரசியல் எதுவரை தொடரப்போகிறது?



பொதுக்கட்டமைப்பு எந்த நேரமும் கைச்சாத்தாகலாம் என்று இருந்த பரபரப்பு நேற்று முன்தினம் நோர்வே வெளிவிவகார அமைச்சரின் கிளிநொச்சி விஜயத்துடன் குறைந்துவிட்டது போலவே தெரிகின்றது.

பொதுக்கட்டமைப்பு இறுதி செய்யப்பட்டுவிட்டதாகவும் அதில் எந்த மாற்றமும் செய்வதற்கு இனிமேல் அவகாசம் இல்லை எனவும் விதார் ஹெல்கேசனால் முன்னர் கூறப்பட்டது. அவர் வெளியிட்ட அக்கருத்து பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்படும் நிலைக்கு வந்துவிட்டது என்ற தொனிப்பை ஏற்படுத்தியது.

முன்னதாக ஜே.வி.பி அரசில் இருந்து விலகியபின்னர் பௌத்த பிக்குகளுடனான சில சமரசங்களுக்குப் பின்னர் சந்திரிகா அதில் சில மாற்றங்களைச் செய்ய முயன்றார்.

அப்போது இனிமேலும் இழுத்தடிக்கமுடியாது என்ற நிலையில் ஹெல்கேசன் அதற்கு இணங்கவில்லை என்று கூறப்பட்டது.

அதேநேரம்தான் அதில் முஸ்லிம்களின் தலைவர்களிடம் இருந்து தமது பிரதிநிதித்துவம் தாமும் ஒரு தரப்பாக அதில் கையொப்பம் இடும் அளவுக்கு இருக்க வேண்டும் என்று கோரினர். அப்போதும் நோர்வே தரப்பு அதனையே அவர்களுக்கு காரணமாகக் கூறி அதனை நிராகரித்தது.

இவையே மிகப் பிந்தியதாக பொதுக்கட்டமைப்பு ஒப்பேறலாம் என்ற ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்துவனவாக அமைந்தன.

ஆனால் கிளிநொச்சிக்கு அவர் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளை சந்தித்துப்பேச வந்தபோது அதற்கான எந்த ஆதாரங்களையும் அவர் கொண்டுவரவில்லை.



நோர்வே பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவதன் மூலமாக தேக்கமடைந்துபோயுள்ள சமாதானத்தை முன்னெடுக்க உந்துவதுடன் போரொன்று பற்றிய செய்திகளை இல்லாமல் செய்துவிடலாம் என்றும் கருதுகின்றது.

ஆனால் அதற்கு சந்திரிகா இடமளிப்பதாக இல்லை என்பதை விதார் ஹெல்கேசனிடம் வாக்குறுதிகளைத் தவிர வேறெவற்றையும் கொடுத்துவிடாததில் இருந்தும் புலனாகின்றது.

இது குறித்து விடுதலைப்புலிகள் தரப்பிடம் இருந்து விசனம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. பொதுக்கட்டமைப்பை ஒரு விவகாரமாக்கி சர்ச்சைகளுக்குள் தள்ளி இறுதியில் எதிர்ப்புகளும் கண்டனங்களும் தோன்ற அதனைக் கைவிடுவது என்ற நிலைப்பாட்டில்தான் சனாதிபதி உள்ளாரா? என்ற கேள்வியை இப்போதும் தவிர்க்க இயலாமல் தான் இருக்கின்றது.

ஏனெனில் அதனை உருவாக்கிய பின்னர் ஒப்பமிடுவதற்கு எந்தத் தடைகளுமே இல்லை. இதுவரையும் அவருக்கு முட்டுக்கட்டையாக இருந்ததாகக் கூறப்பட்ட ஜே.வி.பி வெளியேறிப்போனதுடன் அத்தடையும் பெருமளவில் இல்லாமலே போய்விட்டது.

தேசத்துக்கு நன்மை தரவல்லது என்று தான் நியாயப்படுத்தியவற்றை சனநாயக வழிகளில் பெறுமதியையும் பற்றி யோசிக்காது முடிவெடுத்துச்செயற்படுத்தியவர் சனாதிபதி சந்திரிகா. தனது நிறைவேற்று அதிகாரத்தை பிரயோகித்து ரணில் அரசை கலைத்ததற்குக் கூட அவர் அத்தகைய காரணத்தையே கூறுகின்றார்.

பொதுக்கட்டமைப்பு விடயத்திலும் அதனையே சொல்லிவருகின்றார். ஆனால், இன்றுவரை அதனைச் செய்யவில்லை. அப்படியாயின் உண்மையாகவே அது தேவையென்று அவர் நம்பவில்லை என்று தான் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆகவே பொதுக் கட்டமைப்பை அவர் ஒரு விவகாரமாக்கியதன் நோக்கம் வெறுமனே சுய அரசியல் இலாபம் கருதியதாகவே இருக்கின்றது.

மூன்றாம் கட்ட ஈழப்போர்க் காலத்துக்கு முன்பு எப்படி சமாதானத்துக்கான வேஷத்தோடு செயற்பட்டு அதனை இன அழிப்பு யுத்தமாக மாற்றினாரோ அப்படி இதனையும் கொண்டு செல்வது தான் நோக்கம் போலுள்ளது.

நிறைவேற்று அதிகார சனாதிபதியாக இனிமேல் வருவதற்குரிய சந்தர்ப்பம் இல்லாததால் வேறு எந்த வழிகளில் கூடுதல் அதிகாரங்களோடு ஆட்சியை தக்கவைக்கலாம் என்பதற்கான காய் நகர்த்தலாகவே இதனை அவர் கைக்கொள்கின்றார்.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் சர்வதேச நாடுகளின் அழுத்தம் அதிகமாக இருக்கின்றது. உதவும் நாடுகளின் நிதியின்றி சுனாமி பாதிப்பில் இருந்து மீள முடியாது என்ற அவலம் இலங்கைத் தீவு முழுவதற்கும் உள்ளது.

இதனால்தான் அதனை உருவாக்க வேண்டிய நிலை சந்திரிகாவுக்கு ஏற்பட்டது. ஆனால் அதனை தனக்குச் சார்பான அரசியலாக மாற்றி முன்னெடுக்கவே அவர் முயல்கின்றார்.

அதுவே உடனடியாகவே ஏற்படுத்தி விடக்கூடியதை இழுத்தடிப்பதற்கான காரணமாகவுள்ளது. இந்த இழுத்தடிப்பின்மூலம் சிங்கள இனவாதிகளினதும் சமாதான ஆர்வலர்களினதும் ஆதரவைப் பெற்றுக்கொண்டு முடியுமாயின் அதைக் கைவிடவும் நினைக்கின்றார் போலுள்ளது. இதனால்தான் சனாதிபதியின் வெறும் வாக்குறுதிகளை மட்டும் நம்பிக்கைக்குரியனவாக அமையாது என்று விடுதலைப் புலிகள் கூறுயிருக்கின்றனர் எனக் கருதலாம்.

-ஞாபகன்-

# எமது மண்ணின் தொன்மையை நாம் விற்று விடலாமா...?

சமாதான சூழ்நிலையில் எமது சமூகத்துக்கு நேர்ந்த துயரச் சம்பவங்களில் முக்கியத்துவம் மிக்கதாகக் கருதக்கூடியது எமது பிரதேசத்திற்கு வருகை தரும் பழம்பொருள் வியாபாரிகளின் வருகையாகும். எமது மண்ணின் தொன்மையை சுட்டிக்காட்டும் பொருட்கள் வியாபாரிகளின் வியாபாரப்பொருட்களாகி பிரதேசத்தைவிட்டு வெளியே கொண்டுசெல்லப்பட்டுள்ளன.

தென்பகுதி வியாபாரிகள் அதிக விலைபோகும் அரும் பொருட்களை கிராமம் கிராமமாகச் சென்று குறைந்த விலையில் அள்ளிச்சென்றுள்ளனர். இந்த நிலையில் எம் மக்களிடம் தொல்பொருட்களைப் பாதுகாக்கும் எண்ணம் இல்லாமல் போய்விட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஆனால் தொல்பொருட்களைப் பாதுகாப்பது பற்றிய எண்ணம் எம்மில் பலரிடம் உண்டு. ஆனால் அது எவ்வளவுதூரம் நடைமுறைச் சாத்தியமானதாக உள்ளது என்பது கேள்விக்குரிய விடயமாகவே இருக்கின்றது. சிலர் சுயமாக வீடுகளில் பொருட்களை சேகரித்து அழகுபடுத்தியுள்ளனர். ஆனால் அவ்வாறு பேணப்படும் பொருள் பற்றிய கருத்தோ அல்லது தகவல்களோ எதிர்கால சந்ததியினரிடம் எந்த அளவு சென்றடையும் என்பதே கேள்விக்குரிய விடயமாகும்.

எமதூர் வீடுகளில் உள்ள அம்மி, ஆட்டுக் கல்லு போன்றவைகூட பாட்டியின் பாட்டி காலத்தில் வாங்கப் பட்டவையாக உள்ளன. அவை வடிவங்களில் வித்தியாசமும் அலங்கார வடிவங்கள் பொறிக்கப்பட்டவையாகவும் இருக்கின்றன. இதேபோல விளக்குகள், குடங்கள், பித்தளைத் தட்டு போன்ற பாவனைப்பொருட்கள போன்ற பல பொருட்கள் வீடுகளில் உண்டு. ஆனால் அவை பாதுகாக்க படுவதில்லை. அதன் பெறுமதி கணிக்கப்பட ு கவனிப்பார் அற்று அழிந்துபோகிறது.

வெற்றிலைத்தட்டுக் ள் குடியிருந்த திண்ணைகள் காணாமல் போயின. இப்போது வெற்றிலைத்தட்டுக்களே இல்லாமல் போய் ன. அதேபோல மூக்குப்பேணி தெரியாத பிள்ளைகள் பலர் இன்று உண்டு. அதே நேரம் அந்த ஊரில் எங்காவது வெற்றிலைத்தட்டும், மூக்குப்பேணியும் உண்டு. ஆனால் பார்க்கவோ, பயன்படுத்தவோ சந்தர்ப்பம் இல்லை. இதனால் அந்தப் பிள்ளைக்கு அப்பொருட்கள் பற்றிய அறிவு இல்லாமல் போகிறது.

இவைபற்றி யோசிக்கின்றபோது இவற்றை சேகரித்து இப்படி பொது இடத்தில் காட்சிப் படுத்துவதால் என்ன பயன் என்ற கேள்வி எழலாம். உண்மை. எமது வரலாறு. பூர்வீகம் பற்றி நாம் எமது எதிர்கால சமுதாயத்தினருக்கு எடுத்துக்கூறும்போது அவர்களுக்கு வெறுமனவே இதிகாசக்கதைகளைப்போல கூற முடியாது. ஆதாரங்களுடன் கூறும்போது அப் பிள்ளையிடம் சமூகப் பிரக்ஞை ஏற்படும்.

நாடு பற்றியும் தனது ஊர் பற்றியும் பூர்வீகத்தைப் புரிந்துகொள்ளும் அப்பிள்ளை தன் எதிர்காலம் பற்றி திட்டமிடமுடியும். எனவே நாம் எமது வரலாற்றுப் படிமங்களாக தொல் பொருட்களைப் பேணுதல் வேண்டும். உண்மையில் எமது பிரதேசத்தில் பலர் இந்த அரும்பணியில் ஈடுபடுகின்றனர். அவர்கள் பெருந்தொகையான விலைகொடுத்து மிகத் தொன்மையான பொருட்களை எல்லாம் வாங்கி பாதுகாத்து வருகின்றனர். ஆனால் அப்பொருட்கள் பற்றி யாருக்குமே தெரியாது. அந்தக் குடும்பத்தினருக்கும், அக் குடும்பம் சார்ந்த சிலருக்குமே அப்பொருளின் பூர்வீகம் பற்றித் தெரியவரும். ஆனால் பொது இடம் ஒன்றில் பிரத்தியேகமாக இப்பொருட்களை ஒன்றிணைத்து காட்சிப்படுத்தி அதனைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புகளோடு பாதுகாக்கப்படுமாக இருந்தால் நிச்சயமாக மிகப் பிரயோசனமுடையதாக இருக்கும்.

எவ்வாறான பொருட்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று பார்த்தால் பாதுகாக்கப்படுகின்ற பொருட்கள் ஏதாவது ஒரு வகையில் எமது சமுதாய வாழ்வில் ஒரு வரலாற்று முக்கியத்துவம் பெற்றதாக இருக்கவேண்டும். வரலாற்றுப்பொருட்கள் என்று பார்த்தால் எம் நாட்டில் மன்னராட்சிக்கால பாவனைப்பொருட்கள், நாணயங்கள், ஈமச்சின்னங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.இவற்றை விட அந்நியராட்சிக் காலத்து பாவனைப் பொருட்கள் கூட பாதுகாக்கப்பட வேண்டியவை தான். அக் காலத்தில் எமது மண்ணில் நிலவிய வாழ்வியல் நிலைமையை நினைவுபடுத்த அவற்றையும் நாம் நிச்சயம் பேணிப் பாதுகாத்தல் வேண்டும்.

மேற்கு நாட்டவர் ஆட்சிக் காலத்தில் இங்கு கொண்டு வரப்பட்ட "அரிக்கன் லாம்பு", "மேசை லாம்பு" வடிவங்கள் இன்று இல்லை. இவற்றையும் நாம் பேணிக் காக்க வேண்டிய தேவை உள்ளது. மன்னராட்சிக்காலம், அந்நிய ராட்சிக் காலம் அதற்கெல்லாம் முந்திய வரலாற்றுக்கு முற்பட்ட தொன்மைக் காலம் ஆகிய காலங்களில் வரலாற்று படிமங்களாக நாம் பாதுகாத்தல் வேண்டும்.

இங்கு குறிப்பிட்டது போல பாது காக்கும் பணியை பல தனி நபர்கள் செய்தாலும் அதன் பயன் சிறுவட்டத்துள்ளேயே அடங்கி விடுகிறது. ஆனால் பொது இடங்களில் காட்சிப் படுத்தி பேணுவது பயனுடையதாக அமையும்.

வெறுமனவே காட்சிப்படுத்தப்படுகின்ற வேலையை எல்லோரும் செய்ய முடியாது. ஏனெனில் காட்சிப்படுத்தலில் நேர்த்தியும், வரலாற்று ஆவணப் பாங்கு இருத்தலும் வேண்டும். அத்தோடு காட்சிப்படுத்தப்பட்டவற்றை பார்த்து பயனடையும் சந்தர்ப்பம் நிரம்பிய இடமாக இருத்தல் வேண்டும்.

எதிர்கால சந்ததியாக இருக்கப் போகின்ற இன்றைய சிறார்கள் மத்தியில் இந்த தொல் பொருட்களை பேணுவது பற்றிய பிரச்சினையை ஏற்படுத்துவதுடன் அப் பொருட்கள் பற்றிய பூர்வீக வரலாற்றை எடுத்துரைக்கின்ற வல்லமையை வளர்க்க வேண்டும். இதனூடாகவே எமது மண்ணின் தொடர்ச்சியான வரலாறு பரம்பரை, பரம்பரையாகப் பேண முடியும்.

குப்பையிலும், களஞ்சிய அறைகளிலும் தேடுவார் அற்றுக் கிடக்கும் எம் பூர்வீகத்தை எடுத்துரைக்கக் கூடிய பொருட்கள் அனைத்தும் ஒன்றுசேர்க்கப்பட்டு காட்சிப்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு புறப்பட்ட யாழ்ப்பாண மண்ணில் புதிய அரும் காட்சியகங்கள் திறக்கப்படுகின்றன. இந்த முயற்சிகள் போற்றுதற்குரியன. அதனை மக்களே சிறப்பாக முன்னெடுக்க வேண்டும். மக்கள் தாமாக முன் வந்து பொருட்களை இவ் அரும் பொருட் காட்சியகங்களில் கொடுத்து உதவ வேண்டும். இது ஒரு தார்மீகக் கடமையாகும்.

இவ்வாறு தொல் பொருட்கள் காட்சியகம் அமையப் பெறுவது சாலப் பொருத்தமானது. அவை தொடர்ந்து பேணப்படவேண்டும். எதிர் காலத்தில் மாணவர்கள் பார்ப்பதும், அவை பற்றி அறிந்து கொள்வதும் அவசியமாகும்.

சோ.சி. சிவானந்தராஜா

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# பொதுக்கட்டமைப்பு: ஏதாவது அதிசயங்கள் அற்புதங்கள் நிகழ்ந்தால் மட்டும்

**ஜே.வி.பி இப்பொழுது கழன்றுபோய் விட்டது. அவரது தனிப்பட்ட கனவுகளை நிறைவேற்றுவதற்கு சந்திரிகாவுக்கு இருந்த வாய்ப்புக்கள் மேலும் குறைந்து வருவதாகவே தோன்றுகிறது. புலிகளாகத்தொடங்காத வரை ஒரு யுத்தம் வெடிக்காது; யுத்தநிறுத்தம் உடையாது என்பது இப்பொழுது தெளிவாகி விட்டது. எனவே அவரது பேராசையை பூர்த்தி செய்யும் விதத்தில் யுத்தத்தை ஒரு தெரிவாக பயன்படுத்தலாம் என்ற நிலை அவருடைய கைக்குவெளியே காணப்படுகிறது.**

அண்மையில் ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தின் ஊழியர் சொன்னார்... கிழக்கில் ஒரு கடலோரக் கிராமத்தில் சுனாமியின் அகதி ஒருவர் நிவாரணத்தை வாங்கியபின் வயிறுமுட்ட குடித்துவிட்டு நிலத்தில் மல்லாந்து படுத்துக் கிடந்தபடி பின்வருமாறு சொன்னாராம்.... "தங்கச் சுனாமியே நீ இன்னும் ஒருமுறை வாராயோ" என்று.

சுனாமி இலங்கைத்தீவுக்கு பேரழிவுகளைக் கொண்டுவந்திருக்கிறது என்பது ஒருபுறமிருக்க, சுனாமியைத்தொடர்ந்து முடுக்கிவிடப்பட்டிருக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளின் பின்னணியில் ஆங்கிலம் தெரிந்த நடுத்தர வர்க்கத்திற்கு புதிய வேலை வாய்ப்புக்கள் அதிகரித்த அளவில் திடீரென்று திறந்துவிடப்பட்டுள்ளன. இது தவிர, பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீட இறுதி ஆண்டு மாணவன் ஒருவர் சொன்னார்... சுனாமி போதிய அளவுக்கு புதிய ஆய்வுத் தலைப்புக்களை கொண்டு வந்திருக்கிறது என்று.



ஆசியாவைத் தாக்கிய சுனாமி இலங்கைத்தீவின் ஒரு பகுதியினருக்கு பேரழிவாகவும் எளிதில் விடுபடமுடியாத பயங்கரமான அனுபவமாகவும் அமைந்திருக்கிறது. இன்னொரு தரப்பினருக்கு அது புதியவேலை வாய்ப்புக்களை அகலத்திறந்து விட்டிருக்கிறது. வேறு சிலருக்கு புதிய ஆய்வுத் தலைப்புக்களை கொடுத்திருக்கிறது. அதேசமயம் அது சந்திரிகாவை பொறுத்தவரை ஒரு சோதினையைக் கொண்டுவந்திருக்கிறது.

இடைக்கால நிர்வாக ஏற்பாடு ஒன்றைக் குறித்த உரையாடல்களோடு தேங்கி நின்றுவிட்டிருந்த சமாதான முயற்சிகளை அவற்றின் ஆகக்குறைந்தபட்ச அடுத்தகட்ட நகர்வு ஒன்றை நோக்கி அசைக்க வேண்டிய நிர்ப்பந்தங்களை சுனாமி கொண்டுவந்திருக்கிறது. ஒரு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்குள் புலிகளோடு அதிகாரத்தை பகிரத் தயாராக இல்லாத கொழும்புத் தலைமைகளுக்கு உடனடியாக ஒரு நிவாரணக் கட்டமைப்பை உருவாக்க வேண்டிய எதிர்பாராத ஒரு பரீட்சையை சுனாமி கொண்டு வந்திருக்கிறது.

சந்திரிகா இப்பொழுது அந்தச் சோதினையை எழுதிக் கொண்டிருக்கிறார். சோதினைக்கு போகாமல் தப்பிவிடலாம் என்றே அவர் திட்டமிட்டிருந்தார். புலிகளாக ஒரு யுத்தத்தை தொடங்கினால் பரவாயில்லை என்றும் அவர் திட்டமிட்டிருந்தார். எல்லாவற்றையும்விட முக்கியமாக தனது எதிர்காலக் கனவுகளை அதாவது பதவியில் தொடர்ந்தும் இருப்பதற்கான அவரது பேராசைகளை நிறைவேற்றிக்கொள்ள யுத்தமா சமாதானமா எது சிறந்தது என்று முடிவெடுக்கமுடியாது பிரச்சினைகளை தனக்கு வசதியான ஒரு தருணம் வரும்வரைக்கும் ஒத்திப்போட்டுக் கொண்டுவந்தார். ஆனால் இப்பொழுது இனியும் காலம் தாழ்த்த முடியாது என்ற ஒரு நிலை தோன்றியிருக்கிறது. இதற்கு பலகாரணங்கள் இருக்கமுடியும். அவற்றுள் முக்கியமானவை வருமாறு...

முதலாவது, உள்நாட்டில் நிதி நெருக்கடிகளை தளர்த்தவும் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவும் அவருக்கு காசு தேவைப்படுகிறது. ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்திருக்கும்வரை இந்த காசை பெறமுடியாது. எனவே ஜே.வி.பியை வெளியில் போகுமாறு

**—நிலாந்தன்—**

செய்துவிட்டு காசை எடுக்கக் கூடிய விதத்தில் மேற்கு நாடுகளுடன் ஏதாவது ஒரு சுதாகரிப்பைச் செய்ய முடியுமா என்று அவர் சிந்திக்கத் தொடங்கியிருப்பது.

இரண்டாவது, யுத்த நிறுத்தத்தை அரித்தரித்துக் கொண்டு போகும் அரை மென்தீவிர யுத்தமொன்று முழுமென் தீவிர யுத்தமாக மாறி யுத்தநிறுத்தத்தின் இதயத்தை தாக்கிவிடுமோ என்ற அச்சம் மேற்கு நாடுகளுக்கு உண்டாகிவிட்டது. எனவே சுனாமிப் பொதுக கட்டமைப்பின்மூலம் புலிகளைச் சாந்தப்படுத்தக்கிடைத்த சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது என்பதில் மேற்கு நாடுகள் மிகவும் கவனமாகவும் விடாமுயற்சியோடும் காணப்படுகின்றன. இதில் சந்திரிகா பின்வாங்க பின்வாங்க, மேற்கு நாடுகள் தம்மை நோக்கி வரும் புலிகளை அங்கீகரித்து அவர்களுடைய சர்வதேச அந்தஸ்தை உயர்த்தும் விதத்தில் அவர்களை விருந்தோம்பியதன் மூலம் சந்திரிகாவின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க முயன்றன. இந்த அழுத்தங்கள் ஓரளவுக்கு வேலை செய்யத்தொடங்கி விட்டன போலவும் தோன்றுகிறது.



மூன்றாவது, ஜே.வி.பியுடன் சேர்ந்திருக்க முடியாது என்ற ஒரு நிலைக்கு சந்திரிகா வந்துவிட்டிருப்பது. ஜே.வி.பி யின் எழுச்சி எனப்படுவது எஸ்.எல்.எவ்.பியின் வாக்கு வங்கியை உடைத்துப் பெறப்பட்டதே என்பது சந்திரிகாவுக்குத் தெரியும். எனவே ஜே.வி.பியை அவர் பாவிக்கத்தான் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்தவரே தவிர, ஜே.வி.பி அவரைப் பாவிக்கும் ஒரு நிலைக்கோ அல்லது எஸ்.எல்.எவ்.பியை துண்டுகளாக்கித் தின்றுவிடும் ஒரு வளர்ச்சிக்கோ வருவதை அவர் சகித்துக்கொள்ளத் தயாரில்லை.

அதிலும் குறிப்பாக அண்மைக்காலங்களில் அவருக்கு நெருக்கமான அமைச்சர் மங்களசமரவீர ஜே.வி.பியிடத்தில் அதிகம் மென்மையாக நடந்துகொள்வது குறித்து சந்திரிகா எரிச்சலடைந்துள்ளார். அதோடு அவருடைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை அவருக்கு எதிராக தூண்டிவிட்டு எஸ்.எல்.எவ்.பியை இரண்டாக பிளக்க ஜே.வி.பி முயல்கிறது என்று ஊகிக்கத்தக்க வளர்ச்சிகள் உருவாகிக்கொண்டிருந்த ஒரு பின்னணியில் ஜே.வி.பியை கழற்றிவிடுவது என்ற ஒருமுடிவுக்கு அவர் வந்திருக்கக்கூடும்.

ஜே.வி.பியை வெளியில் விட்டதால் அவர் தனது சொந்தக் கட்சியான எஸ்.எல்.எவ்.பியை ஒப்பீட்டளவில் பாதுகாத்திருக்கிறார் என்பதே சரி. இது சமாதானத்துக்காக அவர் செய்த தியாகம் என்று வெளியில் காட்ட முயற்சிக்கிறார். ஆனால் எஸ்.எல்.எவ்.பியை பாதுகாக்க ஜே.வி.பியை வெளியில் விடுவதை தவிர வேறு வழியில்லை என்பது இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும்.

எதுவோ ஜே.வி.பி இப்பொழுது கழன்று போய்விட்டது. அவரது தனிப்பட்ட கனவுகளை நிறைவேற்றுவதற்கு சந்திரிகாவுக்கு இருந்த வாய்ப்புக்கள் மேலும் குறைந்து வருவதாகவே தோன்றுகிறது. புலிகளாகத் தொடங்காத வரை ஒரு யுத்தம் வெடிக்காது; யுத்த நிறுத்தம் உடையாது என்பது இப்பொழுது தெளிவாகி விட்டது. எனவே அவரது பேராசையை பூர்த்திசெய்யும்விதத்தில் யுத்தத்தை ஒரு தெரிவாக பயன்படுத்தலாம் என்ற நிலை அவருடைய கைக்கு வெளியே காணப்படுகிறது.

ஜே.வி.பியை வெளியில் விட்டதால் இதுவரைகாலமும் அவருக்கு அடைபட்டிருந்த சில வழிகள் இப்போது திறக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தப் புதிய வழிகளின் ஊடாக அவர் முன்னேறுவதற்கு அவரிடமுள்ள சிறுபான்மை அரசாங்கம் எவ்வளவு தூரத்துக்கு தாக்குப்பிடிக்கும்? கடந்த சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாக தன்னிடமிருந்துவரும் நிறைவேற்று அதிகாரங்களை பிரயோகித்து அவர் செய்யத்தவறிய ஒருவிசயத்தை இப் போது மட்டும் செய்யப்போகிறார் என்று எப்படி எதிர்பார்ப்பது?

எல்லாவற்றுக்கும் முதலில் அவர் தனது பேராசைகளைப் பூர்த்தி செய்யும் நிகழ்ச்சி நிரலை கைவிட்டு விட்டாரா? இல்லையா என்பதை கண்டுபிடிக்கவேண்டும். ஜே.வி.பியை கழற்றிவிட்டதை மட்டும் வைத்துக் கொண்டு அவர் மேற்படி நிகழ்ச்சி நிரலை கைவிட்டிருப்பதாக எடுத்துக் கொள்ளமுடியாது.

அவர் அந்த நிகழ்ச்சி நிரலைக் கைவிடவில்லை என்றால் பொதுக்கட்டமைப்பு விசயத்திலும் அவர் ஏதோ சூழ்ச்சிசெய்யப் போகிறார் அல்லது பொறிவைக்கப் போகிறார் அல்லது நாடகம் ஆடுகிறார் என்றே அர்த்தம்.



ஒரு சிறுபான்மை அரசாங்கம் சமாதான முயற்சிகளை அல்லது சமாதான முயற்சிகளை உந்தித்தள்ளவல்ல பொதுக் கட்டமைப்பு போன்ற விவகாரங்களை வெற்றிகரமாகக் கையாள முடியாது என்பதற்கான உதாரணங்களே உலகில் அதிகமுண்டு. பலஸ்தீனத்தின் சமாதான முயற்சிகளின் போது இஸ்ரேலில் இது நடந்தது.

எனவே ஒரு சிறுபான்மை அரசாங்கத்தை வைத்துக்கொண்டு சுனாமிப் பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதோ அல்லது அப்படி உருவாக்கினாலும் அதை வெற்றிகரமாகக் கொண்டு நகர்த்துவதோ என்பது அதிலும் குறிப்பாக சந்திரிகா தனது பேராசைகளைக் கைவிட்டுவிட்டாரா இல்லையா என்பது பற்றிய உத்தரவாதங்கள் ஏதும் அற்ற ஒரு சூழலில் அதைச் செய்வது என்பது, ஏதும் அதிசயங்கள் அற்புதங்கள் நிகழ்ந்தால் மட்டுமே சாத்தியமாகக்கூடும்.

ஆனால் யூதர்களின் வரலாற்றை மிகவும் கவர்ச்சியாக எழுதிய லியோன் ஊரிஸ் தனது உலகப் புகழ் பெற்ற நூலாகிய எக்ஸடசில் கூறுகிறார்.... அரசியலைப் பொறுத்தவரை அதிசயங்கள் அற்புதங்களின் காலம் எப்பொழுதோ முடிந்துவிட்டது என்று.

# முள்ளுக்கம்பிச்சிறையும் புத்தபெருமானும்

பொன்னியின் செல்வன் என்னும் வரலாற்றுப் புனை கதையை எழுதுவதற்கு முன்னர் எழுத்தாளர் 'கல்கி' இலங்கைத்தீவுக்கு ஒரு பயணத்தை மேற்கொண்டிருந்தார். சில நாட்களுக்கான பயணமாக அது இருந்திருந்தாலும் கூட அவர் இலங்கைத்தீவின் அரசியலை அவர் நன்கு புரிந்துகொள்ளும் ஆற்றல் உள்ளவராக இருந்தார்.

அவரது பயணம் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதுகளின் தொடக்கத்தில் ஏற்பட்டதாகும். அவர் சில தினங்களே இங்கிருந்தார். ஆனால் அவருக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பொன்னியின் செல்வனில் காட்டியுள்ள பாங்கு மிகவும் அருமையானதாகவும், சிறப்பானதாகவும் அமைந்திருந்தது.

அரசியல் வாதிகள் எங்களுக்குப் பல ஆண்டுகள் அனுபவங்கள் உண்டு என்று கூறுபவர்களைவிட மிகவும் நுட்பமாக இலங்கைத்தீவின் அரசியலை அவர் நன்கு தெரிந்திருந்தார்.

"புத்தபிட்சுக்கள் அருள்மொழி வர்மரை அநுராதபுரத்திற்கு அழைத்துச்சென்று அவருக்கு முடிசூட்ட விரும்புகின்றனர். ஆனால் அருள்மொழிவர்மர் அவர்களிடம் தனது மறுப்பைத் தெரிவிக்கின்றார். ஆனால் புத்த பிட்சுக்களும் பல பதில்களைக் கூறி அரசராகும்படி அருள்மொழிவர்மரைக் கட்டாயப் படுத்துகின்றனர். எல்லாவற்றிற்கும் பதில்சொல்லி, புத்தபிக்குகளிடம் நியாயங்களைக் கூறி அவர் இலங்கைத் தீவின் முடியை ஏற்க மறுத்துவிடுகின்றார். அதன் பின்னர் அருள்மொழிவர்மர், வந்தியத்தேவன், ஆழ்வார்க்கடியான் ஆகிய மூவரும் தனியாக இருக்கும்பொழுது பொன்னியின் செல்வனை பார்த்து இலங்கைச் சிம்மாசனம் தங்களுக்கு வேண்டாம் என்றால், பக்கத்தில் நான் நின்றேனே என்பக்கம் கை காட்டி இவனுக்குக் கொடுங்கள் என்று சொல்லியிருக்கக்கூடாதா என்றான் வந்தியந்தேவன்.

அருள்மொழித்தேவர் சிரித்து ஓய்ந்தபிறகு வந்தியத்தேவரே! இராஜ்யத்தை ஏற்றுக்கொள்வது அவ்வளவு எளிய காரியமா, அதிலும் புத்தபிட்சுக்கள் கொடுத்து ஏற்றுக் கொள்வது சிறிதும் முறையல்ல. பின்னால் பெரிய விபரீதங்களுக்கு இடமாகும். மதத்தலைவர்கள் மத விசயங்களுடன் நிற்கவேண்டும். மதத்தலைவர்கள் இராஜரீக காரியங்களில் தலையிட்டால் மதத்துக்கும் கேடு, இராஜ்யத்துக்கும் கேடு என்று கூறுகின்றார்.'

இத்துடன் நில்லாது மேலும் அவர் கூறுகின்றார் "இன்று எனக்குச் சிம்மாசனம் கொடுக்க வந்த பிட்சுக்கள் இந்த நாட்டிலுள்ள எல்லா புத்தமதத்தாருக்கும் தலைவர்கள் அல்ல. இவர்கள் ஒரு கூட்டத்துக்குத் தலைவர்கள். இவர்களுடைய சங்கத்தைப் போல் இன்னும் இரண்டு சங்கங்கள் இருக்கின்றன. இவர்களுடைய இஷ்டப்படி இராஜ்யம் ஆளவேண்டும். மற்ற இரு சங்கத்தாரும் உடனே நம் விரோதிகள் ஆவார்கள்!" என்றார்.

இதுதான் சிங்களத் தலைவர்களின் அன்றைய அவலநிலையாக இருந்தது. 1956இல் நடந்த நாடாளுமன்றத்தேர்தலில் புத்தபிட்சுக்களின் ஆதரவுடன் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா ஆட்சியைப் பிடித்தார். எக்சத் பிக்கு பெரமுனையின் தலைவரும் களனி ராஜமகா விகாரையின் முதன்மைப் பிட்சுவுமான புத்தரகித்ததேரர் பண்டாரநாயக்காவை ஆட்சிக்குக் கொண்டுவரப்பாடுபட்டவர். அமைச்சரவையில் தனக்கு விரும்பியவர்களை நியமிக்க வேண்டுமெனப் பண்டாரநாயக்காவுக்கு நிர்ப்பந்தங்கள் கொடுத்தவர்.

சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவந்தபண்டாரநாயக்க தந்தை செல்வாவுடன் ஒப்பந்தம் மேற்கொண்டார். அவ்வொப்பந்தத்தைக் கிழித்தெறியச் செய்வதற்கு அழுத்தங்கள் கொடுத்தவர் இத்தேரர்.

இறுதியில் பண்டாரநாயக்காவின் கொலையில் முதல் எதிரியும் இப்புத்திரகித்ததேரரேயாகும். பண்டாரநாயக்காவைச் சுட்டவரும் சோமரத்தினதேரர் எனப்படும் புத்தபிட்சுவே யாகும். பதவியில் ஏற்றியவர்களே பண்டாரநாயக்காவின் உயிரையும் பறித்தனர்.

புத்தபிட்சுக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்காவின் ஆயுளே அவர்களால் முடித்துவைக்கப்பட்டது. கல்கி எழுதியதை அப்படியே மெய்ப்பிப்பதாக இது உள்ளது.

ஐம்பதுகளில் அரசியலில் தீவிரபங்களிப்புச்செய்த பிட்சுக்கள் இன்று நேரடியாக அரசியலில் ஈடுபட்டுள்ளனர். இது மதத்துக்கும் கேடு, அரசியலுக்கும் கேடு என்று "கல்கி" அன்றே கூறியிருந்தார். ஆனால் சிறிலங்காவின் இன்றைய அரசியல் மதவெறியை மையமாகக் கொண்டு பிட்சுக்களாலும், பிட்சுக்கள் சேர்ந்த அமைப்புகளாலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

புத்தரின் சிலைகளைத் தமிழ் மண்ணிலே நிறுவி முரண்பாடுகளை வளர்த்து அரசியல் ஆதாயம் தேட விழைகின்றனர். அரச மரங்கள் இருந்தால் அது புத்தமத அடையாளம். உடனே அங்கு புத்தர் சிலைகளை வைத்து அவ்விடம் சிங்கள பௌத்தத்தின் சொத்து என்று தொடங்கினார்கள். இன்று சந்திகளிலும் வெறும் காணிகளிலும் புத்தர் சிலைகளை இரவோடிரவாக வைத்துவிட்டுச் சிங்கள பௌத்தத்துக்காகக் குரல் எழுப்புகின்றார்கள். இலங்கையில் ஆங்கிலச் சட்டத்தின்படி புத்தர் சிலையை எந்த இடத்திலும் நிறுவலாம். அதற்கு அனுமதி பெறத் தேவையில்லை. ஏனைய மதங்களின் சிலைகளை நிறுவுவதற்கே அனுமதி பெறவேண்டும்.

இக் கூற்றானது சிங்கள பௌத்த மேலாண்மையை உறுதிப்படுத்தும் கூற்றாகவே உள்ளது.

தமிழ் மண்ணில் புத்தர்சிலைகளை அமைத்தல் விகாரைகளை நிறுவுதல் என்பன பரவலாக இடம் பெறுகின்றன. பாதுகாப்புப் பிரதேசங்கள் என்று கூறிக்கொண்டு அப்பிரதேசங்கள் பலவற்றில் விகாரைகளை படையினர் நிறுவி வருகின்றனர். இதெல்லாம் தமிழ் மண்ணை நிரந்தரமாக்கும் எண்ணங்களைக் கொண்டவைகளாகும்.

ஜே.வி.பியும் ,ஹெல உறுமயவும் மிகத் தீவிரமாக இப்புத்தர்சிலை விவகாரத்தைச் சிங்கள மக்களிடம் எடுத்துச் சொல்கின்றனர். எப்படியும் ஆட்சியைப் பிடித்துவிடவே மதத்தை முன்வைத்து அவை செயலாற்றுகின்றன. இதைப்பார்த்த ரணில் என்ன சொல்கிறார்? என்ன செய்கின்றார்? திருமலை புத்தர் சிலை விவகாரத்தில் ரணில் வாய் திறக்கவில்லை. ஆனால் சிறிலங்காவிலுள்ள புத்தவிகாரைகளுக்குச் சென்று புத்த தர்மத்தைக் காப்பாற்றத்தான் புறப்பட்டுள்ளதாகக் கூறி வருகின்றார். இவர் புத்த சமயத்தைக் காப்பாற்றும் மதவாதியாக அடுத்த சனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தங்களைச் செய்து வருகின்றார்.

ஆனால் திருமலையில் புத்தர் சிலையோ மணல் மூட்டைகள், முள்ளுக்கம்பிகளுக்கு நடுவே துப்பாக்கி ஏந்திய சிப்பாயின் காவலில் இருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகியுள்ளது. புத்தர் அங்கே சிறைவைக்கப்பட்டுள்ளார் என்பதே உண்மையாகும்.

அரச வாழ்வும் வேண்டாம், கட்டிய மனையாளும் வேண்டாம், பிள்ளையும் வேண்டாம், மனித வாழ்வுக்கு முத்தியளிக்க வழிகாணத் திறந்த வெளியில் அரச மரத்தின் கீழ் அறிவு பெற்றார் புத்தர். ஆனால் இன்று முள்ளுக்கம்பிக்குள் அடைத்து வைக்கப்படுகின்றார். இன்று புத்தரின் நிலையே பரிதாபகரமாக உள்ளது.

இதற்குக் காரணம் யார்? மதத்தை வைத்து அரசியல் ஆதாயம் பெற நினைத்த, நினைக்கும் அரசியல் வாதிகளும், அரசியலில் புகுந்து ஆட்சியைப் பிடிக்க நினைக்கும் புத்தபிட்சுக்களுமே காரணமாவார்கள்.



யுத்தம் நிறுத்தப்பட்டுக் கண்டிவீதி திறக்கப்பட்ட பின்னர் சிறிலங்காவிலிருந்து ஊடகவியலாளர்கள் புத்த துறவிகள் அடிக்கடி யாழ்ப்பாணம் வந்தார்கள். மக்களைச் சந்தித்தார்கள் அவ்வாறு வந்தவர்களில் நூற்றுக் கணக்கானவர்கள் புத்த பிட்சுக்கள். அவர்கள் இங்கு வந்த பின்னர்தான் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டதாகவும் ஊடகங்கள் சரியான தகவல்களைத் தரவில்லை என்றும் புத்தபிட்சுக்கள் எல்லோரும் இனவாதிகள் அல்லவென்றும் நாங்கள் சமாதானமாகவும் ஒற்றுமையாகவும் வாழவேண்டும் என்றும் கூறினர். தமிழ் மக்களின் செய்திகளைச் சிங்கள மக்களுக்கு எடுத்துச் சொல்வதாகவும் தெரிவித்தனர். ஆனால் இவ்வாறு வந்தவர்கள் இங்கு தமிழ் மக்களுக்குச் சொல்லியவற்றில் பத்து வீதத்தையாவது சிங்கள மக்களிடம் சென்று எடுத்துக் கூறினார்களா? கிடையவே கிடையாது. இங்கே சுற்றுலா வந்தவர்கள் சண்டை வேண்டாம் என்று தமிழ் மக்களுக்குக் கூறியதைத் தவிர வேறு எதனையும் செய்யவில்லை.

திருமலை புத்தர்சிலை விவகாரம் பெரிதாகி வருகின்றது. இப்புத்தர் சிலை விவகாரம் அமைதியான சூழ்நிலையை கெடுத்துவிடும் எனப் பலரும் அஞ்சுகின்றனர். இத்தனைக்கும் தமிழர் தாயகப்பகுதிகளுக்கு வந்துபோன புத்தபிட்சுக்கள் ஏதாவது கூறியிருக்கிறார்களா? அத்துமீறி புத்தர் சிலைகளை வைக்காதீர்கள் என்று சொல்லியுள்ளார்களா? இச்சிலை விவகாரம் மீண்டும் யுத்தத்தை கொண்டு வந்துவிடும் எனவே அகற்றி விடுங்கள் என்று எவராவது இப்பகுதிகளுக்கு வந்து தமிழ் மக்களிடம் போதித்தவர்கள் கூறியிருக்கிறார்களா? எதுவுமே கிடையாது அவர்களால் அவ்வாறு கூற முடியாது என்னில் அவர்களும் சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகளே. யாரோ ஓரிருவர் உண்மைத் துறவிகள் இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால் அவர்களது கருத்துக்கள் எடுபட மாட்டாது என்பதே உண்மையாகும்.

காலத்தை இழுத்தடிப்பதால் எதிர்ப்பின் தன்மை குறைந்துவிடும். பின்னர் எல்லாம் ஆறிய கஞ்சி பழங்கஞ்சி ஆகிவிடும் என்று நினைக்கக்கூடும். ஆனால் அண்மைய வரலாறு இவை பொய் என்பதை நிறுவியுள்ளதை எவரும் மறுக்கமாட்டார்கள்.

தமிழ் மக்கள் புத்தரைவெறுக்கவில்லை, புத்தரின் கோட்பாடுகளை மறுக்கவில்லை .

புத்தரை மதிக்கும் தமிழ் மக்கள் பௌத்தத்தின் கோட்பாடுகளை ஏற்கும் தமிழ்மக்கள் சிங்கள பௌத்த மேலாண்மையின் சின்னமாக ஆக்கிரமிப்பின் சின்னமாக அவை தமிழ் மண்ணில் காட்சி அளிப்பதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆக்கிரமிப்பு சின்னங்கள் மட்டுமல்ல அடையாளங்களும் தமிழ் மண்ணிலிருந்து முற்றாக அகற்றப்பட்டே தீரும்.




**பரணி**

# ஈழத்தமிழர் பார்வையில் இந்தியத்தூதரகம்


ஜே.என்.டிக்சிற்


கோபாலகிருஸ்ணகாந்தி


நிரும்பசென்


நிருபமா

இலங்கையின் நாடாளுமன்றத்திற்கு நிகரான சக்தி மையமாக இந்தியத் தூதரகத்தைத் தரமுயர்த்திய சிறப்பு டிக்சிற்கு உண்டு. இதை மாற்று அதிகார நிலையம் (ALTERNATE POWER CENTRE) என்று அழைப்பார்கள். திடீரென்று இது ஏற்பட்டதல்ல. மிகவும் மெதுவாக ஆனால் இடைவிடாது இலங்கை விவகாரங்களில் தன்னையொரு ஆதிக்க சக்தியாக இந்தியா வளர்த்துக் கொண்டது. இந்த வளர்ச்சியின் உச்சம் டிக்சிற் காலத்தில் எட்டப்பட்டது. இடையிடையே ஓய்ந்துவிட்டதுபோல் தென்பட்டாலும் இந்தியத் தூதரகத்தின் டிக்சிற் கால அழுத்தம் இன்னும் தொடர்ந்தபடி இருக்கிறது. இலங்கையின் இறைமை பற்றிப் பெரிதாகப்பேசிக்கொண்டே அதே இறைமையைச் செயலற்றுப் போகச் செய்வதில் இந்தியத் தூதரகம் முனைப்பாகச் செயற்படுகிறது. சிறிஜெயவர்த்தன புரத்திலுள்ள நாடாளுமன்றமா, காலிமுகத்திடலிலுள்ள சனாதிபதி அலுவலகமா,காலி நெடுஞ்சாலையிலுள்ள இந்தியத் தூதரகமா எது ஆகக்கூடிய தரம் வாய்ந்தது என்று கேட்க வேண்டிய காலம் பிறந்துவிட்டது.

டிக்சிற்றின் வருகைக்கு முன்பு இந்தியத் தூதரகம் எங்கே இருக்கிறது. அதில் தூதராக யார் பணியாற்றுகிறார் போன்ற விடயங்கள் பற்றி ஈழத் தமிழர்கள் பெரிதாகச் சிந்தித்தது கிடையாது. அவருடைய நியமனம் ஈழத்தமிழர்களின் விளிப்பைத் தூண்டியதோடு இந்தியா சம்பந்தமான அச்சத்தையும் ஏற்படுத்தியது. டிக்சிற்றின் காலத்தில் இந்திய நேரடித் தலையீடு ஏற்பட்டது என்று சொல்வதைவிட இந்தியத் தூதரின் அழுத்தம் மிகக் கூடுதலாகக் காணப்பட்டது என்று சொல்வதுதான் மிகப் பொருத்தம். அதாவது தனது நாடு எதிர்பார்த்ததைவிடக் கூடுதலான முயற்சிகளை டிக்சிற் மேற்கொண்டார் என்று பொருள். முன்பு பதவி வகித்த இலங்கைக்கான இந்தியத் தூதர்களிலும் பார்க்க இவர் வித்தியாசமானவர். அதன் காரணமாக அவர்களுடைய பெயர்களைக் கூட நாம் மறந்துவிட்டோம். டிக்சிற் ஒரு அளவுகோள். முன்பு, பின்பு பதவி வகித்த இந்தியத் தூதர்களை அளவீடு செய்வதற்கு அவர் உதவுகிறார்.

இதற்கு விடையாக இந்தியத் தூதர் நிருபம் சென் நடத்திய ரணில் ஆட்சிக் கலைப்பைச் சுட்டிக்காட்டலாம். 2002 முற்பகுதியில் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டபோது கொழும்பில் இந்தியத் தூதராக இருந்தவர் கோபாலகிருஷ்ணகாந்தி இராஜ கோபாலாச்சாரியர் மகள் லக்ஷ்மியும் மகாத்மா காந்தியின் மகனும் திருமணம் செய்து பெற்றெடுத்த புதல்வர்களில் ஒருவர் கோபி என்று அழைக்கப்படும் கோபாலகிருஷ்ண காந்தி ஆவார். தமிழ், குஜராத்தி, ஹிந்தி, ஆங்கிலம் ஆகியமொழிகளில் பாண்டித்தியம் பெற்ற இவர் சிறந்த இலக்கியவாதி. ஆனால் இந்திய அரசு மனங்கொண்ட சூழ்ச்சி, சதிபோன்றவற்றில் அவ்வளவு திறமை இல்லாதவர். இதன் காரணமாக இந்தியாவின் நோர்வே நாட்டிற்கான தூதராகப் பதவி வகித்த நிருபம்சென் இங்கு கொண்டுவரப்பட்டார். கோபால கிருஷ்ண காந்தி நோர்வேத் தூதராக அனுப்பப்பட்டார்.

நிருபம்சென் கொழும்புக்குப் புதியவரல்ல. இவர் இந்திய இராணுவப் படையெடுப்பு காலத்தில் 1988தொடக்கம் 1989 வரை உதவி இந்தியத்தூதராகக் கொழும்பில் இருந்தவர். டிக்சிற் அப்போது தூதராகப் பதவி வகித்தவர் என்பது தெரிந்ததே. இருவருக்கும் மனப்பொருத்தம் கிடையாத காரணத்தால் சதா முரண்பாடுகளும் முட்டிமோதல்களும் நடந்தன. அப்போது இந்தியாவின் நுழைவுக்கு எதிராக ஜே.வி.பி சிங்கள நாடு தழுவிய கிளர்ச்சி நடத்திய காலம். ஜே.வி.பி தலைமையோடு நிருபம் சென் இரகசியத்தொடர்புகளை வைத்திருந்தார். இதை டிக்சிற் விரும்பவில்லை. தொடர்பை நிறுத்தும்படி கட்டளை இட்டார். ஆனால் தொடர்புகள் நீடித்தன. ஜே.வி.பி கிளர்ச்சிகள் தோல்வி கண்டு றோகண விஜயவீர கொல்லப்பட்டபின் இப்போதைய தலைவர் சோமவன்ச அமரசிங்க நாட்டைவிட்டுத் தப்பி ஓடினார். இதற்கான உதவிகளை இந்தியத் தூதரகத்தினூடாக நிருபம்சென் செய்துகொடுத்தார். பிரேமதாசாவின் வலதுகரம் என்று போற்றப்படும் பாதாள உலகத் தலைவரும் அமைச்சருமாகிய சிறிசேன கூரே சோமவன்ச அமரசிங்கவின் திருமண உறவுமூலமான மைத்துனராவார். நிருபம்சென் ஒரே கல்லில் இரு மாங்காய் வீழ்த்தினார். யு.என்.பியின் தலைமைப் பீடத்திற்குள் நுழைந்ததோடு ஜே.வி.பியின் நல்லுறவை இந்தியாவுக்குப் பெற்றுக்கொடுத்தார். சந்திரிகாவின் அழைப்பை ஏற்று சிறிலங்காவுக்குத் திரும்பியபின் பத்திரிகையாளர் மாநாடு நடத்திய சோமவன்ச அமரசிங்க, தான் தப்பியோடுவதற்கு இந்தியத் தூதரகம் உதவியதை ஒத்துக் கொண்டார்.

கடும் இந்திய எதிர்ப்பு அமைப்பாக ஆரம்பித்த ஜே.வி.பி இன்று இந்தியாவின் சொற்படி நடக்கும் அமைப்பாக மாறியதற்கு நிருபம்சென் பாரிய பங்களிப்புச் செய்துள்ளார். அத்தோடு அண்மைக்கால நிகழ்வுகளில் மிகமுக்கியமானதாகக் கருதப்படும் ரணில் ஆட்சிக கவிழ்ப்பிலும் அவர் முக்கிய பங்களிப்புச் செய்தார். நவம்பர் 04,2003 இல் ரணில் ஆட்சிக்கவிழ்ப்பின் முதல் கட்ட நடவடிக்கையாக மூன்று முக்கிய அமைச்சுக்களை சனாதிபதியின் அதிகாரங்களைப் பயன்படுத்திச் சந்திரிகா தனது பொறுப்பில் எடுத்தார். இதில் பாதுகாப்பு அமைச்சும் அடங்கும். இதன் பின் பதிலடி நடவடிக்கையாக சந்திரிகாவைப் பதவி இறக்கும் சட்ட நடவடிக்கை எடுக்கும் முயற்சிகளை ரணில் ஆரம்பித்தார்.

'இம்பீச்மென்ற்' (IMPEACH MENT) எனப்படும் அத்தகைய சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதைத் தடுப்பதில் நிருபம்சென் வெற்றி கண்டார். ரணிலிடம் சென்ற அவர் 'அவசரப்படாதீர்கள் உங்கள் ஆட்சி அதிகாரங்களுக்கு ஆபத்து வராமல் இந்தியா பார்த்துக்கொள்ளும். சந்திரிகாவை வழிக்குக் கொண்டுவர எம்மால் முடியும், கொஞ்சம் பொறுமையாக இருங்கள்' என்று கூறி அவருடைய கையைக் கட்டிப்போட்டார். ரணில் நன்றாக ஏமாற்றப்பட்டார், சந்திரிகாவும் நிருபம் சென்னும் சேர்ந்து விளையாடுகிறார்கள் என்பது அவருக்குத் தெரியாமல் போய்விட்டது. ஜெயவர்த்தனாவின் அச்சில் வார்க்கப்பட்ட ரணில் புலிகளை ஓரங்கட்டுவதில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின், முனைப்பாக ஈடுபட்டார். இந்தியா உட்பட பல உலக நாடுகளுடன் இணைந்து புலிகளுக்கு எதிராக ஒரு பாதுகாப்பு வலை பின்னுவதில் ஈடுபட்ட அவருக்குத் தனக்கு எதிராக உள்நாட்டில் ஒரு சதிவலை பின்னப்படுவதை அறியாமல் போய்விட்டது. பெரும்பான்மை இருந்தும் ஆட்சிக் கவிழ்ப்புக்கான தார்மீகப்பலத்தை நிருபம்சென் வழங்கினார். தனது ஜே.வி.பி மீதான செல்வாக்கை சந்திரிகாவுக்கு ஆதரவு திரட்ட பயன்படுத்தினார். அத்தோடு யு.என்.பி யிலிருந்து தொண்டமானை பிரித்தெடுக்கும் சதிக்கும் அவரே

**-அன்பரசு-**

மூலகாரணம் ஆவார். இந்திய உளவுத் துறையின் சூரிய நாராயணனின் பிடியில் ஆறுமுகம் தொண்டமான் சிக்கிப் பலகாலமாகிறது. தொண்டமான் சுயமாகச் சிந்திக்கும் மனிதனல்ல, சுயநலமே உருவான தலையாட்டிப் பொம்மைதான்.

ரணில் ஆட்சிக் கவிழ்ப்போடு புரிந்துணர்வு உடன்படிக்கை கிட்டத்தட்ட செயலிழந்துவிட்டதெனலாம். அதை முற்றாகத் தூக்கி எறிய சிறிலங்காவால் முடியாது. அது சர்வதேச உடன்படிக்கை. நோர்வேயும் ஸ்கன்டிநேவிய நாடுகள் ஐந்தும் சம்பந்தப்பட்டதானபடியால் இந்தியா எவ்வளவு விரும்பினாலும் அதைக் கிழித்தெறிவது இயலாத காரியம். ஆனால் அதை பலமிழக்கச் செய்யலாம், அதைத்தான் இந்தியா இப்போது செய்துகொண்டிருக்கிறது. இதற்கு சந்திரிகா கை பலமிழக்காமல் இருக்கவேண்டும். பௌத்த சிங்கள பேரினவாதக் கட்சியான ஜே.வி.பி அரசிலிருந்து விலகினாலும் அரசைக் கவிழ்க்க முயலக் கூடாது என்ற நிபந்தனையை இந்தியா அதன் மீது விதித்துள்ளது. மிகவிரைவில் பொதுத்தேர்தல் ஒன்று சிறிலங்காவில் வருவதை இந்தியா விரும்பவில்லை. யு.என்.பி மீண்டும் அதிகப்பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்துவிடலாம் என்ற பயம் இந்தியாவுக்கு உண்டு. அதே சமயத்தில் ஜே.வி.பி யும் ஒரு கேந்திர சக்தியாக இத்தீவின் அரசியலில் நீடிக்க வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது. சந்திரிகாவின் கட்சி ஆட்சியில் தொடரவேண்டும் என்பதே இந்தியாவின் தற்போதைய நிலைப்பாடு.

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் மேடையேறக்கூடாது, அது சம்பந்தமான பேச்சுக்கள் நடைபெறக்கூடாது என்பதுதான் இந்தியாவின் உடனடி இலக்கு. இதற்காகவே நிருபம்சென் ஆட்சிக் கலைப்பைக் கனகச்சிதமாக நிறைவேற்றினார். பொதுக்கட்டமைப்பு விவகாரத்திலும் இந்தியா தனது தலையை நுழைத்தது நினைவிருக்கலாம். தனியாக விடுதலைப் புலிகளோடு பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் செய்யவேண்டாம், எல்லாத் தமிழ்கட்சிகளையும் பங்காளிகளாக பொதுக்கட்டமைப்பில் இணையுங்கள் என்பது இந்தியாவின் பரிந்துரை- புலிகளின் சர்வதேச ஆதரவுத்தளம் பலமாக இருப்பதால் பரிந்துரை எடுபடவில்லை. இப்போது இலங்கை- இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றிப் பேசப்படுகிறது. இரு நாடுகளும் தமது தனித்தனி இலாபத்திற்காக பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றிச் சிந்திக்கின்றன. புலிகளுக்கு எதிரான கவசமாக இந்தியாவைப் பயன்படுத்த இலங்கை அரசு விரும்புகிறது. மீண்டுமொரு நேரடி மோதலில் ஈடுபட இந்தியா தயக்கம் காட்டுவதுபோல் தெரிகிறது. ஆனால் பரஸ்பரப்பாதுகாப்பு ஒப்பந்தம். என்ற அடிப்படையில் இரு இலக்குகளை அடைய இந்தியா விரும்புகிறது. சேது சமுத்திரத் திட்டம் அரங்கேறினால் அதனுடைய முழுப்பாதுகாப்பிற்கு இக் கடற்பாதையின் இருபக்கப்பாதுகாப்பும் இந்தியாவின் பக்கம் இருக்க வேண்டும் என்பது இந்தியத் திட்டமிடல் அதிகாரிகளின் தீர்மானம். இதற்கு யாழ்குடாநாட்டின் கரையோரமும் பலாலி விமானத்தளமும் இந்தியக் கட்டுப்பாட்டில் வரவேண்டும். வெளிநாட்டுச்சக்திகள் இத்தீவில் கால்பதிக்காமல் தடுக்கவேண்டும், இது இரண்டாவது இலக்கு.

இந்த இலக்குகளை அடைய முடியுமானால் இந்தியா தயங்காமல் இலங்கை அரசுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்யும். ஆனால் 1987இல் புலிகளின் சம்மதம் பெறாமல் ஒப்பந்தம் செய்து பெற்ற அனுபவத்தை இந்தியா இன்னும் மறக்கவில்லை. இந்தியப் படைகளின் வருகைக்கு முன்னோடி நிகழ்ச்சியாக அமைந்த வானத்தில் இருந்து பருப்பும் பூசணிக்காயும் போடும் விளையாட்டை நடத்திய அதே நட்வர் சிங் இப்போது இந்திய வெளியுறவு அமைச்சராகப் பதவி வகிக்கிறார். அண்மையில் கொழும்பு வந்தபோது, இதோ பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நேரம் நெருங்கிவிட்டது என்று பண்டாரவெடி வைத்துவிட்டுப் போய்விட்டார். இலங்கை எதிர்நோக்கும் புலிகளின் விமானப்பலம் சம்பந்தமான விவகாரத்தில் இந்தியா உதவி வழங்கத் தயாராகி வருகிறது போல் தெரிகிறது. என்ன நடக்கப்போகிறது என்று அனுமானிக்க வேண்டுமாயின் இந்தியத் தூதுவர் எப்படிப்பட்டவர் என்பதை அவதானிக்கவேண்டும். என்ன சொல்ல வருகிறோம் என்றால் இப்போது பதவியில் இருக்கும் தூதுவரான நிருபமாமேனன்ராவ் இவ்வுயர் பதவிக்குப் புதியவர். ஒரு டிக்சிற் அல்லது நிருபம்சென் வந்தால் மாத்திரமே ஏதேனும் செப்படி வித்தை செய்து பார்க்கலாம். அப்படி இலகுவாகக் காரியம் சாதிக்கமுடியுமா என்றால் காலம் மாறிவிட்டது என்றாலும் இந்தியா மாறமாட்டாது என்பதுதான் பதில். இந்த அடிப்படையில் மிக விரைவில் ஒரு இந்தியத் தூதுவர் மாற்றத்தை நாம் எதிர் பார்க்கலாம்.

<>

ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 24. 06 . 2005

மின் அஞ்சல : weekly @ eezhanatham.com


## பயனற்ற பயணங்களாக...!

பயனெதுவும் அற்ற பயணங்களை சமாதானமுயற்சியின் அனுசரணையாளர்களாக செயற்படும் நோர்வேயின் பிரதிநிதிகள் மேற்கொள்வதாகவே கொள்ளவேண்டி உள்ளது.

இலங்கைக்கு நான்கு நாள் பயணம் ஒன்றை மேற்கொண்டுவந்திருக்கும் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் அவர் களின் இந்தமுறை பயணமும் பயனெதனையும் தருவதாக இல்லை. மிகச்சாதாரண வாக்குறுதிகளை மட்டும் கொழும்புக்கும் கிளிநொச்சிக்கும் காவிச்செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலையையே சனாதிபதி சந்திரிகா ஹெல்கேசன் குழுவினருக்கு இந்தமுறையும் அளித்துள்ளார்.

நோர்வேயின் சமாதான அனுசரணையாளர்கள் ஒஸ்லோவில் இருந்து கொழும்புக்கு பயணங்களை நிர்ணயிக்கும்போது பயணத்தில் பங்குகொள்ளும் அதிகாரமட்டத்தை பொறுத்து இலங்கையிலும் சர்வதேச மட்டத்திலும் எதிர்பார்க்கைகளும், சலசலப்புக் களும் ஏற்படுவதுண்டு. ஆனால் அவர்களின் ஒவ்வொரு பயணங்களும் பயனெதுவும் இன்றியே போயின.

இந்த நிலையில் நோர்வே அனுசரணையாளர்களின் இந்தப்பயணத்தின்போது சனாதிபதி சந்திரிகாவை சிறையிட்ட சிறைக்கம்பிகளைப்போல் இருந்த ஜே.வி.பியினரை அரசிலிருந்து அகற்றிவிட்ட ஒரு புறச்சூழலில் அமைந்ததால் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்படும் என்ற எதிர்பார்க்கை மேலோங்கியிருந்தது.

ஆனால், எல்லா நம்பிக்கைகளும் நம்பிக்கையீனங்களாகமாற ஹெல்கேசன் பயணம் உப்புச்சப்பற்ற பயணமாக அமைந்துவிட்டது.

இந்தநிலையில், வழமைபோலவே ஹெல்கேசன் அவர்கள் அரசிற்கும் நோகாமல் புலிகளுக்கும் நோகாமல் அனுசரணையாளர்களின் பேச்சு இப்படித்தான் அமையும் என்பதுபோல ஊடகவியலாளர்களிடம் பேசிவிட்டுச் செல்கிறார்.

ஆனால் ஹெல்கேசனாக இருந்தால் என்ன? நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சனாக இருந்தால் என்ன அல்லது எரிக்சொல்ஹெய்மாக இருந்தால் என்ன? எல்லோரும் ஒரேவிதமாக பேசிவிட்டு செல்கிறார்கள்.

அதாவது, எமது பயணம் நல்ல பயனுள்ளதாக அமைந்தது. நல்ல செய்திகளைக் கொண்டுசெல்கிறோம். முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நம்பிக்கை உருவாகியுள்ளது. என்ற இராஜதந்திர வார்த்தைப்பிரயோகங்களை வழங்கிவிட்டு அதற்குமேல் எதுவும் சொல்லமுடியாது செய்யவும்முடியாது என்பதுபோல செல்கிறார்கள்.

ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை சமாதான அனுசரணையாளர்கள் எதில் நம்பிக்கைகொள்கிறார்கள் என்பதிலும் அவர்கள் எதில் முன்னேற்றம் கொள்கிறார்கள் என்பதிலும் தெளிவின்றி குழப்பமடைபவர்களாக உள்ளனர்.

ஏனெனில், அவர்கள் நம்பிக்கைகொள்வது எதுவும் நடைமுறைக்கு வருவதாகவும் இல்லை. முன்னேற்றம் கண்டதெதுவும் கைச்சாத்திடப்படுவதாகவும் இல்லை. இதனால் அனுசரணையாளர்கள் கூறுவதை அப்படியே எதிர்வினையாக நோக்கும் ஒரு நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்படுகிறார்கள்.

அதனால், தமிழ் மக்கள் நோர்வே அனுசரணையாளர்கள் மீதே நம்பிக்கையீனம் கொள்ளும் அளவுக்கு நிலைமை மாறிக்கொண்டிருக்கிறது.

இதனை இந்தமுறை கிளிநொச்சிக்கு விஜயம் செய்தபோது நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் தலைமையிலான குழுவினர் உணர்ந்திருப்பர்.

அதாவது தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களை ஈழப்போரைத்தொடங்குமாறு மகஜர்களை தமிழ் மக்கள் அனுப்பிக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் அந்த மக்களே சமாதான ஏற்பாட்டாளர்களை சந்தித்து தமது மகஜர்களை கையளித்ததையும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் இந்த விடயங்களையும் நோர்வே அனுசரணையாளர்களுக்கு தெளிவுபடுத்தியிருந்தமையும் முக்கியமானதாகும். ஆயினும் எது எப்படியோ இந்தமுறையும் அனுசரணையாளர்களின் பயணம் ஒரு பயனற்ற பயணமாகவே அமைந்தது.

# சந்திரிகா எதைச்செய்வார்? எதைச் செய்யமாட்டார்?

**சிறி. இந்திரகுமார்**

அரசைவிட்டு ஜே.வி.பி வெளியேறியாகிவிட்டது. இப்போது அரசு பலம் இல்லாத ஒரு சிறுபான்மை அரசாக ஆட்சியில் இருக்கவேண்டியதாகியும்விட்டது.

ஆயினும், நிறைவேற்று அதிகாரம்கொண்ட சனாதிபதியாக சந்திரிகா இருப்பதால் அரசு அச்சங்கொண்டாலும் அலட்டிக்கொள்வதாக இல்லை.

இந்தநிலையில் சுதந்திரக்கட்சிக்காரர்கள் ஐக்கியதேசியக் கட்சிக்கு ஒரு தேர்தல் அவசியமில்லை எனவும் அதைப்போன்று சுதந்திரக்கட்சிக்கு ஒரு தேர்தல் தேவையில்லையென்றும் அறிக்கைகளை விட்டபடி



இருக்கிறார்கள்.

இது ஏற்கனவே பல தேர்தல்களைச் சந்தித்துவிட்ட நிலையில் இன்னுமொரு சனாதிபதித் தேர்தலை எதிர்நோக்கியபடியிருக்கின்ற சூழலில் ஒரு நாடாளுமன்றத் தேர்தலை அவர்கள் விரும்பவில்லை என்பது உண்மைதான்.

ஏனென்றால் சனாதிபதிப்பதவியைக் கைப்பற்றாதவரை ஒரு நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திப்பதில் அதிக பயனை இந்தக் கட்சிகளுக்குக் கொடுக்கப்போவதில்லை என்பதனை ஏற்கனவே ஐக்கிய தேசிக்கட்சிக்கு சந்திரிகா உணர்த்தியிருக்கிறார்.

இது ஒருபுறமிருக்க, கட்சிகளுடைய பணபலமும் தளபலமும் இன்னமும் முழுமையாக மிகப்பெரும் தேர்தல்கள் இரண்டை சந்திக்கும் நிலைக்கு இல்லையென்பதே உண்மை.

இதிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கியதேசியக்கட்சியும் நாட்டின் தேசிய கட்சிகள் என்றவகையில் அந்தக்கட்சிகள் வேண்டுமானால் இந்தத்தேர்தல்களைச் சந்தித்தாலும் சமாளித்துவிடலாம் என்கிற ஒருநிலை இருக்கிறது.

ஆனால் ஏனைய இதரக் கட்சிகள் குறிப்பாக ஜே.வி.பி உட்பட எல்லாக்கட்சிகளுக்குமே இது ஒரு சோதனைதான்.

இதனால்தான் சுதந்திரக்கட்சிக்காரர்கள் தங்களைச் யாரும் சீண்டாதவரை தாங்கள் ஒரு தேர்தலுக்கும் போகமாட்டோம் என்பதை இந்தக் கட்சிகளுக்கு உணர்த்தத் தலைப்படுகின்றார்கள்.

இந்த நிலையில் சனாதிபதி சந்திரிகா எதனைச் செய்யப்போகிறார், எதனைச்செய்யமாட்டார் என்கிற நிலை நாட்டில் தொடர்கிறது.

சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்தவரை எதனைச் செய்யப் போகிறார் என்பதைவிட, எதனைச் செய்யமாட்டார் என்பதைவிட, அவர் எதனைச் செய்தாலும் அது சுதந்திரக் கட்சி அடுத்ததேர்தலை அதிக நெருக்கடிகளின்றியும் அதிக ஆபத்துக்கள் இன்றியும் சந்திக்கும் வகையிலேயே திட்டமிடுவார், செயற்படுத்துவார் என்று நம்பலாம்.

இந்தவகையில் ஐக்கிய தேசியக்கட்சியை அடுத்த சனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை நியமித்துவிட்ட சூழலில் அதற்கேற்ற வகையில் தன்னுடைய தொகுதிகளில் கட்சி அமைப்பாளர்களையும் ஆதரவாளர்களையும் ஒன்றுதிரட்டுவதிலும் ஒருமுகப்படுத்துவதிலும் எப்பொழுதோ கவனம் செலுத்தத்தொடங்கிவிட்டது.

ஜே.வி.பி. கூட தன்னுடைய தொகுதிகளில் இதனை செய்யத் தொடங்கியுள்ளது. ஆனால் சுதந்திரக்கட்சியும் சனாதிபதி சந்திரிகாவும் இந்த இரண்டு கட்சிகளைப் போன்று தன்னுடைய வேலைத்திட்டங்களை முடுக்கிவிட்டதாக



நகர்கிறது.

இந்தநிலையில் நாம் ஏற்கனவே பார்த்த சந்திரிகா எதைச்செய்வார் என்பதையும் சந்திரிகா எதைச்செய்யமாட்டார் என்பதையும் சந்திரிகா எதைச்செய்தாலும் அது நிச்சயம் அடுத்ததேர்தலை ஒரு பாதகமில்லாது சந்திக்கும் வகையிலானதாக இருக்கும் எனப் பார்த்ததுபோலவே சந்திரிகாவின் நகர்வுகள் இப்போது இருக்கின்றன.

ஏனென்றால் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடும் ஏதுநிலைகள் எல்லாம் இருந்தபோதிலும் அவர் கைச்சாத்திடுவதாக இல்லை.

ஆகவே இந்தப் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடல் இறுதி இல்லை.

இதற்குக் காரணம் சுதந்திரக் கட்சியின் சார்பில் அடுத்த சனாதிபதித் தேர்தல் வேட்பாளராக மகிந்தராஜபக்ஷவை நியமிப்பதா? அனுராபண்டாரநாயக்கவை நியமிப்பதா? என்ற குழப்பம் ஒருபுறம் நீடிக்க ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொதுக்கட்டமைப்பு விவகாரம் கைச்சாத்திடப்படாவிட்டாலும் இன்னமும் அது ஒரு கொதிநிலையில் இருப்பதே.

இந்தப்பொதுக்கட்டமைப்பு விவகாரத்தைப்பொறுத்தவரையில் கைச்சாத்திட்டாலும் கைச்சாத்திடாவிட்டாலும் சனாதிபதி சந்திரிகா வெளியில் பலசக்திகளை திருப்திப்படுத்தவேண்டியவராகவே உள்ளார்.

இதனால்தான் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்படும் பட்சத்தில் அது மகாநாயக்கர்களின் பார்வைக்குக்கொண்டுவரப்படும் எனவும் பொதுக்கட்டமைப்பினால் அதிக நன்மையை சிங்கள மக்களும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வாக்குறுதிகளையும் பிரசாரங்களையும் சனாதிபதி சந்திரிகா செய்ய வேண்டியவராகவுள்ளார்.

இதற்கிடையில் சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடப்படும் எனவும் அது விரைவில் நடைமுறைக்கு வரும் எனவும் நுனிக்கதிரையில் இருந்து ஒரு திரைப்படத்தின் இறுதிக்காட்சியைப்பார்க்கும் ரசிகர்களைப்போல தமிழ் மக்களையும் சிங்களமக்களையும் சர்வதேச சமூகத்தையும் ஏன் சிங்களக் கட்சிகளையும்கூட வைத்திருக்கிறார்.

ஆனால் கட்சியின் முடிவுதான் எதுவென்று தெரியாமல் குழம்பியபடி மக்களின் வாழ்க்கையோட்டம்

தொடர்பாக சந்திரிகாவுக்குள் ஒரு கணக்கிருப்பதுபோலவே தெரிகிறது.

அது ஒன்றில் பொதுக்கட்டமைப்பை கைச்சாத்திடாமல் அடுத்த தேர்தலுக்குக்கிட்டவாகக் காலத்தை இழுத்து, பொதுக்கட்டமைப்பைக் கைச்சாத்திடாமலே மக்களைச் சந்திப்பதன்மூலம் ஜே.வி.பி, ஹெலஉறுமய போன்றவர்கள் செய்துவரும் பிரசாரத்தை முறியடிப்பதோடு சுதந்திரக்கட்சி ஒரு பலம் பெறும் நிலைக்குக்கொண்டுசெல்ல முயல்வது.

இரண்டாவது பொதுக்கட்டமைப்பைக் கைச்சாத்திடும் பட்சத்தில் அதற்கிடையில் பொதுக்கட்டமைப்பு தொடர்பாக விமர்சனங்களை வளரவிட்டு கட்சிக்குள்ளேயும் கட்சிக்கு வெளியேயும் சுதந்திரக்கட்சி தொடர்பாக ஒரு பலவீனமான நிலையைத்தோற்றுவித்துவிட்டு அதன்பிறகு சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளராக மகிந்தராஜபக்ஷவை நியமித்து தேர்தலைச் சந்திக்கவைத்து அவரைத் தோற்கடிக்கவைத்து மீண்டும் சுதந்திரக்கட்சியை பண்டாரநாயக்க குடும்பத்துக்குள்ளேயே கொண்டுவர ஒரு கணக்குப்போடுவது.

இதனால்தான் சனாதிபதி சந்திரிகா எதைச்செய்தாலும் அது சுதந்திரக்கட்சியின் நன்மை என்ற வகையிலும் பண்டாரநாயக்கா பரம்பரை என்றவகையிலுமே மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்குமே ஒளிய இது ஒருபோதும் மக்கள் நலன் கருதியதாகவோ நாட்டின் நலன் கருதியதாகவோ நிச்சயமாக இருக்கப்போவதில்லை.

யாழ்ப்பாணம்



# நேர்நோக்கு

## ஒரே குறி!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உடைவானது எதிர்பார்த்தபடியே நிகழ்ந்து முடிந்திருக்கின்றது. என்று கூட்டு ஏற்பட்டதோ அன்றே இந்தக் கூட்டு உடையும் - அதாவது நீடிக்கப்போவதில்லை என்பது வெளிப்படையானதாகவே தெரிந்தது.

இந்தக் கூட்டும் 14 மாதகால ஆட்சியும் இக்காலத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - ஜே.வி.பி தலைவர்கள் நடந்துகொண்ட விதமும் அவர்கள் எத்தகைய ஏமாற்றுப்பேர் வழிகள் என்பதனை எடுத்துக் காட்டின.

இவர்கள் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள எவ்வளவு திருகுதாளங்களைச் செய்வார்கள், பின்னர் எத்தகைய ஒப்பந்த மீறல்களைச் செய்வார்கள் பிறகு இந்த ஒப்பந்தத்தை எவ்வாறு தமக்குச் சாதகமான நிலையில் உடைத்துக் கொள்வார்கள் என்பதையெல்லாம் இதன் மூலம் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இன்றைய சூழலில் ஆட்சிபீடம் ஏறும் எவரும் இனப்பிரச்சினை தொடர்பான தீர்க்கமான ஒரு நடவடிக்கைக்குத் தயாரான நிலையிலேயே இருக்கவேண்டும் என்பது வெளிப்படை. உண்மையில் 1994 இல் ஆட்சிபீடம் ஏறியபோதே சமாதான நடைமுறைகள்மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான தெளிவான நடைமுறைகளுடன் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இருந்திருக்கவேண்டும்.

ஆனால் அவ்வாறு வெளியே கூறிக்கொண்டாலும் ஐக்கியதேசியக் கட்சி கைக்கொண்ட யுத்த தந்திரோபாயம் தவறானது என்றும் வேகமான தொடர்நடவடிக்கைகள் மூலம் புலிகளை அழித்து தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டத்தை ஒடுக்கி விடமுடியும் என்ற எடுகோளின் அடிப்படையிலுமே சமாதானப் புறா வேடத்துடன் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவிக்கு வந்தார்.

அதற்கேற்ப புலிகளின் பலமான கோட்டைகள் என கருதியவற்றின் மீது பெருந்தொகைச் செலவீட்டுடன் "சமாதானத்துக்கான யுத்தத்தை" அவர் மேற்கொண்டார்.

ஆனால் எதிர்த்தரப்பை அவர் சரியாக மதிப்பிடாததன் விளைவை அவர் தனது முதலாவது பதவிக்காலத்தின் இறுதிப் பகுதியாகிய 1998 இறுதிப் பகுதியில் முழுமையாக அனுபவிக்கவேண்டியிருந்தது.

அதேவேளை சமாதானத்துக்கெனக் கூறிக்கொண்டு அவர் தனது பதவிக்காலத்தின் முற்பகுதியில் எடுத்த நடவடிக்கைகள் முழுவதும் உலகை ஏமாற்றி தான் தொடுக்கப்போகும் யுத்தத்திற்கு நியாயம் கற்பிக்கும் வகையிலேயே அமைந்திருந்தன.

இரண்டாவது ஆட்சிக்காலத்தின் தொடக்கத்தில் இந்த யுத்தம் அவரால் தொடரப்படமுடியாததாகியது. அதாவது அக்கினிச் சுவாலை கட்டுநாயக்க விமானப்படைத்தளம் என்பவற்றின் மீதான தாக்குதலின் பின்னர் அரசியல், இராணுவ பொருளாதார நிலை ஒருதேக்க நிலைக்கும், அபாய நிலைக்கும் தள்ளப்பட ஐ.தே. கட்சியின் சமாதானக் கோஷம் சிங்கள மக்கள் மத்தியிலேயே எடுபடத் தொடங்கியது.

இந்த நிலையில்தான் 2001 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் பொதுசன ஐக்கிய முன்னணிக்குள் குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டு அதிலிருந்து எஸ்.பி.திசாநாயக்க, ஜீ.எல். பீரிஸ் உட்பட எட்டுப்பேர் வெளியேறினர். இத னால் ஏற்பட்ட உறுதியற்ற நாடாளு மன்றப் பலம் ஜே.வி.பியுடனான நல்லிணக்க உடன்பாடொன்றிற்கு பொதுசன ஐக்கிய முன்னணியைத் தள்ளியது.

இதன்மூலம் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் இணைந்து கொள்ளாவிட்டாலும் வெளியிலிருந்து கொண்டு அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுக்க ஜே.வி.பி முன்வந்தது. ஆனால் அந்த ஆதரவு ஒரு சில மாதங்கள் மட்டுமே நீடித்தது. பின்னர் நாடாளு மன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலுக்கு செல்ல வேண்டிய நிலை சனாதிபதி சந்திரிகாவுக்கு ஏற்பட் டது.

ஆனால் அந்த ஒருசில மாதங்களிலும் ஜே.வி.பி எவ்வாறு நடந்து கொண்டது என்று பார்த்தால் கடந்த 14 மாதங்களிலும் எவ்வாறு நடந்து கொண்டதோ அதற்கு ஒரு முன்மாதிரி போன்றே நடந்து கொண்டது எனலாம். அதேபோலத் தான் சனாதிபதி சன்திரிகாவின் செயற்பாட்டையும் கூறலாம்.



உதாரணமாக 25 பேர் கொண்ட அமைச்சரவைதான் அமைக்கப்படவேண்டும் என்ற உடன்பாடு ஏற்பட்டிருந்தது. ஆனால் 26 பேர் மந்திரி சபையில் இடம்பெற்றபோது மேலதிகமாக உள்ள ஒருவரைப் பதவியிலிருந்து விலக்கவேண்டும் என ஜே.வி.பி முரண்பிடித்தது.

அதற்குப்பதிலாக சனாதிபதி சந்திரிகாவோ தன்னைவிட்டால் மொத்தம் 25 பேர்தான் அமைச்சரவையிலுள்ளனர். எனவே ஒருவர் பதவி விலகத்தேவையில்லை என வாதிட்டார்.

அதேபோலத்தான் ஐந்து சுயாதீன ஆணைக் குழுக்களை அமைக்கும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதாக ஜே.வி.பியிடம் ஒப்புக்கொண்ட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவற்றில் ஊடகத்துறையைக் கைவிட்டார். எனினும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட நான்கில் ஒன்று கூட இன்று வரை சரிவர இயங்கவில்லை.

எனவே ஒப்பந்தங்களும் நிறைவேற்றல்களும்,மீறல்களும் முறிதலும் சிறிலங்கா அரசியல் வாதிகளிடையே சர்வசாதாரணமானவையாகும்.

இவ்வாறிருக்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உருவாக்கப்பட்டபோது செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்போது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் ஓர் இணக்கப்பாடு ஏற்பட்டிருத்தல்வேண்டும். அதாவது சமாதான வழியில் தீர்வுகாண்பதா அல்லது எந்தவிதமான அழுத்தத்திற்கும் பணிந்து போகாமல் யுத்தமூலம் தீர்வு காண்பதா? என்பது குறித்து தீர்க்கமான முடிவின்றி இரண்டு கட்சிகளும் கூட்டுச் சேர்ந்திருத்தல் கூடாது.

ஆனால் ஜே.வி.பியோ இனவாதத்திற்குத் தலைமை தாங்கும் நோக்கத்தில் யுத்தத்தின்மூலம் தீர்வை விரும்புகிறது. ஆனால் சமாதான நடைமுறை ஒன்று இருப்பது போலக் காட்டுவதன் மூலம் நாட்டை நிர்வகிக்கக்கூடிய நிதியை பெறமுடியும் என்ற கருத்துடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி இருக்கிறது. எனவே எரியும் பிரச்சினையிலேயே முரண்பாடு இருக்கையில் பிளவு விரைவில் ஏற்பட்டதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

அத்தோடு கடந்த காலத்தில் இரு தரப்பும் முன்னர் குறிப்பிட்டதுபோன்று கிடைத்த அனுபவத்தைக் கூட பொருட்படுத்தாது ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியைக் கவிழ்ப்பது என்ற ஒரே நோக்கத்துடன் செய்த ஒப்பந்தம் நீடிக்க முடியாது முறிந்துவிட்டது.

இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைவை ஆராய்வது என்ற நிலையில் ஐ.தே.கட்சி இருந்தபோது அந்த ஆட்சி கவிழ்க்கப்பட்டது. இப்பொழுது சுனாமி நிவாரணப் பொதுக்கட்டமைப்பு தொடர்பில் இந்த ஆட்சி ஈடாட்டம் கண்டுள்ளது.

இரண்டு விடயங்களிலும் ஆட்சியை பணயம் வைத்து நாங்கள் இனப்பிரச்சினைக்குச் சமாதான தீர்வு காண முயற்சிகளை மேற்கொண்டதாக பெரிய கட்சிகள் இரண்டும் பெருமைப்பட்டுக்கொள்ளலாம். இனவாதத்தின் தலைமையைத் தாம் பெற்றுக்கொண்டுவிட்டதாக ஜே.வி.பி நினைக்கலாம். ஆனால் ஒட்டு மொத்தத்தில் மூன்று கட்சிகளுமே இனப்பிரச்சினைக்கு நீதியான நேர்மையான தீர்வு ஒன்றை அடையும் நோக்கம் கொண்டவையல்ல.

இப்படியிருக்க இவை இறையாண்மை ஒருமைப்பாடு காப்பாற்றுதல் என்று கூறிக்கொண்டிருப்பினும் அவை சிங்கள மக்களை ஏமாற்றும் சொற்கள் மட்டுமே.

ஏனெனில் இவ்வாறு சிங்கள மக்களை ஏமாற்றக் கூறிக்கொண்டாலும் அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளிலேயே இவை மூன்றும் ஈடுபட்டிருக்கின்றன. பதவி வெறியும் சுயநலனும் கொண்ட இக்கட்சிகள் யாதார்த்தத்தில் என்ன செய்யவேண்டும் என்பது குறித்து சிந்திப்பவையாகவோ செயற்படுபவையாகவோ இல்லை.

பதவியைக் கைப்பற்ற அரசியலமைப்பு முதற்கொண்ட சகல விடயங்களையும் தமக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ள முயல்வதுடன் அவற்றிலுள்ள சந்து பொந்துகளினூடாகப் புகுந்து அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதே இக் கட்சிகளின் குறியாகும்.

**வேலவன்**

# அரச கட்டுப்பாட்டு பகுதியில் இருட்டில் தள்ளப்படும் சிறுவர்கள்

கடந்த இருபது வருடப்போரினால் தமிழர் தாயகத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்கள் தொடர்பான வேலைத்திட்டங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளினாலும் மற்றும் தமிழீழ கட்டமைப்பின் கீழ் செயற்படுகின்ற சில தொண்டர் நிறுவனங்களினாலும் மிகத்துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழர் தாயகத்தில் கடந்த கால சிறிலங்கா அரசின் யுத்தம் காரணமாக சிறுவர்களும் பெண்களுமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். பாடசாலைகள் அழிக்கப்பட்டுள்ளன. பெருமளவான சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். சிறுவர்களின் எதிர்காலமே சூனியமயமாக்கப்பட்ட நிலையில்தான் தற்பொழுது தமிழீழவிடுதலைப்புலிகள் தலைமையும் அதன் நிர்வாகக்கட்டமைப்புகளும் சிறுவர்கள் நலன்களில் அதி தீவிர அக்கறை எடுத்து வருகின்றது.

அதாவது பெற்றோர்களையும் உறவினர்களையும் இழந்த பல்லாயிரக் கணக்கான சிறுவர்கள் இனங்காணப்பட்டு அவர்களை அரவணைத்து பாதுகாத்து வளர்த்தெடுக்கப்படுகின்றதென்றவிடயம் இன்று சகலரும் அறிந்த ஒரு விடயமாகும். பல்வேறு மனிதாபிமானப் பணிகளை முன்னெடுத்து வருகின்ற விடுதலைப்புலிகளின் கீழ் உள்ள கட்டமைப்புக்கள் சிறுவர்களின் நலன்களில் அதி கூடிய கவனமெடுத்து வருகின்றன.

கடந்த சனிக்கிழமை யுனிசெப் நிறைவேற்றுப்பணிப்பாளர் அன் மாக்கிரட் வெனிமன் தலைமையிலான குழுவினர் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் சந்தித்துக்கலந்துரையாடியபோது தமிழீழத் தாயகத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிகளில் சிறுவர்கள் எவ்வாறு பராமரிக்கப்பட்டு வருகின்றனர் என்பதை மிகத் தெளிவாக எடுத்துக்கூறியதை நிறை வேற்றுப்பணிப்பாளர் அதனை ஏற்றுக் கொண்டு பாராட்டியுள்ளார். இது அண்மைக் காலமாக தமிழீழத்திற்கு வருகின்ற சர்வதேச அமைப்புக் களும் அவற்றின் பிரதிநிதிகளும் இவ்வாறு பராமரிக்கப்படுகின்ற சிறுவர்களை பார்வையிட்டு பாராட்டிச்செல்கின்றனர்.



இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத சிங்கள சக்திகள் விடுதலைப்புலிகள் சிறுவர்களை படையில் சேர்த்துக் கொள்கின்றனர் என்ற குற்றச்சாட்டை அடிக்கடி முன்வைத்து உலக நாடுகளில் விடுதலைப்புலிகள் மீதான ஆதரவை முறியடிக்கத்தொடர்ந்து முனைந்து வருகின்றன.

தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் விடுதலைப் புலிகள் அமைப்பு யாரையாவது பலவந்தமாக படையில் சேர்த்துக் கொண்டதாக வரலாறு இல்லை. சிறுவர்கள் ஏன் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்பதற்கான காரணம் சிங்கள இராணுவம் சிறுவர்களைக் குறிவைத்து தாக்குதல்களை மேற்கொண்டபோதே. அதிலிருந்து மீள்வதற்கும் தம்மை அதில் இருந்து தற்காத்துக் கொள்வதற்குத்தான் ஆயுதம் ஏந்தினார்கள் என்பது உண்மை. இன்று நாளாந்தம் நாம் காண்கின்ற ஒரு விடயம் ஏராளமான சிறுவர்கள் குடும்பவறுமை, பொருளாதார நெருக்கடி அடிப்படைவசதிகள் இன்மை, இராணுவக் கெடுபிடி போன்ற காரணமாக விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைகின்றனர். இவர்களின் எதிர் காலத்தை கருத்தில் கொண்டு அவர்களை அவர்களது பெற்றோர்களிடம் மீள ஒப்படைக்கப்படுகின்றனர். பெற்றோர்களிடம் செல்ல மறுக்கின்ற சிறுவர்களை உரியமுறையில் உரிய துறை களில் வளர்த்தெடுக்கும் நோக்கில் இடைத்தங்கல் முகாம், தொழில்சார் பயிற்சிக் கூடங்கள், கற்கை நிலையங்கள் என உரு வாக்கப்பட்டு அதன் மூலம் அவர்கள் வளர்த் தெடுக்கப்படுகின்றனர். இதே போன்று வளர்த் தெடுக்கப்பட்டவர்கள் இன்று நாட்டின் நற்பிரஜை களாகவும் தமது குடும்பச் சுமைகளைத் தாங்குபவர் களாகவும் உள்ளனர் என் பதை மறுப்பதற்கு இல்லை. இன்று இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பெருமளவான சிறுவர்களின் வாழ்வு நிலை மிகவும் கேள்விக் குறியான நிலையில் மாறிச்செல்கின்றது. அதாவது இராணுவக் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில் ஏராளமான சிறுவர்கள் தெருவோரங்களில் பிச்சை எடுக்கின்ற நிலையும், பலாத் காரமாக சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுகின்ற மையும் சிறுவர்கள் கடத்தப்படுகின்றமையும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுதலும் அதிகரித்த வண்ணமுள்ளன. இவ்விடயத்தில் சிறுவர் உரிமை பேணுகின்ற அமைப்புக்களும் அரசும் பாராமுகமாக இருந்து வருகின்றமை வேதனைக்குரிய விடயமாகும்.

இன்று ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு ஆறுமாதங்கள் கடந்துள்ள நிலையில் தாய் தந்தை ஆகிய இருவரையும் இழந்த 995 சிறுவர்களினதும் தாயை அல்லது தந் தையை இழந்த 3409 சிறுவர்களின் எதிர்காலம் பற்றியும் ஏதும் கவனம் எடுக்கப்பட்டுள்ளதா? இது ஒருபுறமிருக்க ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு அதில் இருந்து உயிர் தப்பிப் பிழைத்த சிறுவர்களில் 125 இற்கு மேற்பட்ட சிறுவர்கள் சிறிலங்கா இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் கடத்தப்பட்டுள்ளார்கள். இவர்கள் தொடர்பான எந்த விசாரணையும் இதுவரை எடுத்துக்கொள்ளப்பட்டதாகவோ அல்லது அவர்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டதா கவே இல்லை. இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதி களில் சிறுவர்களின் நலன்கள் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப் படாதுள்ளது. இதனால் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் வாழுகின்ற சிறு வர்களின் எதிர்காலம் இருட்டில் தள்ளப்பட்டு வருகின்றன.

**சு.பாஸ்கரன்**

பூந்தோட்ட நலன்புரி நிலையத்தில்...

# இந்த முகாமை விட்டு முதலில் வெளியில போகவேணும்...

## வவுனியா பூந்தோட்ட நலன்புரிநிலைய மக்கள்.















"இந்த முகாமை விட்டு முதலில் வெளியே போகவேணும்" இப்படியொருவர்.

"பிள்ளைகளை ஒழுங்காக படிப்பிக்க வைக்கமுடியாது. இரவில வீட்டில வந்து படிக்க வெளிக்கிட்டா பக்கத்தில குடிச்சிட்டு வந்து கத்திக் கொண்டிருப்பவர்கள், குடும்பச் சண்டை பக்கத்து வீடு பக்கத்து வீடுச் சண்டை இப்படி எப்ப பார்த்தாலும் ஒரே சத்தம். இந்த நிலையில் எப்படி பிள்ளைகளை படிக்க வைப்பது" மேலுமொருவர்.

"பிள்ளைகளை நல்ல பிள்ளைகளாக ஒழுங்கான பிள்ளைகளாக வளர்க்க ஏலாது. சின்ன வயசிலேயே கெட்ட பழக்கங்களை எல்லாம் பழகுதுகள். இதுக்கெல்லாம் முகாம்தான் காரணம். இதால நாங்கள் முதலில இங்கிருந்து வெளியே போகவேணும்"

மற்றொருவர் வேதனையுடன்

"குறைஞ்ச வயசிலேயே பிள்ளைகள் கலியாணத்தை கட்டிட்டு படுற கஸ்ரங்களையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க வயித்தை பத்தி எரியுது. காதல் கத்தரிக்காய் எண்டு பழகி தப்புப் பண்ணிட்டு வந்து நிற்கும்போது வேறு வழியில்லாமல் வயசை பார்க்காமல் கலியாணத்தை செய்துவைக்க வேண்டியதாக இருக்கு"

வேறொருவர்.

"நாங்கள் மட்டும் துப்புரவாக இருக்க ஏலாது இருந்தும் பிரயோசனம் இல்லை. வேணுமென்றால் எங்கட உடம்பை மட்டும் சுத்தமாக வைச்சிருக்கலாம். மற்றதை நீங்களே பாருங்களேன் விளங்கும்"

அடுத்தவர்.

" என்ன செய்யிறது எல்லாம் விதி எண்டு நினைச்சு வாழ வேண்டியதுதான். இந்த நாட்டில தமிழராய் பிறந்ததுதான் நாங்கள் செய்த பெரிய தப்பு"

பொறுப்பான ஒருவர்.

"இங்கு வந்து எந்த கட்டுக் கோப்பும் இல்லை. இதில கவலைக்குரிய விடயம் என்னவென்றால் வருங்கால சந்ததிகள் நாசமாய் போகுதுகள். அகதிமுகாம் வாழ்க்கை என்றால் நிச்சயமாக இவற்றையெல்லாம் சந்தித்துத்தான் ஆகவேண்டும், இங்கு கலாச்சாரம், பண்பாடு என்பவற்றை கொஞ்சம் கூட எதிர்பார்க்க முடியாது."

தாய்ஒருவர்.

" சொந்த இடங்களில இருக்கும் போது எப்படி இருந்தனாங்கள் வீட்டில வயசுக்கு வந்த பொம்பிளைப் பிள்ளைகள் இருந்தால் வேலியை அடைச்சுக்கிணற்றடியை மறைச்சு எவ்வளவு கட்டுப்பாடாய் வைச்சிருப்பம். ஆனால் இங்க பாருங்கோ எல்லாமே பொதுவாகத்தான் இருக்கு. குளிக்கிறது எண்டாலும் சரி, ரொய்லற்றுக்கு போறதாக இருந்தாலும் சரி பொதுவாகத்தான். வேறு வழியில்லை. புதுசா காணியை வாங்கிக் கொண்டு போறதுக்கு நாங்கள் வசதியான ஆக்களும் இல்லை."

மேற்படி உள்ளக் குமுறல்கள் அகதி முகாம்களில் வாழ்கின்ற தமிழர்களுடையன. விரும்பியோ, விரும்பாமலோ யுத்தத்தின் பிரதிபலிப்பு அகதி முத்திரை குத்தப்பட்டு சொந்த மண்ணில் அகதிகளாக வாழும் அவலம். அதுவும் அகதி முகாம்களில் வாழும் வாழ்க்கையின் அவலம் வரிகளில் வடிக்க முடியாது. இப்படி இவர்கள் படுகின்ற அவலங்களை கூறிக்கொண்டே போகலாம். ஏதோ ஒரு இடத்தில் முற்றுப் புள்ளி வைக்கத்தானே வேண்டும். அதனை இங்கேயே வைத்து விடுகிறேன்.

அகதி என்ற முத்திரை கிழிக்கப்பட்டு அவலம் நிறைந்த அகதி முகாம் வாழ்க்கை நீங்கி கஞ்சியினை குடித்தாலும் நிம்மதியாகக் குடிக்க வேண்டும் அதற்கு வழி சமைக்க வேண்டும்.

வவுனியாவில் பல நலன்புரி நிலையங்கள் இருப்பது எமக்குத் தெரிந்ததே. ஆனால் அந்த நலன்புரி நிலையங்களில் மக்கள் நலமுடன் இல்லை என்பது ஒரு புறம் இருக்கட்டும். பிரச்சினை என்னவெனில் அந்த நலன்புரி நிலையங்களில் வாழ்கின்ற தமிழ் மக்கள் படுகின்ற துன்பங்கள், துயரங்கள் என்பவற்றை நேரில் சென்று பார்த்தாலேயொழிய வரிகளாலும், வார்த்தைகளாலும் விளங்கப்படுத்த முடியாது. இந்த மக்களுடைய நிலைமைகளை பார்த்த எமக்கு" நலன்புரி நிலையம் என்ற பெயரை மாற்றி அமைக்க வேண்டும் போல் இருந்தது. அதுவொரு "சுய சித்திரவதை முகாம்" என்றே கூறலாம்.

இன்று வவுனியாவில் உள்ள எல்லா நலன்புரி நிலையங்களினதும் நிலை இதுதான். இந்த வகையில நாம் அண்மையில் சென்ற பூந்தோட்டம் நலன்புரி நிலையம் பற்றி பார்த்தால்.

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இந்த முகாம் ஒன்பது அலகுகளாக (Unit) பிரிக்கப்பட்டு ஒவ்வொரு இரு அலகுகளுக்கும் கிராம சேவகர்கள் போன்று நடவடிக்கைகளை மேற்கொள்ள அரச செயலகத்தால் நியமிக்கப்பட்டவர்கள் கடமையாற்றுகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் ஓய்வு பெற்ற சிறிலங்காவின் பொலிஸ் உத்தியோகத்தர்கள். இதைவிட ஒவ்வொரு அலகுகளுக்குப் பாதுகாப்புக்கென பொலிசார் மற்றும் ஒவ்வொரு அலகுகளுக்கும் மக்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒருவர் தலைவர் என நிர்வாகச் செயற்பாடுகள் ஒரு புறம் இருக்க.

இந்த பூந்தோட்ட முகாமில் கிளிநொச்சி ,முல்லைத்தீவு , யாழ்ப்பாணம், மன்னார் ,வவுனியா பிரதேசங்களை சேர்ந்த மக்கள் தங்கி இருக்கின்றனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் தங்களுடைய சொந்த இடங்களுக்கு மீளவும் செல்லமுடியாது. காரணம் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் பெரும்பாலானவர்களின் காணி அத்தோடு பலருக்கு எங்குமே காணிகள் இல்லை. இருந்த காணிகளையும் மலிவான விலையில் விற்றவர்கள், போன்ற இரு பிரதான காரணங்களாலும் வேறு சில காரணங்களாலும் மீளகுடியேற முடியாதநிலையில் முகாமில் வாழ்ந்து வருகின்றனர். இந்த பூந்தோட்ட முகாமில் மேற்படி மாவட்டங்களைச் சேர்ந்த 987 குடும்பங்கள் கொண்ட4000 இற்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்ற. இவர்களிடம் (விபரம் அட்டவணையில்) எதிர்கால நலமான சிந்தனைகள் எதுவுமில்லை.

வழங்கப்படுகின்ற நிவாரணங்கள் போதவில்லை என நாம் சந்தித்த அனைவரும் கூறுகின்றனர். மின்சார வசதி இன்மை, இதனால் கல்விச் செயற்பாடுகள் பெருமளவு பாதிக்கப்படுகின்றன.

இங்கு மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை சிறுவர்களின் எதிர்காலமே. நலன்புரி நிலையங்களை பொறுத்தவரை பெருமளவான சிறுவர்கள் வேலை செய்வதாகத் தெரியவருகிறது. ஆரம்பக் கல்வியுடன் பாடசாலை வாழ்க்கையை இடைநிறுத்திக் கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்தே காணப்படுகின்றது. ஒரு சில சிறுவர்கள் வவுனியா நகர பொதுச் சந்தைக்குச் சென்று அங்குள்ள மரக்கறி வியாபாரிகளுக்கு உதவிகள் செய்து கொடுத்து பின் மாலை நேரங்களில் அங்கு கழித்து விடப்படுகின்ற மரக்கறி உள்ளிட்ட பொருட்களை அகதி முகாம்களுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்து கிடைக்கின்ற ஒரு சில ரூபாய்களைத் தீயவழியில் செலவு செய்கின்றனர். படிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் உயர்தரம் வரை கற்று தொழில் பார்ப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால் பெரும்பாலான இளைஞர் யுவதிகளின் வாழ்க்கை திசைமாறிப் போவதாகவே அனைவரும் கூறுகின்றனர்.

கிளிநொச்சி -423 குடும்பங்கள்.
முல்லைத்தீவு -350 குடும்பங்கள்.
யாழ்ப்பாணம் -82 குடும்பங்கள்.
மன்னார் -59 குடும்பங்கள்.
வவுனியா -61 குடும்பங்கள்.
திருகோணமலை-03 குடும்பங்கள்.
கண்டி -09 குடும்பங்கள்.

குடும்ப வறுமை காரணமாக மனைவி மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்குச் சென்றுவிட்டால் (அங்கு சென்றும் தங்கள் வாழ்க்கையை தொலைத்து நிர்க்கதியாக வீடு திரும்பியவர்களுமுண்டு) இங்கு இருக்கின்ற குடும்பத் தலைவர் வேறு பெண்களோடு தொடர்பினை ஏற்படுத்திக்கொண்டு மனைவியின் உழைப்பினை நாசம் செய்து வருகின்றனர்.

மேலும் ஐந்துபேரும் அதற்கு மேற்பட்ட தொகையினை உடைய குடும்பங்களுக்கு வீடு 10 அடி அகலமும்20 அடி நீளமும் ஐந்து பேருக்குக் குறைவான எண்ணிக்கையை உடைய குடும்பங்களுக்கு 10 அடி அகலமும் 10 அடி நீளமும் கொண்ட வீடுகளாகவே வழங்கப்பட்டுள்ளன. இதனாலும் இங்கு பல பிரச்சினைகள் அதாவது வயோதிபர்கள் முதல் குழந்தைகள் தொட்டு புதிதாகத் திருமணம் செய்தவர்கள் என எல்லோரும் அதே வீடுதான். எனவே இதனால் ஏற்படும் பிரச்சினைகள் ஒரு புறமிருக்க.

வெளியிலிருந்து சிலர் முகாம்களுக்கு வந்து கசிப்பு, கஞ்சா போன்றவற்றை விற்பனை செய்வதாக முகாம் மக்கள் கூறுகின்றனர். இதனால் தங்களது பிள்ளைகள் குடும்பங்கள் சீரழிந்து போவதாகவும் பொலிசாருக்கு இது தொடர்பாக முறையிட்டும் அவர்களாலும் முழுமையாகக் கட்டுப்படுத்த முடிய வில்லை எனவும் கூறப்படுகிறது. இவ்வாறு இதனை பாவிப்பவர்கள் மாலை நேரங்களில் ஆங்காங்கே கூடி நின்று பெண்களுடன் சேட்டை விடுவது துன்புறுத்து வது என ஒரு புறம். இவ் வாறான காட்சிகள் தொடர.

சிறுவயதிலேயே திருமணம் செய்து விட்டு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பவர்கள் ஒரு புறம் என பல்வேறு அவலக் காட்சிகள் நாளாந்தம் அரங்கேறிக் கொண்டிருக்க.

மாதம் பத்தாயிரம் ரூபாசம்பளம் பெறும் இந்த முகாமுக்கென நியமிக்கப்பட்ட சுத்திகரிப்பு தொழிலாளர்கள் சிலர் முகாம்களை ஒழுங்காக சுத்தப்படுத்தாமை என நலன்புரி நிலையங்களில் எங்கு பார்த்தாலும் எதைப் பார்த்தாலும் எப்படிப் பார்த்தாலும் ஒரே பிரச்சினைகள்.

கழிவு நீர் செல்லும் வாய்க்காலில் இருந்து சதா வந்துகொண்டிருக்கும் நாற்றம், பொதுவான மலசல கூடம் அதுவும் பற்றாக்குறையான நிலையில். இதனால் மலசலம் கழிக்க வசதி இல்லை. ஒருவர் மலசல கூடத்தில் இருந்தால் மற்றவர் அவசரத்தில் அடிக்கொரு முறை கதவினைத் தட்டுவது எனப் பிரச்சினைகளை அடுக்கிக்கொண்டே போகலாம். இதனால் இவ்வாறான அகதிமுகாம் வாழ்க்கையைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. இதன் மூலம் சமூகச் சீரகேடுகள் குறிப்பாக வருங்கால தலை முறையினர் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றனர். எனவே விரைந்து நடவடிக்கை எடுப்பது நன்மையே. இவர்களைக் மீளக் குடியேற்றுவதற்கு இடங்களை இனங்கண்டு குடியேற்று வதே ஒரே வழி. ஏனெனில் பெரும்பாலானவர்கள் காணிகள் அற்றவர்களே. இதனால் இவர்கள் வாழ்க்கையை உயர்த்த நல்வழிக்குத் திசைதிருப்ப நட வடிக்கை எடுப்பது நல்லது.

-சுழியன்-



ஆகாயக் கடல்வெளிச் சமர்க்காலம் ஆனையிறவு சிங்களப்படைத்தளத்தை எப்படி யாவது கைப்பற்றிவிடவேண்டும் என்ற பேரவாவுடன் ஒவ்வொரு போராளியின் முகங்களிலும் உற்சாக முத்திரைகள்.

உள்ளே முடங்கிக் கிடந்த 800 இராணுவத்திற்கான உணவு ஆயுத வளங்களை வழங்குவதற்காக ஒரு உலங்கு வானூர்தியை உள்ளே இறக்கு வதற்கு பல வானூர்திகள் எங்கள் நிலைகள் மீது தற்காப்புத் தாக்குதலை நடத்திக்கொண்டிருந்தன.

இது வழமையான அவனின் நடவடிக்கை என்பதால் அதைக் கணக்கெடுக்காமல் நாங்கள் நகர்வு பதுங்குகுழியூடாக எமது அடுத்தகட்ட நடவடிக்கை களிற்கான ஆயத்தங்களை செய்து கொண்டிருந்தோம். முகாமினுள் இறங்குவதற்காக குத்திப்பதியும் உலங்குவானூர்திக்கு சில போராளிகள் சிறிய ரகத்துப்பாக்கி யால் விளையாட்டாக சுட்டுக் கொண்டிருந்தார்கள். அங்கே உலங்குவானூர்தி மேலெழுவதை பார்க்க தைப்பொங்கலுக்கு கொளுத்துகிற சுக்கல் வெடிக்கு காதை பொத்திக்கொண்டு ஓடுகின்ற காட்சி நினைவு பின்ன ணியாய் விரிய, சிரித்துக்கொண்டே தோளில் கனக்கும் சிலிப்பர் கட்டையுடன் வளைந்து நெளியும் பதுங்கு குழிக்குள்ளால் எமது காவலரண் நோக்கி நகர்ந்துகொண்டிருந்தோம்.

மண் மூடையொன்றில் முழங்கையை ஊன்றி கைகளை நாடிக்குக் கொடுத்தபடி மறு கையில் துப்பாக்கியுடன் விநி யோகப் பணியை செய்யமுடியாது தவிர்க்கும் உலங்குவானூர்தியை பார்த்து ரசித்துக்கொண்டிருந்தார் கீர்த்தி அண்ணா.

அவரைக் கடக்கும்போது வாயை சும்மா வைத்திருக்க முடியாமல் கதையை போட்டேன் "என்ன கீர்த்தியண்ணை கடுமையா யோசிக்கிறியள்"

"இல்லையடாப்பா இவ்வளவு கஷ்டப்பட்டு இவ்வளவு பேரும் வந்து ஏன் சப்பிளை கொடுக்கிறதுக்கு மினக்கெடு கினம்'' சிந்தனையுடனே பதில் வந்தது.

"ஒரு சுண்ணாம்பையும் போகவிடாமல் நீங்கள் சுற்றி வளைச்சு நின்றா அவங்கள் என்ன செய்யிறது. குடிக்கிறதிற்கு தண்ணி கூட இருக்கோ தெரியாது பாவம் அவங்கள்'' என்றபடி தோளை நசித்துக்கொண்டிருக்கும் சிலிப்பர் கட்டையை எப்படியாவது கொண்டுபோய்போடவேண்டும் என்பதற்காய் வேகம் எடுத்தோம்.

பட்ட மரத்திற்கடியில் இருந்த பற்றைக்கருகில் சிலிப்பர் கட்டைகளால் அமைக்கப்பட்டு மண்மூட்டைகளால் சுவர் கட்டப்பட்ட எமது வரவேற் பறையில் எமது அன்றைய இரவு அரட்டை அரங்கத்திற்காக கூடிக்கொண்டோம்.

"கெலியள் வந்து சப்பிளை கொடுக்கிறதை நல்லா ரசிச்சியள் அதைப்பற்றி கவிதை ஒன்று எழுதுங்கோவன்'' என அரட்டையை ஆரம்பித்து கீர்த்தி அண்ணையை கிளறினேன். "கவிதையில்லை ஒரு வரலாறு எழுதப்போகிறேன் பன்னிரண்டு மணியாகட்டும் பொறுத்திரு'' என்றார்.



# அருவமும் உருவமாகி

"மன்னிக்கவேணும் கீர்த்தியண்ணை கயிறு கேட்டனீயளாம் கொண்டு வந்தனாங்கள்'' பிற்களத்திலிருந்து இரு போராளிகள் அரட்டைக்கு குறுக்கே வந்து நின்றனர்.

"சரி அந்த பொயின்றுக்கு பின்னால வைச்சிட்டு மற்றதும் ஒரு 25 கேட்டனான் ஒன்பது மணிக்கு முன்னம் அனுப்பி விடச் சொல்லுங்கோ'' அவர்களை அனுப்பி விட்டு கீர்த்தி அண்ணை எங்கள் பக்கம் திரும்பினார்.

"என்னடா இவங்கள் வந்து இவ்வளவு கஷ்டப்பட்டு சப்பிளை கொடுக்கிறதை பார்த்தா உங்க இருக்கிற ஆமிக்காரங்க ளுக்கு வெடிபொருள் பற்றாக்குறை நிறைய இருக்குது எண்டது வடிவா விளங்குது. அதனால் தான் இந்தப் பற்றாக்குறை இன்னும் அதிகரிச்சால் நாங்கள் இறங்கி அடிக்கிற நேரம் ஆட்களால சண்டைபிடிக்கேலாமல் போகும். நாங்கள் வெல்லலாம் என்று நினைக்கிறன். அதுக்காகத் திட்டமொன்றை போட்டிருக்கிறன். எங்கட பொடியள்ள சின்னக் கீறலும் வராமல் நாங்கள் இதை செய்யவேண்டும்.

அரட்டையை நிறுத்தி கீர்த்தி அண்ணையின் திட்டத்து டன் பணியை ஆரம்பித்தோம். நேரம் பதினொன்றைக் கடந்து பன்னிரெண்டு நோக்கி நிமிடங்களை நகர்த்திக் கொண்டிருந்தது. அந்தப் பகுதிக்காவலரண் போராளிகள் ஒன்றிணைக்கப்பட்டோம்.

நகர்வுப் பதுங்கு குழியால் நகர்ந்து சாக்கு மறைப்புக்களுக்குக் கீழால் நுழைந்து அந்த வெட்டை வெளி யில் எதிரியின் முன்னரங்கப் பகுதிக்கு முன்னால் இருந்த நகர்வுப் பதுங்கு குழிக்குள் நிலையெடுத்தோம். கொண்டு வந்த நீளமான கயிற்றில் எதிரியை ஏமாற்றுவதற்கென போராளிகளை போல் உருவாக்கப்பட்ட பொம் மைகளை குறிப்பிட்ட அளவு இடைவெளிவிட்டு கட்டினோம்.

நடுச்சாமம் என்றாலும் வெட்டைவெளி என்பதால் எங்கள் வேலைகளை செய்யக்கூடிய அளவிற்கும் எதிரிகளை இனங்காண முடியாத அளவிற்கும் ஒளி வசதியாய் இருந்தது. நேரம் நெருங்கிக்கொண்டிருந்தபோது கயிற்றில் கட்டிய பொம்மைகளை தாங்கியபடி சில போராளிகள் குறோள் இழுக்கத் தொடங்கினர். ஆட்களையெல்லாம் வடிவாய் கிடத்திட்டம்'' காவிச் சென்ற போராளிகளில் ஒருவனின் வோக்கியிலிருந்து கீர்த்தி அண்ணைக்கு மெதுவாக தகவல் வந்தது "சரி அப்படியே வந்து பங்கருக்குள்ள இறங்குங்கோ'' கீர்த்தி அண்ணை பதில் அனுப்பினார்.

பொம்மைகள் கட்டப்பட்ட கயிற்றின் ஒரு முனை வலதுபுறம் பங்கருக்குள் இருந்த இரண்டு போராளிகளிடமும் மறுமுனை இடதுபுறப் பதுங்குகுழிக்குள் இருந்த இரண்டு போராளிகளிடமும் கொடுக்கப்பட்டது. அனைத்து ஒழுங்குகளும் சரி என்று கீர்த்தி அண்ணை சரிபார்த்துக் கொண்டார்.

நேரம் 12.01 "அடியுங் கோடா'' வானைப்பிளந்தது கீர்த்தி அண்ணையின் குரல். பதுங்கு குழிக்கு மேல் ஏறிய சில போரா ளிகள் சில ரவைகளை மிக வேகமாகச் சுட்டுத் தள்ளிவிட்டு மீண்டும் அதே வேகத்தில் பதுங்குகுழிக்குள் பாய்ந்தனர். "எல்லோரும் சுடுங்கடா'' "அடி யுங்கோடா'' "மோட்டரை போடுங் கோடா'' "ஆர்.பீ.ஜீயாலை சாத்துங்கோடா'' "மூவ் மூவ்'' என்றேல்லாம் வாய்க்கு வந்தபடி வான் பிளக்கக் கத்தத் தொடங்கி னோம்.

இப்பொழுது எதிரி தனது வேலையை காட்டத்தொடங்கி விட்டான். தாராளமாக எமது பக்கம் விளாசித்தள்ளினான். கிடப்பவற்றையெல்லாம் போட்டு ஒரு தற்காப்புச் சமரை நடத்திக் கொண்டிருந்தான். நாங்கள் இதுவரைக்கும் பதுங்குகுழிக்கு மேலால் ஒரு துரும்பு கூட வெளியே நீட்டாது உள்ளிருந்தே வாயால் சண்டை பிடித்துக் கொண்டிருந்தோம். பயந்து போன எதிரி பரா லைற் ஒன்றை வானத்தில் ஏவிவிட்டான்.

அதனை எதிர்பார்த்து காத்திருந்த கயிற்று முனையை பிடித்திருந்த போராளிகள் மாறி மாறி வேகமாக கயிற்றை இழுப்பதும் விடுவதுமாக பொம்மைப் புலிகளை அசைத்துக் கொண்டிருந்தனர். இப்பொழுது சூனியப்பகுதியிலிருந்து எதிரியை நோக்கி நகர்வதுபோல் பொம்மை புலிகள் அபாரமாக நடித்துக் கொண்டிருந்தனர்.

தங்களை நோக்கி நாங்கள் நகர்கிறோ மென முடி வெடுத்த எதிரிகள் தமது தாக்கு தலை இன்னும் மூர்க்கமாக் கினார்கள். தொடர்ந்தும் எங்கள் வாயும் எதிரியின் ஆயுதங்களும் சண்டையிட்டுக்கொண்டன. எனக்கு இடது பக்கத்தில் இருந்தவன் ஒன்று இரண்டு என்று எண்ணிக்கொண்டிருந்தான். வலது பக்கத்தில் இருந்தவனும் அவ்வாறே எண்ணிக்கொண்டி ருந்தான். சிறிது நேரத்தின் பின் வலது பக்கம் இருந்தவன் 40 என்றும் இடது புறம் இருந்தவன் 12 என்றும் சமநேரத்தில் எண்ணி முடித்தனர். சண்டையும் முடிந்தது.

காயமடைந்த பொம்மைப் புலிகளை தோளில் போட்டுக் கொண்டு நிலைக்கு திரும்பி னோம். 40 ஆர்.பீ.ஜீ செல் களையும் 12 பராலைற்களையும், ஏராளமான சிறு மோட்டார் செல்களையும், எண்ணுக் கணக்கற்ற ரவைகளையும் எங்களுடைய பூச்சாண்டி வேலைக்காக எதிரி இழந்திருந்தான். வெற்றிப் பெருமிதத்தோடு நடந்து கொண்டிருந்தோம். அப்பொழுது கீர்த்தி அண்ணை கேட்டார் எப்படி நாங்கள் எழுதிய வரலாறு என்று....

**செந்தோழன்**

---



# எது மனிதத் தன்மை...?

நேர்த்தியாக அணியப்பட்ட உடை. மிடுக்கான தோற்றம். ஆணுக்கேற்ற அடர்ந்த தடித்த மீசை. அழகாக வாரப்பட்ட தலைமுடி. இடதுகையில் மெசின் கட் வடிவ முறையில் செய்யப்பட்ட அழகிய தங்க மோதிரம் ஒன்று மின்னிக்கொண்டிருந்தது. அந்த இளைஞனை பார்த்தால் எங்கே நல்ல தொழில் பார்ப்பவன் போலவே காணப்பட்டான்.

மோட்டார் "சைக்கிளை'' சினிமாப்படக் காதாநாயகன் போல் அழகாக நிறுத்திவிட்டு இறங்கி அந்த தேநீரகத்துக்குள் புகுந்தான். அப்போது எதிரே வந்த ஒருவரிற்கு புன்னகையை உதிர்ந்தவாறு தேநீரகத்துக்குள் வந்து அமர்ந்து கொண்டான்.

தின்பண்டங்களைச் சுவைத்துச் சுவைத்து உண்ணத்தொடங்கினான். தேநீர்க்கடை ஊழியர் மேசையில் பால் "ரீயை'' வைத்துவிட்டுப் போக எடுத்துப்பருகிவிட்டு "மணிபேர்ஸை'' எடுத்துப் பார்த்தவனின் முகத்தில் கணப்பொழுதில் புதிய மாற்றம் தென்பட்டது.

திடீரென படபடக்கத் தொடங்கினான். எல்லா பொக்கற்றுக்குள்ளும் கைகள் மாறி மாறி தேடுகின்றன. ஆனால் பதற்றம் தீரவில்லை. நெற்றியில் அரும்பியிருந்த வியர் வைத்துளிகளைக்கைக் குட்டையால் ஒத்தியவாறு முதலாளியைச் சங்கடத்துடன் அணுகினான்.

"தம்பி; அறுபத்திமூண்டு ரூபா தாங்கோ''

"ஐயா; காசக்காணேல்ல விட்டிட்டு வந்திட்டன் போல கிடக்கு''

"என்ன தம்பி!? பிறகேன் இஞ்ச வந்தனியடாப்பா...?'' என அதட்ட அங்கிருந்த அனைவரும் அந்த இளைஞனைப்பரிதாபமாக நோக்கினர்.

"ஐயா; காசு எங்கோயோ தவறிட்டுது. வரேக்க தரட்டா..?''

தம்பி இப்படித்தான் சொல்லுவியள் பிறகு கேட்டா தெரியாது எண்டு கதை விடுவியள் உங்களப்பற்றி தெரியும் தம்பி'' என முழங்கினார். எல்லோரும் தேநீர் அருந்துவதை விட்டுவிட்டு இவனையே பார்த்துக்கொண்டிருக்க சங்கடத்துக்குள்ளான அந்த இளைஞன் இனித்தாமதிப்பது இன்னும் அவமானத்தை ஏற்படுத்தும் எனக்கருதியவன் தன் கையை இதுவரை அழகுபடுத்திக்கொண்டிருந்த அந்த மோதிரத்தைக் கழற்றி முதலாளியின் முன் மேசையில் வைத்துவிட்டு.

"ஐயா; இந்த மோதிரத்தை வச்சிருங்கோ நான் காசக்கொண்டந்து தந்திட்டு எடுத்தோண்டு போறன்'' என்று விட்டு தேநீரகத்தை விட்டு வெளியேறியவனைப் பார்த்து முதலாளி ஏதோ சொல்ல முயற்சிக்கிறார். ஆனால் அவன் சென்று விட்டான். கிட்டத்தட்ட பதின்மூவாயிரம் மதிக்கத்தக்க அந்த மோதிரத்தை அந்த இளை ஞன் வெறும் அறுபத்திமூன்று ரூபாய்க்காய் கழற்றிக்கொடுத்துவிட்டு போனபோதுதான் முதலாளி அவனைப்புரிந்துகொண்டார்.

**-பாணு-**

# காரசாரம்

நெடுங்கேணிப்பிரதேசம் விடுவிக்கப்பட்டு சுமார் ஐந்து வருடங்களைக் கடந்துவிட்டது. அப்படியானால் முல்லைத்தீவு விடுவிக் கப்பட்டு எத்தனைவருடம்- ஏறக்குறையப் பத்து வருடங்கள். இவ்வளவு காலமாக இந்தப்பகுதி மக்கள் தமது அன்றாட வாழ்க் கையை நடத்தக் கஷ்டப்பட்டே வந்துள் ளனர். இவர்களுக்கான அடிப்படைப் போக்கு வரத்து வசதிகள்கூடக் கவனிக்கப் படவில்லை. தமக்குரிய உரிமைகளைக் கூட இன்னும் கேட்டுப்பெற இவர்களுக்குத் தெரியவில்லை. உதாரணமாக நெடுங் கேணிக்கு என்று இதுவரை பஸ்போக்கு



# கிராமங்களுக்கான போக்குவரத்து...

வரத்து இல்லை. தனியே புதுக்குடியிருப்பிலிருந்து செல்லும் ஒரு பஸ்ஸும் இப்போது இல்லையாம். ஆகப்பெரிய முறைப்பாடு என்னவென்றால் நெடுங் கேணி, பழம்பாசி, நைனா மடு, புளியங்குளம், கரப்புக் குத்தி, கனகராயன்குளம், விஞ்ஞானகுளம், மாங்குளம், ஒட்டுசுட்டான் போன்ற கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு சாதாரண குடிமக்களுக்குரிய போக்குவரத்து விதிகள் மறுக்கப்பட்டுள்ளன. இவர்கள் பயணம் செய்யத்தான் செய்கிறார்கள். ஆனால் ஒரு போதும் ஒரு பஸ்ஸிலும் இவர்கள் இருக்கைகளில் இருக்கக்கூடாது என்ற எழுதாத விதி, இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. புளியங்குளமூடாகச் சென்று வவுனியா நகரத்திலேயே இவர்கள் முக்கியமான பொருட்களைப் பெறவேண்டி யுள்ளது. கச்சேரி, வங்கி, வாகன உதிரிப் பாகங்கள் என எப்படியும் அன்றாடம் வவு னியா சென்றேயாகவேண்டிய கணிசமான மக்கள் தொகை இங்குள்ளது. எனினும் இவர்களைப் பயணிகளாக ஏற்கமுடிய வில்லை என்கிறார் ஒருவர். புளியங் குளத்தில் வந்து நின்று நெடுங்கேணி வழி யால் செல்லும் ஒரு பஸ்ஸில் உரிமை யோடு ஒரு பயணி ஏறமுடிவதில்லை. "வேறபஸ்வரும்" "இல்லாட்டி கடைசியா ஏறுங்கோ" என்ற பதிலே வருகிறது. முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பஸ்ஸில் முதலில் ஏறி அல்லது வந்த ஒழுங்கின் படி அமர்ந்தால் "இறங்குங்கோ முல்லைத் தீவு போறவை முதல் ஏறுங்கோ" பிறகு முள்ளியவளை பிறகு மற்றாக்கள் ஏறுங்கோ.. இப்போது பஸ்ஸில் நிக்க இடமின்றி நிறைந்திருக்கும்.

"ஒரு நாள்கூட நாங்கள் இருந்து பயணஞ்செய்யவில்லை"

"இன்னொரு ஊருக்குப்போற பஸ். அப்படித்தான் ஏத்துவம் விருப்பமில்லாட்டி வேற பஸ்ஸில வாங்கோ" என்று நடத்துநர் சொன்னார் என்று குறைப்பட்டாள் ஒரு பெண்.

"ஏன் நெடுங்கேணிக்குச் செல்பவர் நேரத்தோடு வந்து இருக்கையில் அமர்ந்து விட்டால் அவர் இறங்கும்போது முல் லைத்தீவுப் பயணி அதில் அமரலாமே..." என்றால் அது சில நடத்துநர்களுக்கு ஒத்து வராது. "எம்மாறெஸ் பஸ்ஸில உந்தக் கரைச்சல் இல்லை. உந்தப்பிரச்சினைய நாங்கள் அதிலயே போக்குவரத்து ஒவீசில கேட்டும் பாத்தநாங்கள். ஆனா அவையள் ஆர் சொன்ன எண்டு போட்டுத் தங்கட அலுவல். கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம் போன்ற பிரதேசங்களுக்கு பஸ்ஸிலிருந்து இறங்கி நெடுந்தூரம் நடக்கவும்வேண்டும். சுமைகளுடன் வந்து நின்று பயணித்து இறங்கி நடக்கவேண்டியும் உள்ளவர்களைக் கருத்தில் கொண்டால் நல்லது. சீரான போக்குவரத்துக்கும் நேர்த்தியான சேவைக் கும் தமிழீழப் போக்குவரத்துக் கழகத்தின் ஊழியர்களுக்கு ஒரு "சபாஷ்" போடலாம். அண்மையில் சில வெளியூர்ப்பயணிகள் எங்கள் பஸ்ஸில் பயணத்துக்காக ஏறியிருந் தனர். மணிக்கூட்டைத் திருப்பிய ஒருவர் "நேரமென்ன?" எனப் பக்கத்திலுள்ளவரைக் கேட்டார். அதற்கு அவர் என்ர மணிக்கூடும் நாலைஞ்சு நிமிசம் முந்தித்தான் போகுது பொறுங்கோ பஸ்ஸெடுக்கச் சொல்லுறன்" என்றார்.

சாரதி பஸ்ஸில் ஏறி இயக்க- இவர் சொன்னார். "சரியா ரெண்டு மணி" தனது மணிக்கூட்டையும் திருத்தி வைத்தார். பயணிகள் நிறைந்துபோன ஒரு பஸ்ஸில் நடத்துநர் கத்திக்கொண்டிருந்தார். வாங்கோ.... முன்னுக்கு வாங்கோ மூன்று தரம் சொன்னவர். நண்பா... நகர்ந்து வழி விட்டால் நல்லவர்கள் முன்னுக்கு வரு வார்கள் என்றார். சுள்ளானைப் போலிருந்த நடத்துநர். "தமிழ் எப்படி அவர் நாவில் தவழ்கிறது" என நான் வியந்தேன். இப்படிப் பெயர் பெற்ற பஸ் நடத்துநர்கள். இன்னு மொருபுறம் தொலைதூரப்பயணிகளுக்கு வசதி ஏற்படுத்திக்கொடுக்க நினைத்து குறுந்தூரப் பயணிகளுக்குக் கொடுமை செய்யலாமா? நெடுங்கேணிக்கென்று ஒரு பஸ் இல்லாத வரை அவ்வழியைப் பயன் படுத்தும் பஸ்கள் பயணிகளை ஏற்றித்தான் ஆகவேண்டும். அது ஒரு சட்டபூர்வ ஒப்பந் தம் கூட. ஆனால் இந்தப்பகுதி மக்கள் இதைப்பற்றி அறியாதவர்கள்.

எனவே தம்மைக் கடைசியாக ஏறுங்கள் என்று நடத்துநர் கூறும்போது சிலருக்கு அழுகை வருகிறது. சிலருக்கு ஆத்திரம் வருகிறதாம். எங்களுக்கேன் இந்த நிலை. இது மேற்குறித்த கிராமங்களின் நிலை. மற்றொருபுறம்.

ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான், மருதன்குளம், தேறாங்கண்டல் மிகமுக்கியமான கிராமங்கள் அபிவிரு[illegible]பில் முன் நிற்பவை. இவர்களுக்குப் பாடசாலைகள், கிராமசேவை யாளர்கள், நீர்ப்பாசன முகாமை என்பவை மட்டு மல்ல, அரிசி ஆலையும் உண்டு. ஆனால் போக்கு வரத்துக்கான மிகப்பிரதான சாலையாக விளங்கு வது கொக்காவில் துணுக்காய்ச்சாலை. படு மோசமாக நடந்துகூடச்செல்வதற்கு சாத்தி யப்பாடில்லாமல் இந்தச் சாலை இருந்தபோது இவ்வழியாகவே மடுவரை, பள்ளமடுவரை பயணிகள் பேருந்து சிற்றூர்தி என்பன சென்று வந்தன. இவர்களுக்கு போக்குவரத்துக்கு எந்தவொரு வாகனமும் இல்லை. எவ்வளவு மக்கள் இந்தப்பிரதேசத்துக்குள் அடைக்கலம் புகுந்தபோதும் அத்தனை பேருக்கும ஆதரவளித்தது இந்தக்கிராமங்கள். அந்த வளத்தைத் தொடர்ந்து பேணப் போக்குவரத்து வசதியில்லை. பெருமளவு மரக்கறிப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் இப்பிரதேசம் இன்று நீர்வசதி இருந்தும் பற்றைகள் மண்டியுள்ளன. அதுபற்றி முன்னா வெளிவேலிகளில் கூட பாவற் கொடி காய்த்துத்தொங்க உள்ளவளவு முழுதும் பயிர் வைத்துப் பராமரித்த ஒருவரை "ஏன் உங்கள் காணியில் இப்ப ஒரு மரக்கறி யும் இல்லை" என்று கேட்டேன். அவர் சொன் னார் "முன்னர் உற்பத்தியான மரக்கறி களை இங்கேயே விற்கலாம். மிச்சத்த மல்லாவிக்கும் கொண்டு போவேன். இப்போது விற்க முடியேல்லையே....."

"ஆனால் நீங்கள் அதை கிளி நொச்சிக்கும் கொண்டு போகலாமே" என்றால் முன்னர் போக்குவரத்துக்கு பல சிற்றூர்திகள் இருந்தன. தட்டிவான் ஒன்று மரக்கறி மூடைகள் ஏற்றவே சேவையிலிருந்தது. இன்று எதுவு மில்லை. எப்படி நாம் கிளிநொச்சிக்கு மரக்கறி களை எடுத்துச் செல்வது. இதுபற்றி நான் முன்னைநாள் போக்குவரவு ஒழுங் கமைப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஒரு வரைக் கேட்டபோது, ஐயன்கன்குளம் வீதி திருத்தப்படுகிறது விரைவில் பஸ் விடுவார்கள் என்றார். இது 2004 ஆம் ஆண்டு. இன்றுவரை அந்தச் சாலைக்கு பஸ் இல்லை. மல்லாவியிலி ருந்தும் முகமாலையிலிருந்தும் நட்டாங்கண்ட லுக்கும் பேருந்து ஒழுங்குண்டு. ஆனால் இதன் முக்கியசாலையான பனங்காமம் துணுக் காய்ச்சாலை பயன்படுத்தப்படுவதில்லை. ஆக ஒட்டங்குளம், விநாயகபுரம், பொன்னகர், ராமக் கல் பிரதேச மக்கள் 5ஆம் படிவம் சின்னப் பூவரசங்குளம் போன்ற பிரதேசமக்கள் பயணத் துக்கு மிகவும் கஷ்டப்படுகின்றார்கள் நட்டாங்கண்டல் பஸ்ஸில் ஒன்றையாவது இந்தப்பாதையில் விடக்கூடாதா என்பதுடன் இங்கு மரக்கறிச்செய்கையை குறைத்த வர்களும், ஒரேயடியாகக் கைவிட்டவர்களும் கூறும் காரணமும் போக்குவரத்துத்தான். அகில உலகமும் அறிந்த உண்மை அபிவிருத்திக்கு சந்தைப்படுத்தல் முக்கியம் என்பதும் சந்தைப் படுத்தலுக்கு போக்குவரவு முக்கியம் என்பதும். இந்தப் பிரதேசங்களிலிருந்து இந்தக் காலங் களில் வெங்காயம், செத்தல் மிளகாய் என்பன கொழும்புவரை போனதும் ஒருகாலம். இன்று கண்டியிலிருந்து மரக்கறி இறக்குமதி செய்யப் படுகிறது. காரணம் உள்ளூர்ப் போக்குவரத்துச் சீரின்மைதான் என்கிறார் ஒரு பொருளியல் அறி ஞர். சாதாரணமாக ஒரு நாட்டின் ஆணிவேர்க் கிராமங்கள் தான் இந்தக் கிராமப்புறமக்களும் கிராமங்களின் உற்பத்தித்திறனும் கூட கவனிக்கப்படவேண்டியவைதான். வாகனப் பற்றாக்குறையும், வீதிகள் செப்பனிடாமலும் இருந்தகாலத்தில் வானோடும் குளத்து நீரிலெல்லாம் நீந்திக்கரைசேர்ந்த சிற்றூர்திகளை நாம் கண்டோம் அதில் பயணமும் செய்தோம். இன்று சமாதான வலைக்குள் அவை கூடச் சிக்கிவிடும் என்று யார் கண்டார்.

-மாயா-



## விக்கிவிசுக் விசாலாட்சி

பொதுக்கட்டமைப்புக்க என்ன இருக் கெண்டு உனக்குத்தெரியுமே... பிக்குமாருக்கும் தெரியாதாம்... ஜே.வி.பி க்கும் தெரியாதாம்... கக்கீங் காக்காவுக்கும் தெரியாதாம். அப்ப தெரியாத ஒரு விசயத்தை மூக்குச் சாத்திரம் பாத்தே அறியிறதில இவை கெட் டித்தனங் கூடினவைதான். ஒண்டப் பற்றித் தெரியாமலே எதிர்க்கிறதில இவையள ஆர் வெல்லுற. முன்ன ஆத்தை ஒருகதை சொல்லுவா. 'மஞ்சள் துண்டுக்குக் கழுத்தறுத்த வங்கள்' எண்டு ஒரு தமிழ் பொம்பிளை... கழுத்தில தாலிய வித்துப் போட்டு ஒரு மஞ்சள் துண்டக்கட்டியிருந்தவளாம். சேனைப் புலவுக்க தினைக்காவல்ல தனிய நிண்ட பொம்பிளையக் கழுத்தில கிடக்கிறது தாலியெண்ட நினைப்பில கழுத்த வெட்டிப் போட்டானாம் ஒருத் தன் பிறகென்ன. இந்தக் கதை போலதான் இவை முன்னையுமொருக்கா தமிழரோட இனப்பிரச் சினை யக் கதைக்கவெண்டு நகல் சட்ட மூலமொண்ட சனாதிபதி கொணந்த நேரம் நாடாளுமன்றத்தில் தீமிதிப்பு நடந்தமாரி உந்த எதிர்க்கட்சி எம்பி மாரெல்லாம் தொங்கு தொங்கெண்டு குதிச்சது மில்லாம எல்லாத்தையுங்கொளுத்தியும் போட்டினம்.

ஒரு நாட்டின்ர சட்டமூலத்தையோ மசோ தாவையோ வச்சு நன்மை தீமையளக் கதைக்கிறது தானேடா முறை. இதென்னண்டா வேண்டாத மாமி யார் கைப்பட்டாலுங் குற்றம் கால்பட்டாலுங் குற்றமெண்டமாரி எல்லாம் நடக்குது. அதுசரி இல்லத் தெரியாமத்தான் கேக்கிறன். ஒரு இறைமை உள்ள நாடெண்டுசொல்லுகினம் நீதி மன்றத்த எதோ பிழையாக் கதைச்சதெண்டு ஒரு முக்கியமான மந்திரி லெவல்ல உள்ளவன மறியல்ல வச்சிருக்கினம். அதெல்லாஞ் சரிதான்..

ஆனா ஒரு நாடாளுமன்றத்தில கொண்டு வந்த மசோதாவையோ சட்டவரைவையோ எரிக்கிறது பாரதூரமான குற்றமெல்லோ... என்னேயிறது. "பேயரசு செய்தாப் பிணந்தின்னுஞ்சாத்திரங் களெண்டு" சும்மாவே சொல்லுறது. முன்னை யொருக்கா நீ குழந்தையா இருக்கேக்க... இல்ல; நீ அப்ப பிறக்கேல்ல... உந்த ஜே.வி.பிக்காறர் ஒரு ஆயுதப்போராட்டம் நடத்தி ஒரே நாள்ள இலங்கை முழுவதையும் அடிச்சவங்கள். அப்ப சிங்களப் பகுதி யெண்டில்ல வடக்க யாழ்ப்பாணம் காங் கேசன் துறைப் பொலிசுற்றேசன் எல்லாத்தையுந்தான். அப்பேக்கை சந்திரிகாவும் சின்னப் பெட்டைதான். ராவோட ராவா ஏதோ கெசகரணம் போட்டமாரி நடந்து முடிஞ்சுது. பிறகு...இரத்தின புரியில ஏழுநாள் இவயடபடையத் தக்கவைச்ச வையுந்தான். அந்த நேரம் சந்திரிகாட தாய் மனிசி இந்தியாவுக்குப் போய் சீனாவுக்க போய் உடன ராணுவங்கொணந்து இவைய அடக்கினது. உது பழையகதை எண்டா லும்... விடுதலைப் புலியள் ஆயுதந்தூக்கினது அதுக்குப் பிறகும் ஒரு வரியம்கழிச்சுத்தான். அப்பயும் எங்கடா எங்கட பொடியளட்ட ஆயுதம்? அதுக்கும் பிறகு வல்லடி வழக்கெண்டு எத்தினையத் தாங்கி வளந்தது இந்தப்போராட்டம்.ம்...பெருந்தொகையான மக்களுக்குள்ள வெளிக்கிட்ட சனதா விமுத்திப் பெரமுனையால தங்களட்ட இருந்த வளத்தில நாலி லொரு பங்கைத் திரட்ட முடிஞ்சிருந்தா இப்ப இலங் கைய இடது சாரி ஆட்சிக்க கொணந்திருப்பினம் தானே.

இப்ப, அப்ப ஆயுதந்தூக்கினவை ஆரும் இருக்கினமே, சும்மாவிடு. ஒரு ஏகேயின்ர நிறத்தை மட்டுங் கண்டவைதானே, முழுசாக் களனியாத்தில கரைஞ்சு, கடலுக்க போனவை. பின்ன இப்ப உள்ளவை, அம்மாவோட சும்மா கூட்டுவச்சவை இவை தங்கட சரித்திரமே தெரியாத் தரித்திரங்கள். மற்றவையட சரித்திரத்தை இவை தீர்மானிக்கவோ. 'கிழவன் செத்து ஆறாமாசம் கிழவி வாசல்படி முட்டி அழுதகணக்கா சுனாமிக் கட்டமைப்புக்க, சமாதானக் கட்டமைப்பப் போட்டுக் கலக்கி கூழ் குடிக்க வெளிக்கிடுகினம். எல்லாத்துக்கும் மேலாலயடா காலங்காலமாக் குழம்பின, அல்லது குழப்பின பேச்சு வார்த்தையள், ஒப்பந்தங்களப் போல இண்டைக்கு குழப்பேலாம பெரிய இட்டு இடைஞ்சல் வந்திட்டுது. ஊர்வழிய பாத்திருப்பாய் சின்னநாய் குலைச்சு பெரிய நாயின்ர தலையில போடுறதை. அது மாரித்தான் இப்ப உள்நாட்டுக்க கொழுவுப்பட்டு உலகநாட்டின்ர தலையில போட்டாச்சு. முடிஞ்சுதே இன்னுமிருக்கடா. இனிமேல் சண்டைபிடிச்சும் எங்கட இராணுவம் வெல்லாதெண்டு முப்படைத்தளபதியே சொல்லிப்போட்டா பிறகு இன்னுமொரு கதை இஞ்ச காதக் கொண்டா சொல்ல, ஜே.வி.பிக்காறர், பிக்கு மாரெண்டு ஒருதருஞ் சண்டைக்குப் போகத்தயா ரில்லயாம். முன்ன ஒருக்கா பிக்குமார் இராணு வத்தில சேர வந்தவையெல்லே ந.... அவையளும் இப்ப 'ரண்' பண்ணிற்றினமாம். ம்... உது ஆரும் ஏழைச் சிங்களச்சனத்தின்ர பிள்ளையளுக்குச் சொல்லுற வீரவசனங்களெல்லோ "தன்ர பண்டம் அரிசி, தங்கச்சிபண்டம் தவிடு"






# குழந்தை இப்போது வேண்டாமா? எண்ணத்தை மாற்றுங்கள்

தற்போது பெரும்பாலான பெண்கள் வேலைக்குச் செல்கின்றார் கள். முதலில் வேலையில் சிறந்து விளங்கி ஒரு நல்ல நிலைக்கு வர வேண்டும், அதன் பிறகுதான் குழந்தை பெற்றுக் கொள்ளவேண்டும் என நினைத்துப் பெரும்பாலானவர்கள், கருத்தடைச் சாதனங்களை பயன்படுத்துகிறார் கள்.

இதன் படி திருமணத்திற்கு பிறகு பலஆண்டுகள் கழித்து குழந்தை பெறவிரும்பும் காலத்தில் கருத்தடைச் சாதனங்களை நீக்கிக் கொள்வதுதான் முதல் [illegible] என நினைத்துக்கொள்கிறா[illegible] இத் தகைய எண்ணம் இருந்தால் அதனை மாற்றிக் கொள்ளுங்கள் என்கிறார் பிரபல குழந்தையின்மை சிகிச்சை நிபுணர் ஜெயராணி!

இந்தியாவின் முன்னணி குழந்தையின்மை சிகிச்சை நிபுண ரான ஜெயராணி மேலும் கூறுவதாவது,

காரணம், நீங்கள் உ[illegible]கள் தொழிலில் சிறந்து விளங்க [illegible] தது 10 ஆண்டுகளாவது [illegible] 30 வயதை கடந்தவரா[illegible]க்கக் கூடும். ஏன் அதற்குப்[illegible] கருத் தரிக்க முடியாதா எனக் கேட்கலாம்.

உடலில் மற்ற உறுப்புக் களைவிட பெண் இனப்பெருக்க உறுப்புகள் வேகமாக முதிர்ச்சி யடைந்து விடுகின்றன. பெண்ணின் நடுத்தர வயதிலேயே மாதவிலக்கு முற்றுப் பெறுதல் வந்து கருத்தரிப் பதற்கான வாய்ப்புக்கு ஒரு முற்றுப் புள்ளியையே வைத்து விடுகிறது.

அதற்கு முன்பு 30 வயதிலிருந்தே கருத்தரிப்பதற்கான வாய்ப்பு கின்றன. அதில் முட்டை உருவாவது முக்கிய இடத்தை வகிக்கிறது.

முட்டை வெளிப்படுவது வயது முதிர்ந்த நிலையில் தன் கணவன் வெளிப்படுத்தும் குறைபாடுள்ள உயிரணுவோடு அது சேர முடியாமல் சிதைவது என பல பிரச்சினைகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றும்.

இவற்றோடு இளவயதை ஒப்பிடும்போது கருத்தரிப்பு சுலபமாகிறது. மாதவிலக்கு முற்றுப் பெற்ற நிலையிலுள்ள பெண்ணுக்குக் கூட, இளம் பெண்ணின் முட்டையை எடுத்து வைத்து கருத்தரிக்க வைக்க முடியும். ஆனால் பெரும்பாலான பெண்கள் அடுத்த பெண்களின் முட்டையை தனது கருப்பைக்குள் வைத்துச் சுமப்பதை விரும்புவதில்லை.

ஆகவே, தாய்மையை விரும்பும் பெண்கள் அதற்காக திட்டமிட சரியான வயது தாய்மையை முழுமையாக அனுபவிக்கச் சிறந்த வயது 20முதல் 30 வயது வரைதான்.

அதற்கு அப்பால் வரும் ஒவ்வொரு வயதிலும் கருத்தரிப்பு நிகழ்வது என்பது சிக்கல்தான். 30 முதல் 35 வயதிற்கிடையில் கருத்தரிக்கும் வாய்ப்[illegible] அதற்கு முன்னதாக [illegible]ருத்த[illegible]தில் இருக்கும் வாய்ப்பை விட இரு மடங்கு தள்ளிப் போகிறது.

குழ[illegible]தைப் பேற்றுக்கும் பெண்ணின் வயதுக்கும் இடையிலுள்ள தொடர்பைப் பற்றி பல ஆண்டுகளுக்கு முன்பே ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு மேற்கொண்டு கருத்தரிக்கும் வாய்ப்புள்ள பல்வேறு வயது நிலைகளைப் பற்றி ஆராய்ந்தனர்.

இதில் அதிகபட்சமாக 19 முதல் 25 வயது வரையில் தான் வெகுவாகக் குறைந்து வரத் தொடங்கி நாற்பது வயதுக்கு மேல் அதற்கான சாத்தியக்கூறுகளே இல்லாமல் போய்விடுகிறது.

பெண்ணின் வயதைப் பொறுத்து அவளது கரு முட்டைகளும் பாதிக்கப்படுகின்றன. உடல் ரீதியாக கருப்பை முதிர்ந்து விடும் நிலை கருத்தரிப்பதற்கான வாய்ப்பைக் குறைக்கிறது.

முப்பது வயதுக்கு மேற்பட்ட நிலையில் செயற்கை முறையில் கருத்தரிப்பு ஏற்படுத்திக் கொள்ளும் பெண்களின் கர்ப்பம் நிலைப்பதில் பல்வேறு சிக்கல்கள் எழுகின்றன குழந்தைபெற ஏற்ற காலம் எனக் கண்டறிந்தனர்.

இதெல்லாம் பெண்ணுக்கு என்றால், நடுத்தர வயதில் ஏற்படும் உடல் ரீதியான பிரச்சினைகள், பழக்க வழக்கங்கள் போன்ற பல காரணிகள் ஆண்களின் உயிரணுக்களின் உற்பத்தித்திறனை வெகுவாகப் பாதிக்கின்றன. இதனால் கரு முட்டையைக் கருத்தரிப்பதற்கும், உத்வேகத்தை, உயிரணுக்கள் கொஞ்சம் கொஞ்சமாக இழந்தும், பலக்குறைபாடுள்ள தன்மையுடனும் காணப்படும்.

ஆகவே, பருவத்தோடு பயிர்செய்யுங்கள். விளைச்சல் சிறப்பாக அமையும்.

அம்மைத் தடுப்பு ஜெர்மன் மிசில்ஸ் எனப்படும் அம்மை நோயானது கருக்காலத்தில் மிகப் பெரிய அளவில் துயரத்தை தரக் கூடிய நோய்களுள் ஒன்று. கருக் காலத்தில் இந்த நோயால் தாயார் பாதிக்கப்பட்டிருந்தால், கருவில் வளரும் குழந்தைக்கு கடுமையான பாதிப்புகள் உண்டாகும்.

குறிப்பாக முதல் 3 மாதத்திற்குள் தாய்க்கு நோய்த் தொற்று ஏற்பட்டிருந்தால் குழந்தையின் இதயம், நரம்பு மண்டலம் ஆகியவற்றின் வளர்ச்சியில் பெரிய அளவில் குறைபாடுகள், பாதிப்புகள் தோன்றும்.

தவிர, இந்த வைரஸ் கருக் குழந்தையை பாதிப்பதால் பிற் காலத்தில் அக்குழந்தை பிறவிக் குறைபாடுகளுடனும், காதுகேளாமை, பார்வைத்திறன் இழத்தல் போன்ற குறைபாடுகளுடனும் பிறக்க வாய்ப்பிருக்கிறது. பெரும்பாலான குழந்தைகள் குறைபிரசவத்தில் பிறக்கின்றன. சில குழந்தைகள் பிறக்காமலேயே சிதைந்து விடுகின்றன. இப்படிப்பட்ட நிலையில் அம்மைத்தடுப்பூசியை போட்டிருக்க வேண்டும். ஒரு வேளை போடப்படாமல் இருந்தால் கருத்தரிக்கும் முன்பு அதைப் போடுமாறு உங்கள் மருத்துவரிடம் கேட்க வேண்டும். இது சாதாரணமான ஊசிதான். இந்த ஊசியைப் போட்டுக் கொண்ட பிறகு அடுத்த 3 மாதத்திற்கு கருத்தரிக்கக் கூடாது என்பதையும் தெரிந்து நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

ஒரு வேளை இந்த ஊசியைப் போட்டுக் கொள்ளாத நிலையில் நீங்கள் கருத்தரித்திருந்து கருக்காலத்தில் வேறு யார் மூலமாவது அம்மைநோய் உங்களுக்குத் தொற்றி இருந்தால் அதைப்பற்றி உடனே உங்கள் மருத்துவரிடம் எடுத்துக்கூறி உடனடியாக இரத்தப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். அம்மைக் கிருமிகள் தொற்றி ஊடுருவி இருக்கிறதா? அவற்றை எதிர்ப்பதற்கு போதுமான எதிர்ப்புச்சக்தி உங்களிடம் இருக்கிறதா? என்பதையெல்லாம் தெரிந்து கொள்ளலாம்.






அமெரிக்காவின் கொலம்பியா விண்கலம் துரதிர்ஷ்டவசமாக விபத்துக்குள்ளானதை அடுத்து, நீண்ட இடைவெளிக்குப் பின்னர் வரும் ஜூலை மாதம் தனது முதல் பயணத்தை தொடங்கவுள்ள டிஸ் கவரி விண்கலத்தின் பாதுகாப்பு அம்சத்தில் நாசா அதிக கவனம் செலுத்தி வருகிறது.

நவீன வசதிகளுடன் கூடிய அதிக பாதுகாப்புடன் இந்த விண்கலம் செலுத்தப் படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிக பாதுகாப்பு..!

## முடிவில்லாப் பயணம்..!



இருபத[illegible]டு ஆண்டுகளுக்கு முன்பாக (1977) விண்ணில் ஏவப்பட்ட அமெரிக்க விண்வெளி ஓடம் வாயேஜர்-1 நமது சோலார் சிஸ்ட(சூரியக் குடும்பம்) எல்லையின் விளிம்பைத் தொட்டிருக்கிறது. சூரியனிலிருந்து சுமார் 8.7 பில்லியன் மைல் தொலைவில் பயணித்துக் கொண்டிருக்கும் வாயேஜர்-1 சூரியனின் ஈர்ப்பு முடிவடையும் ஹெலியோஸீத் என்ற பகுதியில் இருக்கிறது.

நட்சத்திரங்களுக்கு இடையே காணப்படும் மெல்லிய வாயு மண்டலத்தில் வாயேஜர்-1 விரைவில் மோதும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து எல்லையில்லா பிரபஞ்சத்தின் சூனிய வெளியில் வாயேஜரின் முடிவில்லாப் பயணம் தொடரும்.

## ‘சுப்பர் கார்’

பி.எம்.டபிள்யூ நிறுவனம் புதிதாகத் தயாரித்திருக்கும் நாஸ்கா எம்.12 ரக காரையே இங்கு காண்கிறீர்கள். இத்தகைய காரை முதல் தடவையாக 1991 இல் நடைபெற்ற கார்களின் கண்காட்சியில் கண்டோம். அதன் பின்னர் இப்போது பீ12 ரக கார்கள் வெளியாகியுள்ளன. அந்த வகையிலே மிகவும் சக்திவாய்ந்த காராக இது உள்ளது. இதை உண்மையாகவே சூப்பர் கார் என்று பல பத்திரிகைகள் எழுதியுள்ளன. இந்தக்காரின் சிறப்பம்சம் இதை வரைந்தவர்கள் உலகப் புகழ் பெற்ற இத்தாலியைச் சேர்ந்த வடிவமைப்பு நிறுவனம். இதன் இயந்திரம் மிகவும் சக்தி வாய்ந்தது. 185 கி.மீ வேகத்தை சுமார் 4.5 செக்கன்களில் எடுத்து விடும்.





வானொலிகளிலும் மற்றும் பாரிய இயந்திரங்களிலும் ஏற்படும் குறைபாடுகளை (பழுதுகளை) கண்டு பிடிக்க ஏதுவாக மின்காந்தக் கருவி ஒன்றை கண்டு பிடித்துள்ளனர். படத்தில் ரயர் ரியூப்களில் ஓட்டை அல்லது பழுது இருக்கின்றதா என அந்த கருவியை வைத்து அவதானிக கப்படுகிறது.

சுலபமான வழி...!



இது என்ன

அலூரியன் தீவுகளில் கடல் வாழ் உயிரினங்களின் வியாபாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியையடுத்து விலங்கு களின் உரோம வர்த்தகம் அறிமுகப் படுத்தப்பட்டது. இங்கு காணப்படும் ஆர்டிக் இன நரியின் உரோமமே அதன் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இவை கடற்பறவைகளை உணவாகக் கொள்வதுடன் காலத்துக்குக் காலம் இடம் மாறுகின்றன எனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.



விசித்திர பிராணி...!

இங்கு காணப்படும் உருவம் கண்ணுக்கு அருவருப்பை உண்டு பண்ணும் அவலட்சணமானதாகக் காணப்பட்டாலும் இது மூஞ்சூறு இனத்தைச் சேர்ந்த பிராணியாகும். இது தனது உணவைத் தேடிக்கொள்வதில் விசேட திறன் படைத்தது. நட்சத்திர வடிவ முகத்தைக் கொண்ட இந்த மூஞ்சூறு எட்டவுள்ள உணவுப் பொருட்களை விரைவில் முகர்ந்து இனம் காணக்கூடியது. தன்னைவிட பிற உயிரினம் ஒன்று அண்மையாகவோ, தூரத்திலோ நடமாடுவதை உடனேயே தனது உணர்வுகளின் உதவியால் இனம் கண்டுபிடித்து உண்ணும்.




# போர்வைகள் விலகிவிட்டால்

மிக்கேல் வயது 62 கட்டுமரம் வலித்து வலித்து முறுக்கேறிய தன்னுடலை பல்வேறு சிந்தனைக்குட்பட்ட வகையில் கணத்துக்குக்கணம் குறுக்கிக் கொள்கின்றார். நொடிக்கொரு தடவை அவரது சிந்தனை யோட்டத்தில் அந்த விசயமே குறுக்கும் நெடுக்குமாய் குதித்தோடிக் கொண்டிருக்கின்றது.

"இன்றாவது அதை எப்படியா யினும் செய்து விடவேண்டும்." இனந்தெரியாத பயப்பந்தொன்று நெஞ்சை அக்டோபஸ்சாகக் கௌவ வெடித்துப்புறப்பட்ட இருமலொன்றை புறங்கையால் பொத்தி அடக்கிக் கொள்கின்றார். மிக்கேலுக்கு உப்புக்காற்றின் குளிரிலும் உடல் தொப்பையாய் வியர்த்து விடுகின்றது.



உண்ணாப்புலவுக் குடியிருப்பு அடங்கிக்கிடக்கின்றது. கடலின் ஊழையைத் தவிர அந்த நடுநிசி கூட உறங்காமல் கிடக்கின்றது.

மிக்கேல் சற்று ஒருக்கழித்து திரும்பிப் படுக் கிறார்.மெல்லிய குறட்டையில் கிடக்கும் ரொசானியை அவரது பார்வை துளைக்கின்றது. அவளைப் பார்க்கப் பார்க்க இதய அறையில் ஆயிரம் அலவாங்குகள் கூர் பாய்ச்சி துளைக்கின்றன. வலி மிகுதியால் வழமை போலவே விம்மி வெடிக்கின்றார்.

ஆயிரம் ஆயிரமாய் எரியும் நினைவுத் துகள்களைத் துடைத்து எறிந்துவிட்டு மெல்ல மெல்ல தன் காதுகளை கூர் தட்டிக்கொண்டு உன்னிப்பாகின்றார் மிக்கேல்.

ஓ... சின்னதொரு அசுமாத் தம்கூட இல்லை. இரவு பூச்சிகளின் வேகமாய்த் துடிக்கும் தன் இதய ஓசையைத் தவிர அனைத்தும் நிசப்தம்.

இதுதான் தருணம்.

அவரில் ஒரு அசாதாரண பரபரப்புத் தொற்றிக்கொள்ள அருகே கிடைத்த கிழிந்த தலையணைகளை யும் துணிகளையும் எடுத்து தான் படுத்திருந்த பாயின் மீது அடுக்கிய படியே சுற்றும் முற்றும் முற்றுகையிடுகின்றன அவரது கண்கள்.

அப்பாடா ரொசானி நல்ல நித்திரை!..

நிம்மதிப் பெருமூச்சொன்று நீண்டு வெளிப்பட தனது போர்வை யால் தன்படுக்கையை மூடி போர்த்துகின்றார். நீட்டி நிமிர்ந்து ரொசானி படுத்திருக்கும் சாயலை கண்ணுற்றதும், பரம திருப்தியோடு மீண்டும் ரொசானியைப் பார்க்கின்றார்.

மிக்கேலின் இதழோரம் ஒரு நமட்டுச்சிரிப்பு.

மீண்டும் அந்த நினைப்பு. எல்லாம் தோதாகிட்டுது. இப்பவே அதை செய்து முடித்து விடவேண்டும்.

மனசுக்குள் ஆயிரம் சுனாமிப் பிரளயங்கள். உடல் நடுங்க உளம் குறுக மூலையில் சாத்திக்கிடக்கும் மண்வெட்டியை ஓசைபடாது அவரது கை பற்றிக்கொள்ள துடிக்கும் இதயம், துவளும் உடல், மருளும் கண்களோடு அருகேயுள்ள மணல் புட்டியை நோக்கி நகர்கின்றார் மிக்கேல்.

"ரொசானி உனது கதைக்கு இன்றோடு ஒரு முற்றுப்புள்ளி"

அவரது இதழோரம் மீண்டும் ஒரு நமட்டுச்சிரிப்பு.

அவரை வைத்தகண் வாங்காமல் உற்று நோக்கியபடியே இருக்கின்றன ஒரு சோடிக் கண்கள்.

கிருபா அந்த சாய்மனைக் கதிரையில் தளர்வு நிலையில் இருக்கின்றான். கண்கள் மூடிய நிலை. ஆழ்ந்த சீரான சுவாசம்....

மெல்லிய அசைவுகள் அவனை உயிருள்ள ஒருவனாக அடையாளமிடுகின்றன.

நான் உண்ணாப்புலவில் சுனாமி அனர்த்த உள ஆற்றுகைக்காக போடப்பட்டுள்ள அந்த பிளாஸ்ரிக் கொட்டகையின் முகப்பை அடைந்து எட்டிப்பார்க்கின்றேன்.

தன்னை மட்டுமே நினைத்து சூழலை அதன் சாயலை மறந்து தனக்குள் தோற்று தனக்குள் ஜெயித்து தனக்குள் இருண்டு தனக்குள் ஒளிர்ந்து தன்னையே தனக்குள் காணும் முயற்சியின் முற்றிலிருக்கும் கிருபாவால் என் வருகையை உணர வாய்ப்பில்லை.

செருமிப் பார்க்கின்றேன்.

கிருபாவின் சித்த விவேகமும் உணர்வு விவேகமும் விழித்துக்கொள்ள என்னை ஏறெடுக்கின்றன அவன் கண்கள்.

குழப்பிப்போட்டன் போலக் கிடக்கு..? மன்னித்துக்கொள். நான் கண்களால் யாசிக்கின்றேன்.

பிரச்சினையில்ல வா. என்ன விஷேசம்? எப்படி இருக்கின்றாய்?

ஒன்றுமில்லை. நேற்று ஒரு சம்பவம் என் கண்களை என்னா லேயே நம்ப முடியவில்லை. அதை உன்னிடம் கூறாவிட்டால் தலை வெடிக்கும் போலக்கிடந்தது. அதுதான்.

கிருபாவின் ஆழமான அவதானிப்பு எனக்குள் ஆர்வத்தை அளித்தது.

நேற்றிரவு ஒரு மணியி ருக்கும்... நீ அடிக்கடி போய் கதைப்பாயல்லோ அந்த மிக்கேல் கிழவன். அவன் மண்வெட்டியோட வெளிக்கிட்டுப் பதுங்கிப்பதுங்கிப் போறதைக் கண்டனான்.

அந்தச் சாமத்தில இந்த கிழம் ஏன் மண்வெட்டியோட போகுதென்று நான்பின் தொடர்ந்தனான். அந்தக் கிழவன் மணல் புட்டியொன்றை வெட்டிக்கிளறி எதையோ தோண்ட ஆரம்பிச்சிட்டுது.

கிருபா என்னை ஆழ்ந்து உற்று நோக்குகின்றான். அவனது அகக்கண்களும் புறக்கண்களும் என் ஐம்புலன்களையும் ஆராதிக்கின்றன. எனது உடல் புல்லரித்து வியர்வை சொட்டி முகம் இருள் அப்பிக்கொண்டதை அவன் புரியத்தொடங்கினான்.

அத்துடன் நான் அமைதியானேன். ஒருவேளை இவனுக்கும் மிக்கேலுக்கும் எதுவும்?.. நான் முடிவெடுத்துக்கொண்டேன். இருவரையும் என் கண்

**மா.பரமேஷ்வரன்**

வட்டத்துக்குள் வைத்து நிழலென தொடர்வதென்று.

ரொசானி நீ வித்தியா சமானவள். நீ நடந்தால் புல்லுக்கூட சாகாதாம். குறும்பு ததும்பும் உன் விழிகளில் குவிந்திருக்கும் கனிவு சதா குறுகுறுவென துடுக்குத்தனமாக கூவும் உன் குரல் யாரோடும் முரண்படப்போகாத உன் நிறைந்த மனநிலை எப்போதும் நல்லதையே நினைக்கும் மனம், அறிமுகமில் லாதவர்களிடம் கூட நீ அடிக்கும் அர்த்தமுள்ள அரட்டை. கடலின் மடியில் கடற்படைக்கு காவு கொடுத்த கணவனை உன் இரு பிள்ளைகளிலும் கண்டு கழித்து அவர்களே வாழ்வென்றாகிப்போன உன் தியாகம்.

இப்படித்தானே உன் வாயில் ஒன்றிரண்டும் அயலார் வாயில் அரைவாசியுமாய் பெற்ற தகவல்கள்!

உன்னைச் சந்தித்த தடவைகளில் ஒரு தடவை கூடுகிறதே தவிர உன் உளநெருக்கீடு குறைகிறதில்லையே?

உளவளத்துணையில் எத்தனையோ நுட்பங்களைப் பயன்படுத்தியாகிவிட்டது. ஏன் கடந்த திங்கள் உளநோய்களை இனங்காணும் சிகிச்சைக்கும் அனுப்பியாகிவிட்டது. அடுத்த நிலைக்கு நகர மறுக்கின்றாயே?

ஒன்று தெரியுமா?

கடைசியாக உன்னைச் சந்தித்ததில் எனக்கோர் அர்த்தம் கிடைத்தது! நீ இனி பேசா மடந்தையாய் பேயடித்த குழந்தையாய் இருக்க மாட்டாய் என்றே நினைக்கின்றேன். உன்னை பேச வைப்பேன். இப்போதே... இன்றே!... கிருபா தனக்குள் முடிவெடுத்துக்கொள்கின்றான்.

பிற்பகல் நான்கு மணி கடலின் இரைச்சல், காகங்களின் கச்சேரி கடல்வந்து கழுவிப்போன மாறா எச்சங்கள், ஆங்காங்கு சிதறிக்கிடக்கும் சிதிலங்கள், உடைவுகள், கிழிவுகள், சிதைவுகள் அத்தனையும் கடந்து உண்ணாப்புலவு குடிசையை நோக்கி நகர்கின்றான் கிருபா.

"நேற்று கிளிஞ்சல்களைப் பொறுக்கி மகிழந்த கைகளில் இன்று கிடைப்பதென்னவோ என் உறவுப்பிணங்கள் மட்டுமே"

என எழுதி அழுத அவன் கவிதையொன்று மின்னலாய் தெறித்து மறைய மிக்கேலின் வீடடைகின்றன கிருபாவின் கால்கள்.

அவனைத் தொடர்ந்து நானும் அவனறியாமல் அவன் பின்னால் செல்கின்றேன். கிருபா நீ மாட்டினாய்?

கதவு திறந்து கிடக் கின்றது. எல்லாம் போட்டது போட்ட படியே கிடக்கின்றன.சூழலின் ஓசை யினைத் தவிர அனைத்தும் அவ் வீட்டினுள் அமைதியை அரங்கேற்ற....

மிக்கேல் ஐயா.. மிக்கேல் ஐயா... கிருபா கூப்பிடுகின்றான். என்ன நடக்கின்றதென்ற ஆர்வக்கோளாறோடு மெல்ல அருகேயுள்ள பனையின் பின்னால் பதுங்கிக்கொள்ள உள்வீடு ஒட்டுமொத்தமாய் என் பார்வை வலைக்குள்.

ரொசானி ஒரு மூலையில் செதுக்கிய சிலையாய் அசையாமல் உட்கார்ந்திருக்கின்றாள் நிலைகுத்திய அவள் பார்வை பயத்தைத்தர கிருபா மெதுவாய் நகர்ந்து அவள் நேர் எதிரே அமர்கின்றான்.

ரொசானி.... மிக்கேல் ஐயா எங்கே போட்டார்?

கிருபாவின் குரல் தொனி யில் எக்கச்சக்கமான கனிவு கலந் திருப்பதைக் காண்கின்றேன்.

அவள் சாடையாய் விழி சிரிக்கின்றாள் தெரியாது என்ற பொருள் போலும்.

என்ன மாதிரி எப்படி இருக்கிறீங்க? - அமைதி. மதியம் சாப்பிட்டனீங்களே?அதே நேர்ப் பார்வை. அமைதி எதைப்பற்றி யோசிக்கிறீங்கள்? அதே அசையா நிலை, அதே அமைதி.

வழமைபோல எத்தனை எத்தனையோ கேள்விகள்.

வழமைபோல அத்தனைக்குமான விடைகளும் அவள் தொண்டையினுள்ளேயே தான்.

கிருபா அவளையே பார்வையால் நனைத்தவாறு திரும்பிப் பார்க்கின்றான். வியர்வையில் வழியும் தன்னுடம்பை துண்டால் துடைத்தபடி மிக்கேல் கிழவன் உள்ளே நுழைய... அவர்கையில் ஏதோவொரு பொதி.

கிழவரின் பார்வையும் கிருபாவின் பார்வையும் ஒன்றாய் சந்தித்து ஒரு கணம் நிலைத்து கலைந்து போவதை நான் கவனிக்கின்றேன். அதில் ஆயிரம் அர்த்தங்கள்....

ரொசானி நீங்கள் கதைக்க மாட்டீர்களா? நீங்கள் எவ்வளவு கதைக்கிறீங்களோ உங்களுக்கு இப்ப அவ்வளவும் நல்லது. எனக்குத் தெரியும். நீங்கள் கதைப்பியள் என்று நான் நம்புறன். ரொசானி உங்களுக்கு மிகமிக விருப்பமான ஒன்று என்னிடம் இருக்கிறது. அது உங்களுக்குத் தேவையா? அவளது முகத்தில் நொடியில் சில மாற்றங்கள் அவளது கண்கள் கேள்வியோடு கிருபாவை நிமிர்ந்து பார்க்கின்றன. அதிலொரு மினுமினுப்பை, ஒளிர்வை பிரகாசிப்பை அவன் காண்கின்றான்.

மிக்கேல் ஐயா!"கொண்டு வாருங்கோ அதை"

இப்போது ஆவலும் பீதியும் மேலிட நான் பனை மரத்தினின்று விலகி என்னையறியாமல் அவ்வீட்டின் வாசலை அடைகின்றேன்.

அடப்பாவிகளே! நீங்கள் இரண்டு பேரும் பில்லி சூனியமே செய்யிறியள், அதை என்று இவன் எதைக்கொண்டு வரச்சொன்னான். ஒருவேளை.. ஒருவேளை அது ரொசானியின் பிள்ளைகளின் பிணங்களோ?...

மிக்கேல் கிழவன் அப்பொதியினைத் தூக்கி வருகின்றார். கூடவே ஒரு சிறு துர்மணம். இப்போது கிருபா அதை வாங்கி அவள் முன்னே வைக்கின்றான்.

“பிரித்துப்பாருங்கோ ரொசானி”

இது... இதுதான் நீங்கள் தினந்தோறும் உங்களுக்குள் செத்து உங்களுக்குள் தவித்து உங்களுக்குள் அழுது தேடி உங்கள் உயிரோடு உணர்வோடு எண்ணத்தோடு ஒட்டிக்கொண்ட உருவங்கள் சுமந்த..

திடுக்கிட்டுத் திரும்பிய ரொசானி ஆவல் மேலிட அப்பொதியை பிரிக்கத் தொடங்குகின்றாள்.

சோர்ந்திருந்த அவள் உள்ளத்திலும் உடலிலும் ஒரு மின்னோற்றத்தைக் கொடுத்திருக்க வேண்டும் கிருபாவின் வார்த்தைகள்.

கிருபா அவளை உன்னிப்பாய் அவதானிக்க மிக்கேல் கிழவன் ஒதுங்கி நிற்க. நானும் என் மனக்கட்டுக்கள் பிரிபடுகின்ற உணர்வோடு ஸ்தம்பிக்கின்றேன்.

அதோ... அதோ அதனை வெளியே எடுத்துவிட்டாள் ரொசானி அது.... அது... ஒரு நீண்டதொரு போர்வை... அவ்வளவுதான்!

பெருங்குரலெடுத்து குளறியழுகின்றாள். அவள் அந்தப்போர்வையை தன் தோளிலும் மடியிலும் மாறிமாறி போட்டபடி துவண்டு விழுகின்றாள். உருண்டு விழும் கண்ணீரில் ஒரு உலக மகா சோகம், “அட எங்கேயிருந்து புறப் படுகின்றது. இவ்வளவு கண்ணீர்?” விம்மி வெடித்து, சீறிச்சிதறி அழுத அவள் சற்று நேரத்தில் அப்போர்வையை இஞ்சிக்கொரு முறை கொஞ்சிக்கொஞ்சியே குளறுகின்றாள்.

என் கண்கள் என்னை யறியாமல் சிந்த நிமிர்ந்து பார்க்கின்றேன். மிக்கேல் கிழவன் துண்டால் தன் கண்களைத் துடைப்பது தெரிகின்றது.

கனிவான பார்வையோடு ரொசானியை சுதந்திரமாய் இயங்க விட்டபடியே கூர்மையாய் அவதானித்துக் கொண்டிருக்கின்றான் கிருபா.

அவன் முகத்திலொரு வெற்றிப்புன்னகை அலை மோதுகின்றது. ரொசானி கண்ணீரோடு நிமிர்கின்றாள். நன்றி...நன்றி... அட ரொசானி கதைக்கத்தொடங்கிவிட்டாள்.

இரவு எட்டுமணி. நான் கிருபாவின் பிளாஸ்ரிக் கொட்டகைக்குள் நுழைகின்றேன். எனக்குத் தெரியும் நீ வருவாய் என்று உன் சந்தேகங்களுக்கு இன்னும் போதிய விடை கிடைக்கவில்லை என்பதைப் புரிந்துள்ளேன்.

ரொசானி விவேகமானவள். அந்தப்பலமே கணவனின் இழப்பை இயல்பாய் எடுத்துக்கொண்டு தனது பிள்ளைகளின் வாழ்க்கையோடு அவளால் ஒத்துப்போக முடிந்தது. அவள் தன்னிரு பிள்ளைகளையும் பிரிந்து ஒரு கணமேனும் வாழ்ந்திருந்து அறியாதவள். அவள் உள்ளம் முழுவதும் அன்று பொங்கிப் போயிருந்தது புத்திர பந்தம். இன்று புதைந்து போயிருப்பது சித்திர பந்தம். புரியவில்லையா?

ரொசானியும் அவள் பிள்ளைகளும் அப்போர்வைக்குள் தான் உறங்குவார்கள் அந்த மிருதுவான மெல்லிய பஞ்சுப் போர்வை இரவினில் அவர்கள் மூவரையும் பிரியவிடாது பாதுகாத்த உறவுப்பாலம். அந்தப்போர்வை மீது நாளாக நாளாக அவள் மிகுந்த அன்பு செலுத்த ஆரம்பித்தாள். காரணம் அந்தப்போர்வையை அவளைப்போலவே அவள் பிள்ளைகளும் நேசித்ததுதான்.

சுனாமியின் கோரத் தாண்டவத்தால் ரொசானி எப்படியோ உயிர் தப்பிவிட்டாள். ஆனால் வீடு இடிந்து வீழ்ந்து அவளின் கண்மனிகள் இருவரும் அப்போர்வைக்குள்ளேயே நசிந்து புதைந்து இறந்துபோயினர்.

பிள்ளைகள் இறந்ததும் அவள் அழுதாள், கதறினாள் அந்தப்போர்வையோடு போர்வையாய் தன் பிள்ளைகளின் உருவங்களும் இரத்தத்தினால் பதியப்பட்டிருந்த சுவடுகளைக்கண்ட இவள் அது முதலாய் தன் உயிரின் ஒரு பகுதியாய் அப்போர்வையை நினைக்கத்தொடங்கினாள். அப்போர்வையினைப் போர்த்தியபடியே சதா நடமாடத்தொடங்கினாள். அவள் பிள்ளைகள் அவள் அணைப்பில் இருப்பதாக ஒரு விசித்திர நினைப்பு அவளுக்குள். இதைப்பார்த்த ரொசானியின் பேரக்கிழவன் மிக்கேல் ஒரு நாள் அவளுக்குத் தெரியாமல் அப்போர்வையை எடுத்துச்சென்று புதைத்துவிட்டார். காரணம் ஓரிருவர் ரொசானியை விசர் என்று விளித்ததே. போர்வையின் புதைவோடு அடங்கத்தொடங்கியவள் தான் ரொசானி.

நேற்றுவரை அவள் இவ்விழப்பையும் தாங்கமுடியாமல் படிப்படியாகக் கொஞ்சம் கொஞ்சமாக ஒன்றையும் வெளிப்படுத்தும் திராணியோ, சக்தியோ இன்றி ஒரு தீவிர மன அழுத்தத்துக்கு உட்பட ஆரம்பித்தாள்.

அதன் பின்பு நடந்தது தான் உனக்குத்தெரியுமே.

ரொசானி விவேகமான ஆளுமையுடையவள். இன்று ஒரு வார்த்தை கதைக்கத் தொடங்கிவிட்டாள். நாளுக்குநாள் ஒன்றாய் இரண்டாய் ஒன்பதாய் ஐம்பதாய் ஆயிரமாய் அவ்வார்த்தைகள் நீளும். அவ்வார்த்தைகள் அவளை வருந்த உதவிடும். நானும் அதற்கு துணைபோவேன். “தனியே உணர்வு விவேகம் வெற்றி தராது, தனியே அறிவு விவேகமும் வெற்றி பெற்றுத்தராது” எப்போது இது இரண்டும் இணைகின்றதோ அப்போதே ஆற்றுப்படுத்துதலில் பெருவெற்றி ஒன்று பிரகடனப்படுத்தப்படுகின்றது.

வெகு சீக்கிரம் ரொசானி அப்போர்வையினை தூக்கி எறிவாள் கைகளால் மட்டுமல்ல மனதிலிருந்தும்தான். தெளிந்த மனதோடு கிருபாவிடமிருந்து விடையேகி புறப்படுகின்றேன். ரொசானியின் உருவம் மெல்ல மெல்ல என்னுள் வியாபித்து பரவுகின்றது. நானும் காத்திருக்கின்றேன். ரொசானியின் தூக்கியெறியப்போகும் அந்நாளுக்காக..

## காலகள் பற்றி...

### ஓசையின் உறுதி

‘செவ்வரத்தம் பூவுக்கும்
காலடிகளின் சப்தம் கேட்கிறதாம்’
ஆரோ ஒரு அயல் நாட்டு விஞ்ஞானி
ஆய்வுசெய்து சொல்கிறான்.

என் காலடியின் ஓசை...
என் நிலமெங்கும் கேட்கும் என்பதற்கு...
விஞ்ஞானிகளின்
ஆய்வு ஒன்றும் தேவையில்லை.

நீ புதைத்த மிதிவெடிகளில்
என் கால் போகவில்லையெடா...
நான் வரிந்த
இதய உறுதியில் போயிற்று
இதய அடிகளின் சப்தம் இருக்கும்வரை
என் காலடி ஓசை
உன்னை உறுத்திக்கொண்டே இருக்கும்.

### அந்த நிலவும் அவளும்

தெளிந்த நிலவில்
நட்சத்திரங்கள் கூடிய ஒரு பொன்னிரவில்
உண்மையில்-
வா ஓடிப்போவோம்
என்றாள் என் மைதிலி.

வருகிறேன் என் செல்லமே!
காலம் பூராவும்
இதற்காகத்தானே காத்துக் கிடந்தேன்.
என் மைதிலியே
ஒரே ஒரு திருத்தம்...
“என்னால் ஓட முடியாது
ஏற்பாயா....?”

### கால்கள் பற்றி மேலும் சில வரிகள்

நண்பனே நினைவு கொள்கிறாயா.....
நாம் ‘கிளித்தட்டு’ விளையாடியது?

ஒரு கோட்டில்... சமாந்தரமாய்
இருகால்களும் நிற்கவேண்டும்
அப்போது தான் ‘அடி’ சரி.

இப்போது நிற்க முடிகிறதா உன்னால்...?

உணர்வு எங்கோ போகிறது
கால் எங்கோ போகிறது
எனது கால் எனக்கே சொந்தம் இல்லை.
யாரோ வைத்த கால்; அப்படித்தானே...!

இருக்கட்டுமேன்
அதனால் என்ன...?
இதயத்தையும் உணர்வையுமா
இழந்து தொலைத்தேன் நான்...?

ஒரு கோட்டில் சமாந்தரமாய்
என்னுடைய எல்லாமுமே நிற்கும்.
நான் அடிக்கின்ற ‘அடி’ சரிதான்.

க. ஆதவன்

## வழுமை மறுப்பு

இராணுவமே வெளியேறு
ஊர்விட்டு....

இன்று...
வழமை மறுப்பு.
பணி புறக்கணிப்பு.
போக்கு வரவு தடை.

கோபம் எம்மில்
எகிறியெழ...
நெஞ்சில் எரிந்த தீ
வீதிகளையும் குறுக்கறுத்தும்
விலாசி எரிந்தது.

முதுகில் அம்மைத் தழும்புகளாகி
தார் வீதிகள்....
முன்னை எழிலிழந்ததன்றி
கண்டமிச்சம் ஒன்றுமில்லை.

தார் வீதிகள் உருகியதளவிற்குக் கூட
எவர் மனமும் உருகவில்லை
எங்களுக்காய்?



வேலணையூர் சுரேஷ்



## குறுங்கதை

## பற்றுள்ள மனிதர்...

“சுமதி...சுமதி...”

“என்னம்மா...? கத்திறியள்...” என அவள் சலித்துக்கொண்டாள்.

“இஞ்ச பிள்ள; அவன் தம்பிக்கு உடுப்பெடுக்கோணும்; மதிக்கு உடுப்பெடுக்கோணும்; உனக்கும் உடுப்பு எடுக்கவல்லோ வேணும். வேகமா வாவன்”

“உங்களோட பெரிய கரச்சலம்மா” என்றவாறு சுமதி அவளது அலங்கார அறையை விட்டு குட்டித் தேவதையாய் வெளியே வந்தாள்.

நாளைய தைப்பொங்கலை குடும்பமே கொண்டாடும் முயற்சியில் முதல்கட்டமாகயாழில் பிரபல்யமான புடவைக்கடை ஒன்றிற்குள் சுமதியும் அவள் அம்மாவும் நுழைந்து கொள்கிறார்கள். புடவைகளைத் தெரிவதில் சுமதியும் அவள் அம்மாவும் ஒருபுறம் வேகமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

திடீரென பதினெட்டு அல்லது பத்தொன்பது வயது மதிக்கத்தக்க அரும்பிய மீசையுடன் வேர்க்க விறுவிறுக்க ஓடிவந்து அந்த புடவையகத்துக்குள் ஓர் இளைஞன் நுழைந்து கொள்கிறான். இப்பொழுது மூச்சை நிதானமாக இழுத்து விடுகின்றான். சுற்றியுள்ளவர்களை அவதானிக்கின்றான். நெற்றியில் வடிந்த வியர்வையை இடதுகையால் துடைத்து விட்டுத் திரும்ப:

“தம்பி ஜோன்; என்னடா...!? என்ன...!!? எனப் படபடத்தார் அந்தக் கடை முதலாளி.

“ஐயா: ஆமி துரத்துறான். அது தான்...”

“அடேய் உள்ளுக்க வா... உள்ளுக்க வாடா...”

எனத்தன்பிள்ளையை அக்கறையோடு அழைத்துப்போவது போல தோளிலே கையைப்போட்டவாறு உள்ளே அழைத்துச்சென்றார். கொஞ்சநேரத்தில் திரும்பிக் காசாளர் மேசையில் வந்தமர்ந்த ஜோனைப் பார்த்தால் தீட்சை கேட்ட இந்துமதப் பையன்போல நெற்றி நிறையத் திருநீற்றுக் கோடுகள். நடுவே சந்தனக் குவியலும் வலது காதிலே தேமா மலருமாக புதிய தோற்றத்தில் காட்சியளித்தான்.அந்நேரம் உள்ளே வந்த ஓர் இராணுவவீரன் ஒருவன், “ மே கொள்ள ஆவாத ” (இஞ்ச ஒரு பொடியன் வந்தவனா...?) என்ற கேள்விக்கு முதலாளி “மே கௌர்த்நா சேர் ” (அப்பிடி ஒருத்தரும் இல்லசேர்) எனச் சிங்களத்திலேயே பதிலளித்தார். இவர்களின் உரையாடலை ஒண்டும் தெரியாதவன் போல ஜோன் கேட்டுக்கொண்டு கணக்குகளை பரிசீலனை செய்பவன் போல பாவனைசெய்து கொண்டிருந்தான். புடவைக்கடையை நோட்டமிட்ட இராணுவத்தினர் அமைதியாக வெளியேறினர்.

“தம்பி ஜோன்; கவனமா போடா. எத்தின தரம் உனக்குச் சொல்லீருக்கிறன். கண்டபடி திரிஞ்சு மாட்டடாத”

“ ஓம் ஐயா. போட்டுவாறன் ஐயா. நன்றி ஐயா” என இருகைகளையும் பற்றி குலுக்கிவிட்டு புன்னகையை உதிர்த்தவாறு புறப்பட்டான். “இவர் ஆமிக்குள்ள எவ்வளவு காலம் கடை வைச்சிருக்கிறார். ஒரு போராளியின்ர உயிரக் காப்பாத்தி இருக்கார். இவர மாதிரித் தேசப்பற்றுள்ள எத்தின பேர் இல மறகாயா இருந்து உதவுறாங்க. உண்மையில இவையெல்லாம் பெரிய தேசப்பற்று மனிசர் தான்” என்ற அவளது நினைவை, “பிள்ள சுமதி; காசக் குடு, போவம்” என்ற தாயின் பேச்சு நிறுத்தியது. “ஓமம்மா” என்றவாறு புறப்பட்டாள்.

-வி.தேவபாணு-




## உங்களுக்குத் தெரியுமா?

★உலகிலேயே துணியில் செய்தித்தாள் வெளியிடும் நாடு ஸ்பெயின்.

★உலகில் மிக நீண்ட நாள் வாழும் மிருகம் முதலை. இவை 300 ஆண்டுகள் வரை வாழுகின்றன.

★உலகிலேயே சனாதிபதிக்கு ஒரு வருட காலம் பதவிகொண்ட நாடு சுவீட்சர்லாந்து.

★முதன் முதலில் காகிதத்தினால் ரூபாய் நோட்டை அச்சிட்டு வெளியிட்ட நாடு சீனா.

# பறக்கும் தவளை

தவளைகளில் பறக்கும் தவளை என்று ஒரு இனம் உள்ளது. தென்கிழக்கு ஆசியாவில் இந்த இனம் காணப்படுகிறது. இது ஏழு சென்ரி மீற்றர் நீளம் வரை வளரக்கூடியது. இதன் கால் விரல்களிடையே மெல்லிய சவ்வுப் படலம் உள்ளது. மரங்களில் வாழும் இரவு இரை தேடியான இதன் உணவு வெட்டுக் கிளிகள். மரத்தில் ஒரு கிளையிலிருந்து இன்னொரு கிளைக்கு இரண்டு மீற்றர் இடைவெளி தூரம் வரை சர்வ சாதாரணமானதாகத் தாவும். இவ்வாறு இது தாவும் போது விரலிடை சவ்வு மென்படலத்தை பரப்பி வைத்துக் கொண்டு தாவுகிறது. அப்போது பார்ப்பதற்குப் பறப்பது போலிருக்கும் உண்மையில் இது காற்றில் சறுக்கிக் கொண்டுதான் செல்லுகிறது. இந்தத் தாவல் முடிந்து அடுத்த கிளையில் இறங்கும்போது இதன் விரலிடைச் சவ்வுப் படலம் சிறிய பரசூட் போலச் செயல்படுகிறது. இதன் காலடியில் உறிஞ்சு வட்டுகள் உள்ளன. இவற்றின் உதவியால் மரக்கிளைகளையும் மரப் பட்டைகளையும் நன்றாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுகிறது. உடலின் அடிப்புறத்தை வளைத்துத் திருப்புவதன் மூலம் 15 மீற்றர் தூரம் வரை இதனால் இம்மாதிரி பயணம் செய்ய முடியும்.

இவை தங்கள் நிறத்தை மாற்றிக் கொள்ளக் கூடியவை. நல்ல வெயிலில் பச்சை நீல நிறத்திலிருக்கும்; மாலையில் பச்சையாக மாறும்; இரவில் இதன் நிறம் கறுப்பாக மாறிவிடும். நம் நாட்டிலும் இந்த இனத் தவளைகள் உள்ளன. தவிர மலேஷியா, சிறிலங்கா, சுமத்ரா, ஜாவா, போர்னியோ தீவுகளிலும் காணப்படுகின்றன.



இந்த இனம் தண்ணீரில் முட்டைகளிடாது மரங்களின் இலைகளில் இது முட்டைகளிடுகிறது. முட்டைகளுடன் அல்புமின் என்ற பொருளையும் வெளியிடுகிறது. ஆண் தவளை இதைக் காலால் அடித்துத் துவைத்து நுரைபோல் உண்டாக்குகிறது. இந்த நுரை வெளிப்புறம் கெட்டியாகவும் உட்புறம் ஈரபபதத்துடனுமிருக்கும். முட்டைகளும் அவற்றிலிருந்து வெளிவரும் தலைப் பிரட்டைகளும் இந்த நுரைக் கூட்டில் மழைக்காலம் வரை இருக்கும். மழை வந்ததும் மழை நீர் கீழேயுள்ள நீர்நிலைக்கு இவற்றை அடித்துச் சென்றுவிடும்.

## ஜோடி சேருங்கள்




## சொற்சிலம்பம் - 92

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கை | ப் | வ | மு | ன் | தி | ம் |
| டு | கு | நீ | பா | ந் | மி | பு |
| று | லா | தி | கோ | னி | ணி | ன் |
| ந் | அ | பி | ரி | டோ | சீ | இ |
| செ | ட் | தா | ஷ் | ர் | ரி | னை |
| றா | ப | யா | சா | ஸ் | ரு | ண |
| ளு | வ | மோ | ன் | கி | த் | ம |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 89 இன் விடைகள்

01. பில்கிளின்டன்.

02. சுறா.

### சொற்சிலம்பம் - 90 இன் பரிசுக்குரியவர்

கதிரமலை. முகுந்தினி,
குடத்தனை மேற்கு,
யாழ்/அ.த.க. பாடசாலை,
வடமராட்சி கிழக்கு.

### சொற்சிலம்பம் - 90 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. கா.அபிநயன்,
உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.

02. ப.நாகேஸ்வரி,
அச்சுவேலி,
யாழ்ப்பாணம்.

03. தே.றஜனி,
இல:-214/01,
விசுவமடு மேற்கு.

04. யோ.சயந்தினி,
இல.62A சிவபுரம்,
வவுனிக்குளம்.

05. ஆ.தயாவதி,
கிழக்குத்தெரு,
வேம்படி.

06. கி.பிரசாந் தரம் -3,
மு/புதுக்குடியிருப்பு,
ஸ்ரீ/சுப்பிரமணிய வி.சாலை.

07. ச.கௌரி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

08. அ.பிரவீன்,
மு/புதுக்குடியிருப்பு
மத்தியக்கல்லூரி.

01. இலங்கைக்கு பொருட்களை விற்பனை செய்யும் முதல் நிலை நாடு?

01) ....................................

02. நன்நூலை எழுதியவரின் பெயர்?

01) ....................................

சொற்சிலம்பம்-92
ஈழநாதம்,
யாழ்சாலை.
கிளிநொச்சி.

பெயர் :- ....................................

முகவரி :-....................................

....................................

# ஒட்டப்பந்தயம்...

## பகுதி-10



# வீடு

# அன்பும்... பண்பும்...

அன்பு என்ற இந்த புனிதமான வார்த்தையை புரிந்துகொள்பவர்கள் மிகச் சிலரே. அன்பும் பண்பும் மனிதருடைய மிகப்பெரியதேவை என வர்ணிக்கப்படுகின்றது. சிலர் இந்த இதமான உணர்வில் தழைத்தோங்குகிறார்கள். சிலரே அது கிடைக்காமல் சோர்வுற்று கடைசியில் சாவை தழுவுகின்றார்கள். நாம் நம்மை எப்படிப் பட்டவர்களாகக் கருதுகிறோம் என்பது முக்கியமல்ல. அடுத்தவர்கள் நம்மை எப்படிக்கருதுகிறார்கள் என்பதுதான் முக்கியம். மற்றவர்களுடைய கருத்துக்கு மதிப்பளித்து அவர்களிடம் அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொள்ளவேண்டும்.

இது நம் எல்லோருக்கும் இன்றியமையாத ஒன்று. நாம் மற்றவர்களிடம் கரிசனை காட்டுகிறோமோ, அவர்களோடு அன்பாக நடந்துகொள்கிறோமோ, பண்பாக நடந்துகொள்கிறோமோ என்பதை பற்றி நாம் நம்மையே கேட்டுக்கொள்ள வேண்டும்.

முதலில் நாம் நம்மைப் பற்றி சிந்திக்கவேண்டும். நமக்கு நாமே அளவுக்கு மிஞ்சிய முக்கியத்துவம் கொடுத்துக்கொள்ளக் கூடாது. அதற்காக என்ன பேசுகிறோம்? என்னசெய்கிறோம்? என எதற்குமே முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லை என அர்த்தமாகாது. நம்மை நாமே அளவோடு மதிப்பிட்டு பலரின் உற்சாகமூட்டும் உதாரணங்களுக்கு தலைசிறந்த முன்மாதிரியாக இருக்கவேண்டும். தன்னடக்கத்தையும் மதிப்பையும் காத்துக்கொள்ளவேண்டும். பெருமை என்னும் நெருப்பு நம்மிடம் இருந்தால் அதை உடனே அணைத்துவிட வேண்டும். உண்மையில் நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோமோ அதற்கு மிஞ்சி நினைத்துக் கொள்ளும் அளவுக்கு வலையில் ஒருபோதும் சிக்கிக் கொள்ளாமல் இருப்பதே உசிதமானது.

அன்பாகவும், பண்பாகவும் நடந்து அடுத்தவர்கள் மனதில் இடம் பிடிக்கவேண்டும். இதுவே மனிதத் தத்துவம்.

இ.றஜித்



# பெற்றோரைக் கவனியுங்கள்

எந்த ஒரு உயிரினங்களுக்கும் மூல காரணமாய் இருப்பது தந்தை தாயே. இறைவனின் படைப்புகளில் மனிதப்பிறவிக்கு மட்டுமே பகுத்தறிவு என்ற ஒன்றை இறைவன் அளித்துள்ளான்.

நாம் மனிதனாகப் பிறந்ததன் நோக்கம் என்ன என்பதை ஒவ்வொருவரும் நன்கு அறியவேண்டும். பகுத்தறிவு என்பதன் பொருள் மனிதனாகப் பிறந்த எமக்கு விளங்க வேண்டும். நல்லவை தீயவை யாவற்றையும் பகுத்தறிந்து அதன்படி ஒழுகுவதே மனித வாழ்வு.

எம்முடைய பிறப்புக்குக் காரணமான தந்தை தாய்க்கு நாம் என்ன செய்கின்றோம் என்பதை முதலில் நாம் பகுத்தறிய முற்படவேண்டும். எந்தவொரு ஆணோ பெண்ணோ தம் பெற்றோரின் கடமைகளைச் சரி வரச் செய்யவேண்டும். இதில் ஆண் பெண் என்ற பாகுபாடு தேவையற்றது.

எம்மை பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோரை நாம் மறக்கலாமா. இன்றைய நாகரிக உலகில் பெற்றவர்களை வயோதிபர் இல்லங்களில் விடுவதும் வழக்கமாகி விட்டது.

ஒவ்வொரு பிள்ளைகளும் தம் பெற்றோரை பொறுப்போடு பராமரித்தால் இப்படியான பரிதாபமான நிலை ஏற்படுமா. உண்மையில் இப்படியான நிலையை எண்ணிப்பார்க்கும் போது உள்ளம் மிகவும் வேதனையடைகின்றது.

இன்று ஒவ்வொரு வீடுகளிலும் பெற்றோர் வயோதிபநிலை அடைந்து படும் அவஸ்தையை பார்க்கும்போது கவலைக்குரியவிடயமாகவே உள்ளது. எம் பெற்றோர் எம்மை எப்படி வளர்த்தார்கள் என்று கொஞ்சம் எண்ணிப்பாருங்கள். எத்தனை நாள் தம் பசியை மறந்து நாம் நன்றாக வளரவேண்டும் என்பதற்காக எமக்கு உணவு அளித்திருப்பார்கள். இன்று அந்தப் பெற்றோர் படுத்த படுக்கையில் இருக்கையில் பிள்ளைகளான நாம் உதாசீனப்படுத்தலாமா? பெரிசாக நாம் பொன் பொருளை அள்ளி அவர்களுக்குக் கொடுக்கவேண்டாம். உண்ணும் உணவை என்றாலும் அன்போடு கொடுக்கலாம் அல்லவா. கஞ்சியாக இருந்தாலும் கருணையோடு கொடுங்கள். பெற்றவர் இறந்த பின் அழுது பயனில்லை. அவர்கள் உயிரோடு இருக்கையில், அவர்களை கண் கலங்காமல் பாருங்கள். ஏதோ நீங்கள் சாப்பிடும் சாப்பாட்டை பகிர்ந்து அன்போடு பராமரியுங்கள். அவர்களின் மனம் நிறைவடைதலே உங்கள் வாழ்வின் உயர்வு.

சில குடும்பங்களில் தாய் தந்தையைப் பார்த்து ஆண் பிள்ளைகளின் கடமை எனக் கருதி அங்குள்ள பெண்பிள்ளைகள் அவர்கள் மீது வெறுப்புக் காட்டுகின்றனர். இப்படியான பிள்ளைகள் கொஞ்சம் யோசிக்கவேண்டும். எங்களையும் இந்தப் பெற்றோர்தானே பெற்று வளர்த்தவர்கள் என்பதை. நாம் செய்யும் செயல்கள் யாவும் எவருக்கும் தெரியாது என்று எண்ணும் பிள்ளைகள் ஒன்றை உணரவேண்டும். எமக்கு முதுமைவரும் நாளை எமக்கும் இந்த நிலைதான் என்பதை. தாய் தந்தை என்று எண்ணாவிட்டாலும் மனிதாபிமான முறையில் நடவுங்கள். இப்போது உங்களுக்கு புரியாது நீங்களும் பெற்றோராகும்போது தான் உங்களை பெற்றவரின் அருமை தெரியும். மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல் பெற்றோரைக் கவனியுங்கள். அவர்கள் கண் கலங்கக்கூடாது.

சு.சிவாஜினி



## கோழி இறைச்சி மசாலா




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| கோழி இறைச்சி | -250 கிராம் |
| வெங்காயம் | -50 கிராம் |
| வெள்ளைப்பூடு | -அளவாக |
| மஞ்சள்தூள் | -1/2 தேக்கரண்டி |
| மிளகு தூள் | -1/4 தேக்கரண்டி |
| மிளகாய்த்தூள் | -1 தேக்கரண்டி |
| கறிவேப்பிலை, றம்பை | - சிறிதளவு |
| ஏலம்,கறுவா | - அளவாக |
| மாஜரின் | - 1மே.கரண்டி |
| உப்பு | - அளவாக |

செய்முறை:-

* கோழி இறைச்சியைச் சுத்தம் செய்து நடுத்தரத் துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும்.
* இறைச்சியுடன் மஞ்சள்தூள், மிளகுதூள், சிறிதளவு உப்பும் சேர்த்துக் கொள்ளவும்.
* ஒரு தம்ளர் நீர்விட்டு மெல்லிய நெருப்பில் மூடி வேகவைத்து நீர் வற்றியவுடன் இறக்கவும்.
* மாஜரினைச் சூடாக்கி வெங்காயத்தை இட்டுப் பொரிக்கவும்.
* வெள்ளைப் பூட்டைத் தட்டிக்கொள்ளவும்.
* வெங்காயம் பொரித்துக் கொண்டிருக்கும்போது கறிவேப்பிலை, றம்பை, ஏலம், கறுவா, அரைத்த பூடு இவற்றை இட்டுத் தாளிக்கவும்.
* தாளிதம் பொன்னிறமாகியதும் அவித்த இறைச்சியை அதனுள் இடவும்.
* மிளகாய்த்தூளையும் சேர்த்து நன்கு கிளறி சிறிது நேரத்தின் பின் இறக்கிக் கொள்ளவும்.

## இப்படிச்செய்யலாம்

பொரியல்செய்ததும்:- பொரியலை உடனே மூடிவைக்கக் கூடாது. ஆறியபிறகு தான் மூடி வைக்க வேண்டும்.உடனே மூடினால் மொறு மொறுப்புப் போய் விடும்.

சமைத்ததில் உப்பு கூடிவிட்டால்:- உருளைக் கிழங்கைச் சீவி துண்டுகளாக வெட்டிச் சமைத்ததில் கொட்டிக் கலந்து அடுப்பேற்றி மீண்டும் வேகவைத்தால் அதிகப்படி உப்பு உருளைக் கிழங்கிற்குப் போய் விடும்.

கையில் மண்ணெய் வாடை போக :- நல்லெண்ணெய் அல்லது புளித்தமோர் தடவலாம்.

உழுந்தை உலர்த்த :- வெயிலில் உழுந்தை உலர்த்தக்கூடாது. நிழலில் உலர்த்த வேண்டும். வெயிலில் உலர்த்தினால் வேக அதிகநேரம் பிடிக்கும்.

ரவை புழுக்காதிருக்க :- லேசாக வறுத்து பொலித்தீன் பையில் காற்றுப் புகாது வைக்கவும்.

பருப்பு,பயறு கெடாதிருக்க:- அவற்றின் மீது முக்கியமாக மழை காலத்தில் எண்ணெய் பூசிவைக்கவும்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




## குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்—53**

பெயர்:.............................................

முகவரி:...........................................

.............................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# ஒரு காலத்தில சோற்றுக்கு வழியில்ல...




'வணக்கம் வணக்கம் பிள்ளையள் ! என்னமாதிரிப் பாடுகளெல்லாம் போகுது. நானும் போன முறை உங்களுக்குச் சொன்னமாதிரி நாட்டுக்குத் திரும்பிறதுக்கு முன்னால இஞ்சால கொஞ்ச நாடுகளையும் பார்த்திடுவம் எண்டிட்டு டென்மார்க், நோர்வே, சுவீடன் எண்டு ஓடுப்பட்டுத் திரியிறன். இந்த 3 நாடுகளையும் தான் ஸ்கன்டிநேவியா எண்டும் குறிப்பிடிறது. வெவ்வேற தனித்தனி நாடுகளாய் இருந்தாலும் மொழி, கலாச்சார, பண்பாட்டு ரீதியாய் நெருக்கமான ஒற்றுமையளைக் கொண்டிருக்கிறதால தாங்கள் எல்லாரும் ஸ்கன்டிநேவியர்கள் எண்டொரு உணர்வும் இந்த மக்களிட்டை இருக்கு. தமிழும், மலையாளமும் மாதிரித்தான் இவையின்ரை மொழியளும் கொஞ்ச வித்தியாசங்களோட ஒருத்தருக்கொருத்தர் சிக்கலில்லாமல் புரிஞ்சு கொள்ளக் கூடியதாயிருக்கிது. அதிலையும் பாருங்கோ சுவீடனும், நோர்வேயும் முந்தி ஒண்டாயிருந்து பிரிஞ்ச நாடுகள்தான்! அதிலையும் 'வைக்கிங்' எண்டு சொல்லப்பட்ட மக்களின்ரை வழித்தோன்றல்கள்தான் இவையள். ஐரோப்பாக் கண்டத்தில வேளைக்கே கடலில இறங்கி நல்லாய் சுத்தியடிச்சுத்திரிஞ்ச கோஷ்டி இந்த 'வைக்கிங்' காரர். கொலம்பஸ் அமெரிக்காவுக்குப் போறதுக்கு முன்னாலயே வைக்கிங் கடலோடியள் அங்கை போயிட்டதாய் சில ஆதாரங்கள் இருக்கிது. அமெரிக்காவைக் கேட்டால் 'சேச்சே! நாங்கள் தான் புத்தம் புதிசாய் மினுங்க மினுங்க கண்டுபிடிச்சனாங்கள்' எண்டு சொல்லும். ஸ்கன்டிநேவிய நாடுகள் 3 உட்பட ஐஸ்லாந்து, பின்லாந்து எண்டு 2 ஐயும் சேர்த்து 'நோடிக்' நாடுகள் எண்டு குறிப்பிடிற வழக்கமும் உண்டு. நான் பின்லாந்து பக்கம் போகேல்லை. இருந்தாலும் அவையின்ரை .'.பினிஷ் அல்லாட்டி சுஓமி (Suomi) எண்டழைக்கப்படிற மொழி ஒரு வித்தியாசமான மொழி பாருங்கோ ! பக்கத்தில இருக்கிற மற்ற நோடிக் அல்லாட்டி ஸ்லாவிய (கிழக்கு ஐரோப்பிய) மொழியளோட ஒரு ஒற்றுமையுமில்லாத தனித்துவமான மொழி. கிட்டத்தட்ட எல்லா சொற்களுமே ஒண்டுக்கும் அதிகமான உயிரெழுத்துக்களைத் தொடர்ச்சியாய் கொண்டிருக்கும். 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எண்ட நூலில தமிழ் ஒலியன்களின்ரை தனித்துவமான பண்பு பின்லாந்து மொழியோட ஒப்பிடப்பட்டிருக்கிது. ஆருக்குத்தெரியும் அந்தக் காலத்திலை ஏதாவது தொடர்புகள் இருந்திருக்கலாம். உதெல்லாம் ஆராய்ச்சிக்குரிய விசயம். அதைவிட்டிட்டு 'தமிழில இருந்துதான் பின்லாந்து மொழி உருவானது' எண்டு ஆராவது அவசரப்பட்டு ஆராய்ச்சிக்கட்டுரை (?) எழுதினால் பின்லாந்துக்காரன் தங்கட தயாரிப்பான 'நோக்கியா' கைத்தொலை பேசியாலயே எங்கட அலகுகளைப் பேர்த்திடுவாங்கள். ஓமோம் செருப்பு மாதிரி அவங்கட தயாரிப்பான 'நோக்கியா' ரெலிபோனுகள் அவங்கட நாட்டில மிஞ்சிப்போய்க்கிடக்காம். என்ன இருந்தாலும் ஐரோப்பாவிலேயே படிப்பில உயர்ந்திருக்கிற நாடெண்டால் சும்மாவே!... நீங்கள் இன்னும் நினைச்சுக்கொண்டிருப்பியள் லண்டன் படிப்புதான் திறமெண்டு. என்ரை கடவுளே!

உலகப்படத்தை எடுத்துப் பார்த்தீங்கள் எண்டால் யேர்மனிக்கு வடக்கால டென்மார்க் தெரியும். டென்மார்க்கின்ரை மேற்குப்பக்கத்திலை நோர்வேயும், கிழக்குப்பக்கத்திலை சுவீடனும் இருக்கிது. சுவீடனுக்கு கிழக்கால ரஷ்யாவின்ரை பக்கத்திலதான் பின்லாந்து. பின்லாந்தின்ரை தலைநகரம் ஹெல்சிங்கி. நல்ல நாடெண்டாலும் பாருங்கோ அங்கை தமிழ்ச்சனம் 400 ஐத் தாண்டாது. ஐஸ்லாந்து அம்போ எண்டு தனியக்கிடக்கிறதீவு. ரிவியில குளிரைப் பாூக்கவே சீவன் போகுது. என்ரை வயசுக்கு அங்கை போனால் ஆயுள் தாக்குப்பிடிக்காது. சரி நாங்கள் மிச்ச நாடுகளுக்கு வருவம். அதுக்கு முன்னால ஒரு விசயம். இண்டைக்கு உலகநாடுகளிலையே தனிநபர்வருமானம் உச்சத்திலை இருக்கிற நாடுகள் எண்டால் இந்த நோடிக் நாடுகள்தான். இவ்வளவுக்கும் 1860-1890 காலப்பகுதியில பட்டினிச்சாவில இருந்து தப்பிறதுக்காக வாழவழி தேடி 5 லட்சத்துக்கும் மேலான சுவீடன்காரர் அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்தவை. இண்டைக்கு 'சாப்' (SAAB) வாகனங்கள், விமானங்களை உற்பத்தி செய்யிறாங்கள். ராஜீவ் காந்தி கொஞ்சமாய் ஒரு தொகையைத் தனக்கெண்டு சுருட்டிட்டார் எண்டு பெரியளவில பேச்சடிபட்ட 'போபர்ஸ்' ஊழலில சம்பந்தப்பட்ட போபர்ஸ் ஆட்டிலெறிப்பீரங்கியளும் சுவிடிஸ் தயாரிப்புத்தான். என்னத்துக்குச் சொல்லிறன் எண்டால், ஒருகாலத்தில சோத்துக்கு வழியில்லாமல், பட்டினிச்சாவை எதிர்கொள்ள வேண்டின நிலைமை இருந்தாலும், நம்பிக்கையோட விடாமல் உழைச்ச அவங்கட நிலையை, இண்டைக்குப் பார்த்து நாங்கள் விளங்கிக்கொள்ளோணும்.

முதல்லை டென்மார்க்கைப் பார்த்தால்... தலைநகரம்; கோப்பன்ஹேகன், மொழி; டெனிஷ் (டன்ஸ்க்), நாணயம்; ஐரோப்பியக் கூட்டமைப்பில (EU) இணைஞ் சிருந்தாலும் காசு விசயத்திலை இன்னும் சேரேல்லை, டெனிஷ்-குறோண். பரப்பளவு : இலங்கையைவிட சின்னன் தான் 43 094 சதுர கி.மீ. சனத்தொகை : 5.4 மில்லியன் (54 லட்சம்). தமிழ் ஆக்கள் : கிட்டத்தட்ட 12000. இஞ்சை தமிழ் ஆக்கள் அதிகமாய் வாழிற நகரங்களில மாலதி கலைக்கூடம் எண்ட பெயரிலை பள்ளிக்கூடம் நடாத்தி தாய் மொழியையும், நுண்கலையளையும் கற்பிக்கினம். சமதரையானதும், நல்ல இயற்கை அழகையும் கொண்ட நாடு. இங்கத்தைய வீதியளிலை இரவு, பகலெண்டு 24 மணித்தியாலமும் முன்வெளிச்சம் (ஹெட் லைற்) போட்டவடிதான் வாகனங்கள் ஓடவேணும். வீதி வெளிச்சங்கள் இருந்தாலும் பனிப்புகாரால பார்வை தெளிவில்லாமல் இருந்து, விபத்துகள் நடக்கிறதைத் தவிர்க்கிறதுக்காகத் தானாம் இப்பிடி. இவங்கள் இப்பிடி முன்ஜாக்கிரதையாய் இருக்க, எங்கட நாட்டில நடுச்சாமத்திலையும் லொறி, ட்றக்ரர், வான்காரர் சிலர் யோசனை இல்லாமல் ஒற்றை லைற்றோட திரியிறாங்கள் ! எட முன்னால வாறதொரு அப்பாவி ஒருபக்க லைற்றைப் பார்த்திட்டு மோட்டார்சைக்களெண்டு நினைச்சு நடுவாலவிட்டால், நிலைமை எப்பிடியிருக்கும் எண்டு கொஞ்சமும் யோசிக்கிறேல்லையே ! 82 மில்லியன் சனமிருக்கிற யேரமனியில ஒவ்வொரு 2ஆவது ஆளிட்டையும் வாகனம் இருக்கிதாம். அந்த 41 மில்லியன் உட்பட சுத்திவர இருக்கிற நாடுகளிலை இருந்து வாற வாகனங்கள் எல்லாம் ஓடித்திரியிற வீதியளிலை வருசத்துக்கு 9 ஆயிரம் பேர் சாகினமாம். இது 18 மில்லியன் சனம் இருக்கிற இலங்கைத்தீவில 2004ஆம் ஆண்டு 11200 பேர் செத்திருக்கினம். இந்தத்தரவு சிறிலங்காவின்ரை போக்குவரத்துப்பிரிவின்ரை மட்டும்தான். இனி எங்கட தமிழீழப் போக்குவரத் துப்பிரிவின்ரை கணக்கெடுப்புகளையும் சேர்த்துப்பாருங்கோ ! அதிகமாய் தெரியுதெல்லோ! வாகனங்கள் இந்தியன்ரையும், யப்பான்காரங்களின்ரையுமாய் இருக்கலாம். அதோட கூடவிற்கப்படாத மனச்சாட்சி எங்கட இதயத்துக்குள்ளை இருக்கோணும். உங்கட கை, கால், கண் எல்லாம் திறமையாய் செயற்படுது எண்டிறதை நிரூபிக்கிறதுக்காக, சவாரி காட்டி மற்றவையளின்ரையளைப் பறிச்செடுத்து ஊனப்படுத்தியோ, உயிரெடுத்தோ போடாதிங்கோ! பாதசாரியளும் கடக்கிறதுக்கெண்டு இருக்கிற சட்டதிட்டங்களையும், போக்குவரத்து விதியளையும் அனுசரிச்சு நடக்கோணும். பக்கம் பக்கமாய் கதைச்சுக் கொண்டு போறது, நடுவீதியில வைச்சு குசலம் விசாரிக்கிறது, தண்ணி அடிச்சுப்போட்டு கண்கடை தெரியாமல் மிதக்கிறது.... தயவுசெய்து கொஞ்சம் பிழைவிடிறவை குறையுங்கோ பிள்ளையள் !

ஆ... நாங்கள் நாடுகளுக்கு வருவோம். ஸ்கன்டிநேவிய நாடுகளுக்கும் மகாராணிமார் இருக்கினம். பிரித்தானியா மாதிரி மிதமிஞ்சின வசதியளோட இல்லாட்டியும் ஏதோ தேசிய அடையாளமாய் இருக்கினம். நான் முந்தி இளந்தாரியாய் இருக்கேக்கிளை பள்ளிக்கூடத்தில டென்மார்க்கின்ரை பொருளாதாரத்துக்குப் பண்டியளும், பாலும்தான் காரணமெண்டு படிச்சனான். அதெல்லாம் 18ஆம் நூற்றாண்டு நிலவரங்கள். விவசாயத்தை ஒருபக்கம் நல்லமாதிரிக் கவனிச்சாலும் இண்டைக்கு இவங்கள் எலக்ரோனிக் கருவியள் உற்பத்தியிலையும் உயர்ந்து விளங்கிறாங்கள். கப்பல் கட்டிறாங்கள். மீன் பிடிக்கிறாங்கள். நான் முதல் போன நாடுகளிலை கிட்டத்தட்ட உழைப்பாளியள் ஒவ்வொருத்தரும் கிட்டத்தட்ட மூண்டிலொரு பங்கை வரியாய் செலுத்தேக்கிளை, டென்மார்க்கில கிட்டத்தட்ட 50 வீதம் வரியாய் அறவிடப்படிகிது. அதுக்கேற்றமாதிரியே நாடும் நல்ல கட்டமைப்போட உறுதியாய் இருக்கிது.

சரி சரி சும்மா டென்மார்க்கிலையே நிண்டு மினைக்கெட்டால் எரிக் தம்பி கோபிக்கும் எண்டிட்டு நோர்வேக்கும் போனன். நோர்வேயின்ரை தலைநகரம்: ஒஸ்லோ, மொழி : நோர்வேஜியன் (நொஸ்க்), நாணயம் : நோர்வேஜிய குறோண். பரப்பளவு: இலங்கைத்தீவை மாதிரி 6 மடங்கு. சனத்தொகை: டென்மார்க்கை விடக் குறைவு, கிட்டத்தட்ட ஈழத்தமிழர்களின்ரை தொகை அளவுதான், 4.5 மில்லியன்தான். ஐரோப்பாவிலேயே சன அடர்த்தி குறைஞ்ச நாடு (நல்லா காணி பிடிக்கலாம்போல!). இப்ப ஆக்களை நாங்கள் பனை மாதிரி, பூசணி மாதிரி எண்டு சொல்லிற மாதிரி நோர்வேயையும் 'நெடுவல் !' எண்டு பட்டம் சொல்லிக்கூப்பிடலாம் (ஹெலி இறங்கிற நேரம்வேண்டாம்!). ஏனெண்டால் நோர்வே ஒடுங்கியும், 2700 கி.மீ. நீண்டும் இருக்கிது. கை விரல்கள் மாதிரி நோர்வே, சுவீடன், பின்லாந்து மூண்டு நாடுகளும் இருக்கிறதை உலகப்படத்தில நீங்கள் பார்க்கலாம். கரையோரங்களை ஒட்டித் தீவுகளும், ஆறுகளும் எண்டு இருக்கிறதோட டென்மார்க் மாதிரி இல்லாமல் மலைப்பாங்கான நாடு பாருங்கோ !

எங்கட சனம் 20 ஆயிரத்துக்கும் குறையாது. இஞ்சையும் தமிழ்ப் பாடசாலை, உள்ளூர் வானொலி சேவையள் எல்லாம் நடக்கிது. நான் முந்தி பிரான்சில நிண்டுகொண்டு சொன்ன அத்தினை வானொலி, தொலைக்காட்சியளும் இஞ்சையும் வேலைசெய்யும். இந்த ஊடகங்களாலதான் தொலைவின்ரை பிரிவுத்துயரத்தில இருந்து ஓரளவுக்கு விடுபட்டவையாய் எங்கட சனம் இருக்கினம். சிலநேரம் பரிஸில இருக்கிற மச்சாளை உலையில வைச்ச பச்சரிசி பதமாய் இறக்கியாச்சோ எண்டு, ஒஸ்லோவில இருக்கிற தங்கச்சி விசாரிக்கிறதையும் வானொலியளிலை கேட்கக்கூடியதாய் இருக்கும். ஏதோ எல்லாரும் சந்தோசமாய் இருந்தால் சரியெண்டு நான் நினைக்கிறன்.

உங்களுக்கு இந்திய ஊடகங்களிலை வாற இந்த விளம்பரம் ஞாபகம் இருக்கோ ? 'பெரியவர், சிறியவர் அனைவரும் விரும்பிடும் நிஜாம் பாக்கு . . . வெற்றி பெற்றவர் விரும்பும் பாக்கு நிஜாம் பாக்கு..' இஞ்சை நோர்வேயில பாக்கு போதைப்பொருள் எண்டு அடையாளம் காணப்பட்டு, தடைவிதிக்கப்பட்டிருக்கிது. வெள்ளைக்காரர் எல்லாம் குடிச்சு, வெறிச்சு சீரழிஞ்சு போறாங்கள் எண்டு பண்பாட்டுப்பெருமை(?) பேசிற தென்னாசியாவின்ரை விளம்பரத்தை ஒருக்கால் நினைச்சுப் பாருங்கோ! அதுவும் சிறியவர்களும், வெற்றி பெற்றவர்களும்... கூட... எண்டு போதைப்பாவனையை ஊக்குவிக்கிது. சே !

நோர்வேயின்ரை பொருளாதாரம் எண்டால் எல்லாம் தான். ஆனாலும், முக்கியமான ஒண்டு 1960களில கண்டுபிடிக்கப்பட்ட பெற்றோல். அதுவும் கடலுக்கிளை கண்டுபிடிச்சு உலகில முக்கியமானதொரு பெற்றோல் ஏற்றுமதியாளனாய் ஆகியிருக்கிது. அது மட்டுமில்ல, உலகத்திலேயே அதிகமான கப்பல் தொகுதியளைக் கொண்ட ஒருசில நாடுகளுக்கிள்ளை நோர்வேயும் அடக்கம். இது தவிர இயற்கை வாயுவையும் பெருமளவில ஏற்றுமதி செய்துவருகிது. இயற்கைவாயு என்னண்டு கேட்கிறீங்களோ? இப்ப வேண்டாம், பேந்து எப்பையன் சொல்லிறன். நோர்வேயின்ரை சனத்தொகை கிட்டத்தட்ட எங்கள் அளவுதான் எண்டு நான் முன்னம் சொன்னது ஞாபகம் இருக்குமெண்டு நினைக்கிறன்.

பொறுங்கோ! பொறுங்கோ! சுவீடனுக்குப் போக முதல் டென்மார்க் பற்றின புதினம் சொல்ல மறந்திட்டன். சிறிலங்கா நீதி(?)மன்றம் பிந்துனுவெவ படுகொலையில ஈடுபட்டவங்களை விடுதலை செய்திருக்கிற நேரத்தில இதையும் நீங்கள் அறிஞ்சிருக்கோணும். 1990களில டென்மார்க்கில இருந்த தமிழ் ஆள் ஒருத்தர் எல்லாரையும் மாதிரி தன்ரை மனிசியை நாட்டில இருந்து ஸ்பொன்சர் பண்ணி எடுக்கிறதுக்கு பதிஞ்சிருக்கிறார். ஆ... அப்பிடி உங்கையிருந்து இஞ்சை எடுக்கிறதை, எங்கட சனம் உள்ளூர் வழக்கில 'பார்சல்' அல்லாட்டி 'பக்கற்' எடுக்கிறதெண்டு தான் குறிப்பிடிறவை. அப்பிடி ஒருத்தர் பதிஞ்சு அலுவல்களைக் குடுத்துப்போட்டு கனகாலமாய் காத்துக்கொண்டிருந்திருக்கிறார். நான் கேள்விப்பட்ட மாதிரிக்கு அந்த காலகட்டத்தில நாட்டில நடந்த குண்டு வீச்சுகளில அசம்பாவிதம் ஒண்டு நடந்திட்டிது. காத்துக்கொண்டிருந்த அந்தப் பொடியனுக்கு எப்பிடி இருந்திருக்கும், இப்பிடி ஒரேயடியாய் மரணச்செய்தியைக் கேள்விப்பட ! டெனிஷ் அரசாங்கத்துக்கு எதிராய் வழக்கு தொடுத்திருக்கிறார் அந்தத் தம்பி. வழக்கு முடிவில அரசாங்கக் குடிவரவுத்துறையின்ரை அசமந்தப் போக்காலதான் இப்பிடி இழுபட்டிருக்கிது எண்டு சொல்லி தீர்ப்பு வந்து, அதுக்கான தார்மீகப்பொறுப்பை ஏற்று உள்துறை அமைச்சர் பதவி விலகியிருக்கிறார். நானும் சந்திரிகாவை நினைச்சு பெருமூச்சுவிடிறன். எங்கை அந்தக்கதிரையைவிட்டு எழும்பிற மாதிரித் தெரியேல்லை.

சுவீடனைப் பார்த்தோமெண்டால் தலைநகரம் : ஸ்ரொக்ஹொல்ம். பரப்பளவு : இலங்கைத்தீவைவிட 7 மடங்கு பெரியது. நாணயம்: சுவிடிஷ் குறோண். மொழி: சுவிடிஷ் (சுவென்ஸ்க்). சனத்தொகை: 9 மில்லியன். ஐரோப்பாவில யேர்மனிக்கு அடுத்ததாய் அதிகமான வெளிநாட்டுக் குடியேற்றவாசியளை ஏற்றிருக்கிற

(22 ஆம்பக்கம் பார்க்க)




# எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

பொருண்மியத் தடை விதிக்கப்பட்ட காலத்தில் சிங்கள அரசின் யுத்த அச்சுறுத்தல் மத்தியிலும் தமிழர் பிரதேசங்கள் அதனை எதிர்கொண்டன.

குறிப்பாக விவசாய உற்பத்திக்கு தேவையான சகல தேவைகளும் தடுக்கப்பட்ட சூழ்நிலையில் இருக்கும் வளங்களை உச்ச அளவில் பயன் படுத்தி வெற்றிகரமான விவசாய உற்பத்திகளை மேற்கொண்டு விவசாயிகள் சாதனை படைத்தனர்.

எனினும் இராணுவ ஆக்கிரமிப்புக்குப் பின்னர் பல விவசாய நிலங்கள் விவசாயச் செய்கைக்கு உட்படுத்தப்படமுடியாத சூழ் நிலைக்குத் தள்ளப்பட்டன.

எனினும் "ஓயாத அலைகள்" என்னும் விடுதலைப் புலிகள் சிறப்புப் போர் நடவடிக்கைக்குப் பின்னர் வன்னி நிலப்பரப்பில் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகள் மீண்டும் மீட்கப்பட்டன.

அதன் காரணமாக மீட்கப்பட்ட பகுதிகளின் விவசாய நிலங்கள் மீண்டும் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டன. ஆனால் யாழ்ப்பாணம் குடாநாட்டில் போர்ச் சூழல் காரணமாக கைவிடப்பட்ட விவசாய நிலங்களில் விவசாயச் செய்கை போதுமானதாக மேற் கொள்ளப்படவில்லை.




ஆனால் மீண்டும் அத்தகைய நிலங்களில் விவசாயச் செய்கையினை மேற் கொள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ்மாவட்டத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

குடாநாட்டில் யுத்த நிலை காரணமாக ஏராளமான விவசாய நிலங்கள் படையினரால் அழிக்கப்பட்டன. இது தவிர பெருமளவு விவசாய நிலங்களில் மிதிவெடிகள் அவர்களால் விதைக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக விவசாயிகளும் தத்தமது விவசாய நிலங்களை கைவிட்டு வேறு முயற்சிகளிலும் ஈடுபட்டார்கள்.

இத்தகையபின்னணியிலேயே விவசாய நடவடிக்கைகளை மேற் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இதன் தொடக்க அம்சமாக யாழ் குடாநாட்டின் சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் உள்ள விவசாய சம்மேளனங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

கோப்பாய் பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் உள்ள உச்சுவில் வயல் நிலப்பரப்பிலும் அரியாலைப் பகுதியில் மிதிவெடி அகற்றப்பட்ட பகுதிகளிலும் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட விவசாயிகள் இதற்கு உதவ முன்வர வேண்டும்.

# இலாபகரமான முயல் வளர்ப்பு

இறைச்சிக்காகவும் தோல் மற்றும் உரோமத்திற்காகவும் முயல்களை வளர்ப்பது உலகின் பல்வேறு நாடுகளில் முக்கியத்துவம் பெற்று வருகின்றது. நமது பிரதேசத்திலும் முயல் வளர்ப்பதற்கான சாத்தியமான அம்சங்கள் நிறைய உள்ளன. மக்கள் தொகைப் பெருக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப இறைச்சி உற்பத்தியை பெருக்கிட முயல் வளர்ப்பு மிகவும் ஏற்ற பண்ணைத் தொழிலாகும். முயல் கிராமப் புறங்களிலும் நகரப் புறங்களிலும் வளர்க்கலாம். எனினும் முயல் வளர்க்க பலரும் மன்வருவதில்லை என்பதை ஆராய்ந்தால் கீழ்க் கண்ட காரணங்கள் தெரிகின்றன.

*முயல்களை வீட்டில் வளர்க்கக் கூடாது என்ற தவறான கருத்துக்கள் மக்களிடையே நிலவுகின்றன.

*முயல் வளர்த்தால் வீட்டில் சண்டை சச்சரவுகள் வரும் என்ற தவறான கருத்து.

*முயலினை இறைச்சிக்ச[illegible] வெட்ட அஞ்சுவது- பரிதாபப்படுவது.

*முயல் பண்ணையை தொடங்கிட போதுமான உதவிகள் கிட்டாமை.

மேற்கூறிய காரணங்கள்: களையப்பட்டால் சிறப்பம்சங்கள் நிறைந்த முயல் வளர்ப்பு வெகு விரைவாக பிரபலம் அடையும்.

*முயல் இனங்கள் மற்றும் சாதகமான சூழ்நிலை:-*

ஐம்பதிற்கும் மேற்பட்ட முயல் இனங்கள் இருக்கின்றன. குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய இனங்கள் வெள்ளை ஜெயண்ட், சாம்பல் ஜெய ண்ட், நியூசிலாந்து வெள்ளை மற்றும் அங்கோரா இனங்கள். இவற்றில் அங்கோரா இன முயல்களை உயர்தர உரோமத்திற்காக குளிர்ந்த மற்றும் மலைப் பிரதேசங்களில் வளர்க்கலாம்.

இறைச்சி முயல்களை மலைப் பிரதேசங்களிலும் சமவெளிப் பகுதிகளிலும் வளர்க்கலாம். தட்ப வெப்பநிலை 36ºC வரைக்கும் இருக்கும். ஈரப்பதன் காற்றின் 70 சத வீதத்திற்கும் மேல் இருக்கக் கூடாது. அங்கோரா இன முயல்களை வெப்பம் குறைந்த (15ºc தொடக்கம் 20ºc) மலைப் பிரதேசங்களில் மட்டும் வளர்க்கச் சிறந்தது.

*முயல் இருப்பிடம் மற்றும் வளர்ப்பு:-*

முயல்களை கூண்டுகளில் வளர்ப்பதே சிறந்தது. மூலதனம் குறைவான மரக்கூண்டுகளில் வளர்க்கலாம். வளர்ந்த ஆண் முயலுக்கு (1.5'x1.5'x1.5) அளவுள்ள கூண்டும் பெண் முயலுக்கு (2.0'x 2.5x3.0') அளவுள்ள கூண்டும் ஏற்றது. இதில் தீவனம் மற்றும் தண்ணீர் கொடுப்பதற்கு சிறிய பாத்திரம் அல்லது கொள் கலன்களை கட்டி விட வேண்டும். கூண்டுகளை தினந்தோறும் தூரிகை கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். இரண்டு மாதத்திற்கு ஒரு முறை தீ உமுழி கொண்டு சுத்தம் செய்யலாம். முயல் சாணம் கூண்டுகளில் தங்காவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

முயல் மிகவும் சாதுவான பிராணியாதலால் பள்ளிச்சிறுவர்கள், பெண்கள், வயதானவர்கள் மற்றும் அனைத்துத் தரப்பினரும் வளர்க்க ஏது வானது. முயல் வளர்க்க ஆரம்பிப்போர் முதலில் தொழில் நுட்பங்களை அறிந்த பின்னரே அதிக அளவில் முயல் வளர்க்க எண்[illegible]வேண்டும். கொல்லைப் புறத்தில் வளர்க்க 1 ஆண் மற்றும் மூன்று பெண் முயல்கள் போதும். இதிலிருந்து வாரம் தோறும் ஒரு கிலோ இறைச்சி கிடைக்கும். இது குடும்[illegible]வைக்கு போதுமானது. கொல லைப்புறத்தில் முயல் வளர்க்கும் போது சமையலறைக் கழிவுகள் மற்றும் பசுத் தீவனம் கொண்டே பராமரிக்கலாம்.

*முயல் வளர்ப்பின் சிறப்பம்சம்:-*

பசுந்தீவனத்தை சிறந்ததொரு இறைச்சியாக மாற்றுவதில் முயலுக்கு நிகர் வேறெதுவுமில்லை. முயல் இறைச்சி மருத்துவக் குணங்கள் கொண்டது. கொலஸ்ரோல் மிக மிகக் குறைவு. இருதய நோயாளிகளும் முதியோர்களும் ஏற்கக் கூடிய இறைச்சி. முயல்களுக்கு தடுப்பூசிகள் எதுவும் தேவையில்லை. குறைந்த சினைக்காலம் அதிக குட்டிகள் ஈனும் திறன், துரித வளர்ச்சி அதிக தீவன மாற்றுத் திறன் ஆகிய குணங்கள் குறிப்பிடத்தக்க சிறப்பம்சங்கள். நிச்சயம் இலாபகரமான பண்ணைத் தொழில் ஆரம்பத்தில் சிறிய அளவில் பண்ணை அமைத்து நல்ல அனுபவம் பெற்ற பின்னர் பெரிய அளவில் தொடங்கலாம். ஒரு நபர் 500 முயல்கள் வரைக்கும் பராமரிக்க முடியும். முன்னேற்றம் தரும் சிறந்ததொரு பண்ணைத் தொழில் முயல் வளர்ப்பு.

*விற்பனை வாய்ப்புகள்:-*

முயல்களை இனவிருத்திக்காகவும் விற்பனை செய்யலாம். உபரியான முயல்களை இறைச்சிக்குப் பயன்படுத்தலாம். உயரி எடையில் குறைந்த பட்சம் 150 ரூபா இறைச்சி கிடைக்கும் முயல் தோலைப் பயன்படுத்தி கைவினைப் பொருட்கள் செய்யலாம். இதில் தொப்பி மேலாடைகள், பர்ஸ், சாவிக் கொத்து கவர் முக்கியமானவை. முயல் எரு சிறந்த எருவாகக் கருதப்படுகிறது. இதிலிருந்து மண்புழு உரம் தயாரிக்கலாம். சொந்த நிலம், தண்ணீர் வசதி பசுந்தீவன வசதியுடைய விவசாயிகள் முயல் வளர்ப்பை ஆரம்பித்தால் நிச்சயம் கூடுதல் வருவாய் கிடைக்கும். நமது நாட்டின் இன்றைய இறைச்சித் தேவையை பூர்த்தி செய்யலாம்.

*முயல் வளர்ப்பு ஆதாயம்.*

இரண்டு ஆண் முயல்கள் பத்து பெண் முயல்கள் அடங்கிய சிறிய முயல் பண்ணை அமைக்க ஆகும். செலவீனங்கள் மற்றும் வருவாய் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*அனுமானங்கள்:-*

கூண்டுக்குள் அடைக்கப்பட்ட முயல்கள் 500 எண் எண்ணிக்கை வரையில் ஒரே நபர் அன்றாடம் பராமரிக்க முடியும்.

*ஒவ்வொரு பெண் முயலிடமிருந்து வருடத்திற்கு 30 குட்டிகள் பெறலாம்.

*இரண்டு ஆண் முயல்கள் 10 பெண் முயல்கள் அடங்கியது ஒரு குழு வாகும்.

*சராசரியாக பத்து பெண் முயல்களை இனச்சேர்க்கை செய்தால் எட்டு முயல்கள் ஒவ்வொரு முறையும் சினையாகும்.

*குட்டிகளின் எண்ணிக்கை வருடத்திற்கு 240 (8 முயல்கள் x 30 குட்டிகள்)

*குட்டிகளின் இறப்பு விகிதம் 10% (24 குட்டிகள்)

*முயல் தீவனத்தின் விலை கிலோ ஒன்றுக்கு 28 ரூபா.

*குட்டிகளை விற்கும் வயது 3 மாதங்கள்.

*குருணைத் தீவனம் உட்கொள்ளும் அளவுகள் (கிலோ)

ஆண் முயல்கள்
2x100 கிx365 நாட்கள்=73
பெண் முயல்கள்
10x150 கிx365 நாட்கள் =548
குட்டி முய்ல்கள்
216x50கிx365 நாட்கள் =648

# கால்நடைகளைத் தடுக்கும் தொண்டையடைப்பான் நோயும் அதன் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும்



எமது தமிழீழத்தில் கால்நடை வளம் என்பது மிக முக்கிய வளங்களில் ஒன்று. இது மனிதனின் உயிர் வாழ்வுக்கு தேவையான புரத உணவை வளங்குவதுடன் விவசாயிகளின் விவசாய செயற்பாட்டிலும் பங்களிப்புச செய்கிறது.

இக் கால்நடைகளில் குறிப்பாக மாடுகளிலும், எருமைகளிலும் மிகவும் குறுகிய காலத்தில் தொற்று ஏற்பட்டு மிகவும் அதிக இறப்பை ஏற்படுத்தக்கூடிய மிக அபாயகரமான நோய் தொண்டையடைப்பான் ஆகும்.

இந்நோய் பாஸ்ரல்லா மல்ரிசிடா (Pastulla Multicida) எனும் பக்ரீரியாவால் ஏற்படுத்தப் படுகிறது. இந்நோய் மாடுகளிலும் எருமைகளிலும் எல்லா வயது பருவங்களையும் தாக்கி இறப்பை ஏற்படுத்தும்.

இது தமிழீழத்தில் மட்டுமன்றி தென்ஆசியா நாடுகள், ஆபிரிக்க நாடுகள், மத்திய கிழக்கு நாடுகளிலும் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் ஆராய்ச்சிகள் மூலம் அறியப்பட்டுள்ளது.

இது காற்று மூலமும், உணவு மூலமும் விரைவாக பரவக்கூடியது. இந்நோய் 1955, 56 ஆம் ஆண்டுகளில் எமது பிரதேசத்தில் பாரிய அளவில் கால்நடை வளங்களில் இழப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நோய் ஏற்பட்ட கால்நடைகளில் மிக அதிகமான இறப்பு ஏற்படும். இதைவிட ஆரம்ப அறிகுறிகளாக கீழ்த் தாடையில் வீக்கம், பசியின்மை, சடுதியான உடல் வெப்பநிலை அதிகரிப்பு, அதிகமாக உமிழ்நீர் வெளியேறுதல், மூக்கு துவாரமூடாக சீதத் தன்மையான திரவம் வெளியேறுதல், சுவாசிக்க முடியாத நிலை ஏற்படல் ஆகியவை ஏற்படும்.

இந்நோய் உருவாகிய பின்னர் சிகிச்சை அளிப்பதன் மூலம் குணப்படுத்துவது மிகவும் கடினமானது. எனவேதான் இந்நோய் வருமுன் காக்கும் நடவடிக்கையில் கால்நடை உற்பத்தி சுகாதாரத திணைக்களங்களும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றன. இவ் வருமுன் காக்கும் நடவடிக்கைக்காகவே கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள அலுவலர்களும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அலுவலர்களும் வெகுவிரைவில் உங்கள் கால்நடை பண்ணைகளையும், வீடுகளையும் நோக்கி கால்நடைகளுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைக்காக வருகைதரவுள்ளனர். இவர்களின் இப்பணிக்கு உங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கி எமது தமிழீழத்தில் கால்நடை வளத்தைப் பாதுகாத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

டாக்டர். சு.கஜறஞ்சன்
கால்நடை வைத்திய அதிகாரி
முல்லைத்தீவு.

## இலக்கியப்பகிர்வு

# பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்



கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் வானம் சிவக்கிறது என்னும் முதலாவது கவிதைத் தொகுதி (அச்சு) 1970 ஆம் ஆண்டு வெளிவந்தது. கிட்டத்தட்ட முப்பத்தைந்து வருடங்களுக்குப் பின்னர் அவரது ஆறாவது கவிதைத் தொகுதியாக (அச்சு) பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும் நூல் வெளிவந்துள்ளது.

இந்த முப்பத்தைந்து வருடங்களிலும் அவர் அடைந்த வளர்ச்சியும் உயர்ச்சியும் வெளிப்படையானவை. அவரது இருபத்திரண்டு வயதில் வெளியான "வானம் சிவக்கிறது" நூலுக்கு முன்னுரை எழுதிய கவிஞர் முருகையன் அவர்கள் குறிப்பிடும் கருத்துக்கள் ஈர்ப்புக்குரியன.

"சொந்த மனக் கிடக்கைகளையும் சொந்தச் சூழலையும் எடுத்துப் பேசும் கலைஞர்கள், தாம் ஈடுபடும் கலைத் துறையைப் பிரதான பொருளாக அமைத்துக் கலை படைப்பதும் உண்டு. தென்னகத்துக் கவிஞர் கலைவாணன் தமது கவிதைகள் பலவற்றில் கவிதைக் கலை பற்றியும் கவிஞர் திறம் பற்றியும் பாடியுள்ளார். நம் நாட்டவரான "மஹாகவி"யும் கவிஞனைப் பற்றியும் கவிதையைப் பற்றியும் பல கவிதைகளைப் புனைத்துள்ளார். இந்த நூலின் ஆசிரியராகிய புதுவை இரத்தினதுரை அவர்களும் தாம் என்ன குறிக்கோளுடன் கவிதை எழுதுகிறார் என்பதை எடுத்துரைக்கும் பல கவிதைகளை நமக்குத் தந்துள்ளார். புத்தகத்தை எடுத்துப் புரட்டிப் பார்க்கும் எவருக்கும் இந்த உண்மை புலப்படாமற் போகாது".

வானம் சிவக்கிறது நூலில் "நான்" என்னும் தலைப்பில் கவிஞர் தன்னை பின்வருமாறு பிரகடனம் செய்கின்றார்.

"ஆற்றையும், அருவி, தென்றல்
அனைத்தையும் பார்த்துச், சும்மா;
பீற்றிடும் கவிஞனல்லேன்
பிறந்திடும் புதுவை கண்டு
ஏற்றிடும், எனது பாக்கள்
என்னிலை தவறே யென்றால்
காற்றையும் வேண்டேனானால்
கவிதையை நிறுத்தமாட்டேன்"

கவிஞரின் முதலாவது சிறப்பு இத்தனை வருடங்களாகியும் பொங்கிவரும் புதுப்புனலாக அவருடைய கவிதைகள் பிறப்பெடுத்துக் கொண்டே இருக்கின்றன.

ஒன்று சேரப் பார்க்கும்போது அவற்றில் சில சொன்னதை திரும்பச் சொன்ன மாதிரியான உணர்வினை எழுப்பினால் கூட ஒரே களத்தினை வெவ்வேறு வகையான சித்தரிப்பினால் வியப்புமிக்க காட்சிகளாக்கி விடுகின்றார்.

தான் சொல்ல வரும் கருத்துக்கு தானே சாட்சியாக விளக்கும் கவிஞரின் துணிச்சல்தான் இன்றுவரை அவரை ஒரு சர்ச்சைக்குரிய கவிஞராக மாற்றினாலும் அதுவே கவிதைக் களத்தில் நின்று சமராட வழிவகுத்துள்ளது.

அவரது முதலாவது கவிதைத் தொகுதியிலேயே இடது சாரி சித்தாந்தவாதியான மு.கார்த்திகேசன் வழங்கிய மதிப்புரையிலேயே கவிஞரது துணிச்சலை படம் பிடித்துக் காட்டுகின்றார்.

"பயம் என்பது ஒரு கொடு நோய் அது ஒருவரிடம் ஒட்டிக் கொண்டால் அது அவனுக்கும் மற்றவர்களுக்கும் கெடுதியே விளைவிக்கும். உலகிற்கெல்லாம் உபதேசிக்கும் எழுத் தாளனுக்கு பயம் என்பது பிடித்து விட்டாலோ அது அவனை அபுஞ்சகமாக்கி, நீதிக்கும் அநீதிக்கும் சமரசங்கண்டு அதில் அவனை சங்கமமாகிச் சமைத்து விடும். இப்படிச் சங்கமமாகிய எழுத்தாளர்கள் சமூகத்தின் மேல் படர்ந்த குருவிச்சையாவார். இதற்கு விதிவிலக்காகி நெஞ்சுரத்தோடும் துணிவோடும் சரியெனப் பட்டதை தனது கவிதை மூலம் ஒளிவுமறைவின்றி எடுத்துரைத்திருக்கும் இவ் இளைஞனின் துணிவை நினைக்க நெஞ்சம் பூரிக்கின்றது "

1986 சனவரி மல்லிகையில் கவிஞர் ஒரு கவிதை எழுதினார். "மரணங்கள் மலிந்து விட்ட பூமி" என்பது அதன் தலைப்பு. அக்கவிதை பின் வரும்மாறு ஆரம்பிக்கின்றது.

" மான் சுட்டால்..... அன்றி
மரை சுட்டால் .......மயில் சுட்டால்
ஏன் என்று கேட்க இந்நாட்டில்
சட்டமுண்டு.
மாடடித்தல் கூட, மறைவான
ஓரிடத்தில்
சாகடிக்க வேண்டுமெனச்
சட்டத்தில் இடமுண்டு.
கொக்குச் சுடுதல்... குற்றம்
பயிரழித்து
திக்கெட்டும் நடந்து திரிகின்ற
ஆனையினை
சுட்டால்....அது குற்றம்.
"சுதந்திர பூமியிலே...."
சட்டம் இதற்கெல்லாம் தண்டிக்கும், தண்டிக்க வேண்டியதே
நாய் பிடிக்கக்கூட நகர
சபைக்காரர்கள்.
நீ பிடிக்கலாமென்று நியமனங்கள்
செய்துள்ளனர்.
மானுக்கு.........
மாட்டுக்கு..........
மரையோடு.........மயிலுக்கு
ஆனைக்குக் கூட அனுதாபப்படும்
நாட்டில்.
மனித உயிர் மட்டும் மலிவு.
மிக மலிவு"

என்று சொல்லும் கவிதை கீழ்க்கண்டவாறு முடிகின்றது.

"அழிவுக்கும் தோள் கொடுக்கும்
அக்கிரமப் பூமியிது.
இறப்புக்குள் வாழ..... இப்போது
பழகிவிட்டோம்.
சாவுக்குள் வாழ்ந்து சாகத்
துணிந்து விட்டோம்.
மரணம் எமக்கிப்போ மலிவான
பொருளொன்று கருச் சிதைவு கூடக்
கடும் குற்றம்.
இப்போதோ,
தெருக் கொலைகள் இங்கே
சிறுவிடயம் ஆகியது.
கேட்க ஒரு நாதி
கிளர்ந்தெழும்ப ஒரு கூட்டம்
மீட்க வொரு இயக்கம்
மூச்சுவிட ஒரு கவிஞன்
கட்டாயம் தேவை ....... இது
காலத்தின் குரலாகும்."

என்று கவிதையை முடித்துள்ளார்.

இன்று கிளர்ந்தெழும்ப ஒரு கூட்டம். மீட்கவொரு இயக்கம், மூச்சுவட கவிஞர் தலைமையில் ஒரு கவிக் கூட்டம் எல்லாமே வாய்த்து விட்டது.

எனினும் எங்களது இலக்கினை நாங்கள் அடைந்துவிடவில்லை. தாயகவிடுதலை- தமிழ் மண்ணின் சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை.

முப்பத்தைந்து வருடங்களாக அதற்காக உழைத்து வரும் கவிஞர்- அதனையே பின்வருமாறு கூறுகின்றார். பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும் தொகுப்பில் "நடத்தலெனும் பிரயத்தனம்" தலைப்பில் இக்கவிதை இப்படி அமைகின்றது.

" திசை வழி தவறா நடத்தலிற்தான்
சேரிடமடையும் விரைவிருக்கிறது.
பாலையும் சோலையும் இடை
வரும் நாளில்
பாலையிற் தளர்ந்தும்
சோலையிற் கிளர்ந்தும் தடுமாறல்
பயணத்துக்காகாது.
இலக்கின் தலை மேலுள்ள
குறியில் விழியகலக் கூடாது.
நடத்தல்
மீண்டும் நடத்தல்
தொடர்ந்தும் தொடர்ந்தும் நடத்த
லெனும்
பிரயத்தனமே வெற்றி தரும்
வெயிலடிக்கும் போது நட
மழை பெய்யும் நாளில் நட
பனியும் புயலும் தின்னும்.
இரவோ பகலோ நட.
நடந்தபின் கொஞ்சம் ஓய்வெடு




நடக்க முன் இளைப்பாறாதே
நடைபயணத்துக்கு வேண்டியது
உடற்பலமல்ல.
நம்பிக்கைப் பலம்.
வழி நெடுகிலும் பார்த்தபடி போ.
உனக்கு முந்திய யாத்திரியரின்
எலும்புக் கூடுகள் கிடைக்கும்.
பயண வழிக் குறிப்புகள் கிட்டும்.
முன்னோடிகளின் காற்தடங்கள்
அகப்படும்.
எல்லாவற்றையும் கடந்து போ
அவை வழிகாட்டும் உனக்கு.
இடையில் விழுந்தாலும் தகை
மையுடைச் சாவு வரும்.
நாளைய பயணிக்கு
நீயும் திசை சொல்லியாய்க் கிடக்
கும்.
தவம் பலித்த ஒருவனாக
உன் தடமிருக்கும் மண்ணில்
போதாதா உனக்கு.
தொடர்ந்து நட"

என்று கூறும் கவிஞரின் அரசியல் வெளிப்படையானது. அவர் கவிஞர் என்பதை விட ஒரு போராளி என்பது முக்கியமானது. அதுவும் மண் விடுதலையை மூச்சாகக் கொண்ட ஒரு இயக்கத்தின் முன்னணிப் போராளி.

வழக்கமாக கவிஞர்கள படைப்பாளிகள் பிரகடனங்களுடன் மாத்திரம் நின்றுவிடுவார்கள். சொல்லும் செயலும் மாறுபாடான நிலையில் அல்லாடுவார்கள் எனினும்

அவர் சொன்னதைச் செய்யும் இயக்கத்தின் போராளி. எனவே சொல்லும் செயலும் ஒன்றுபடுகின்றது.

போராளியாக இருப்பதால் அவர் சகல செயற்பாடுகளும் விடுதலைப் போராட்டம் என்ற மையப்புள்ளியை விட்டு விலகாத வட்டங்களாகின்றன.

"பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்" என்னும் கவிஞரின் கவிதைத் தொகுப்பு எங்கள் போராட்ட வரலாற்றில் 1995-2005 வருடகாலப் பகுதியை சுட்டி நின்றாலும் மறைமுகமாக எங்கள் விடுதலைப்பயணத்தில் ஆரம்பகாலம் தொடக்கம் இற்றை வரையிலான வழித்தடத்தினையும் வெளிப்படுத்துகின்றது.

கவிஞரையும் அவரது கவிதைகளின் சிறப்பினையும் சுட்டிக்காட்ட இங்கு இரண்டு மதிப்பீடுகளைச் சுட்டிக்காட்டலாம். முதலாவது மதிப்பீடு மாற்றுப்பத்திரிகை என தன்னைக்காட்டிக் கொண்ட பத்திரிகையில் வெளியானது. காலம் செப்ரெம்பர் ஒக்ரோபர் 1992.

அது பின்வருமாறு தனது சாட்டையை வீசுகிறது.

"மாத்தறையில் பொடி மெனிக்கா
துவக்கெடுப்பான்.
மாதகலில் கந்தையா பொல்
லெடுப்பான்.
நாத்தாண்டியாவில் காசிம்
லெப்பை
நாருரிக்கும் கத்தியினைக்
கரமெடுப்பான்."

என ஐக்கிய இலங்கைப் புரட்சி பற்றிக் கனவு கண்டவர். இவரது தீர்க்க தரிசனமோ என்னவோ இப்பொழுது மாத்தறையில் அல்ல. மாதகலில் பொடி மெனிக்கா துவக்கெடுக்கிறான். புலிகளுக்கும் பயந்து மாத்றையில் கந்தையா ஒளித்திருக்கிறான். புலிகளினால் நாத்தாண்டியாவிலிருந்து காசிம் லெப்பை நாயாய் விரட்டப்பட்டிருக்கின்றான்.

இவர்களையும் மீறி யாழ்ப்பாணத்தில் இலக்கியம் வாழவில்லை. இப்பொழுது யாழ்ப்பாணம் அதன் எழுத்து புலிகளுக்கு எவ்வாறு அடிபணிந்து எழுதுவது என்பது பற்றிச் சிந்திக்கிறது.

இரண்டாவது மதிப்பீடு 3/4/5, 10/4/5 ஆம் திகதிகளில் வெளியான வீரகேசரி வார வெளியீட்டில் பிரசுரமானது. அது பின்வருமாறு அமைகின்றது.

"பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்" என்ற புதுவை இரத்தினதுரை அவர்களின் கவிதைத் தொகுதி இப்போது சில நாட்களுக்குள் என் கைக்குக் கிடைத்தது. அந்நூல் குறித்த என் விமர்சனமல்ல இப்பதிவு. இந்நூலை வாசித்து முடிந்தபோது என் மனதில் என்னென்ன பட்டுதோ அதை ஒளியாமற் பதிகிறேன்.

கவிதையை வாசிக்க வாசிக்க நெஞ்சைக் கிளர்த்தும் அனுபவம் தந்தது. எந்தன் பார்வையில் புதுவை வேறு ஒரு மாதிரிக் கவிஞராகவே படுகிறார். இந்த மாதிரிக் கவிதைக்கு முன்னோடி இருப்பதாக நான் கருதவில்லை. இவரைப் பின்பற்றியும் வேறு கவிஞர் வந்ததாயும் தெரியவில்லை. இவருக்கு முன்னோடிக் கவிஞர் இல்லையென்றால் சுயம்புவாகத் தோன்றினாரோ என்று யாரும் கேள்வி கேட்கமாட்டீர்கள் என நம்புகின்றேன். இதுவரையான தமிழ்க் கவிதைகளின் வழித்தோன்றல்தான் இந்தப் புதுவை. அதேசமயம் யாரும் சொல்லாத வழியில் பயணம் செய்கிறார்.

"புதுவையின் மேலான வெற்றியென்று நான் கருதுவது இதைத்தான். தாம் நம்பும் சத்தியத்துக்காக தன்னை அர்ப்பணிப்பது எழுத்து வேறு வாழ்வு வேறு அல்ல. எழுத்தே வாழ்வு, வாழ்வே எழுத்து. நான் எழுதிக்கொண்டு மட்டும் இருக்கவில்லை. பணி செய்து கொண்டும் இருக்கிறேன்." என்று வாய் வெற்றியை சப்ப எழுதுகிறார்.

இதில் என்ன விசேசம் என்று கேட்கிறீர்களா? இரண்டு மதிப்பீடுகளையும் எழுதியவர் ஒருவரே என்பது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம். அந்த மதிப்பீடுகளை எழுதிய ஒருவர் அடைந்த மாற்றம்தான்.

1992-2005 காலப்பகுதிக்குள் மதிப்பீட்டை எழுதியவர் போன்றவர்கள் அடைந்த மாற்றத்தைப்போல எத்தனையோ பேர் மாற்றம் அடைந்துள்ளார்கள். இதற்கு புதுவை இரத்தினதுரையும் அவர் தம் கவிதைகளும் உதவியுள்ளன என்பதும் மறைக்க முடியாத உண்மை.

**இணுவையூர்**
**சிதம்பரதிருச்செந்திநாதன்**

## எங்களை வாழவிடு

கடல் தாய் என உன்னை
அன்னையாக எண்ணி
கடவுளாக வழிபட்ட
கள்ளங் கபடமில்லா
உன்பிள்ளைகளையே
கண்ணிமைக்கும் கணத்திற்குள்
கபளீகரம் செய்துவிட்ட நீ
சத்தியமாக தாயல்ல
குழந்தையும் தெய்வமும் ஒன்றல்லவா
இது உனக்கும் புரியும்
அந்த தெய்வீகக் குழந்தைகளின்
உயிர்களைக் கூட
உறிஞ்சிவிட்டு வெறும்
சக்கையை துப்பிவிட்ட நீ
ஐயமின்றி அரக்கியே தான்
உன் அலங்கோலத்தால்
நீர் கோலம் கோர்த்த
மக்களின் கண்கள் சொரியும்
கண்ணீர் வெள்ளம் ~ உன்
வெள்ளத்தையும் மிஞ்சிவிட்டதை
நீ அறிவாயா
ஆழிசூழ் அழகிய தீவை~ உன்
ஊழிக் கூத்தால்
உருக்குலைத்துவிட்ட நீ
உருப்படுவாயா?
கடல் என்றால் கலவு
கலவு என்றால் கடல் என்ற
அகராதியின் அர்த்தத்தையே
அழித்தெழுத வைத்து விட்டாயே
இனி என் அஸ்தியைக் கூட~உன்
பாவநீரில் கரைக்க
அனுமதிக்க மாட்டேன்
பஞ்ச பூதங்களில்
பசியடங்கா ஆழியே
உடன் வற்றிவிடு
எங்கள் கண்ணீரையும் வற்றவிடு
இனியாவது
எங்களை வாழ விடு.

தமிழாக்கம்- இ.ரஜித்
ஆங்கிலத்தில்- மதுரை தேவன்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# வாழ்க்கைத்தரம் கீழ் நோக்கியுள்ள மாணவர்களின் கல்வி நிலைமைகள்

**இனியவள்**

மனிதனின் நடத்தைகளின் ஒழுங்கமைப்பைப் பேணுவதிலும், மனிதப்பண்புகள் விழுமியங்களைப் பேணிக்காப்பதிலும், அவனது பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்து அவனது அடைவுத் தேவைகளுக்கு வழிசமைப்பதிலும், 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்பதற்கிணங்க அவனது வாழ்வின் அர்த்தத்தை நிர்ணயிப்பதுமே கல்வி என்பதாக இன்றைய உலகில் அர்த்தம் கொள்ளப்படுகிறது.

இவ்வகையில், தனியனது அறிவு சார் நடத்தைகளிலும், மனவெழுச்சி சார் நடத்தைகளிலும், உளவியக்கம் சார் நடத்தைகளிலும் கல்வியானது தாக்கத்தை விளைவிக்கின்றது. அமெரிக்கக் கலைக் களஞ்சியமானது கல்வி பற்றிப் பின்வருமாறு கூறுகின்றது. " மனிதனது உள்ளார்ந்த ஆற்றல்களையும், திறன்களையும் வெளிக் கொணரும் சாதனமாக, ஆளுமை வெளிப்பாடாக கல்வி அமைகிறது" அறிவு சார் கல்வியானது பாடசாலை சார்ந்த ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனங்கள் மூலமும், வாழ்க்கைக்கேற்ற கல்வி வாழ்வியல் அனுபவங்கள் மூலமும் எமக்குக் கிடைக்கின்றது.

"கல்வி என்பது அனைவருக்கும் பொதுவானது" இவ்வாறான கல்வி எல்லா மக்களாலும் முன்னெடுத்துச் செல்லக் கூடியதாக உள்ளதா?

"சமுதாய நன்னிலை" இதனை கல்வி, தொழில், சமுதாய உயர்வு நிர்ணயிக்கின்றன. கல்வியூடாகக் கற்றவர்கள் நன்மை தீமையை நன்கு பகுத்தாராய்ந்து சமுதாய நன்மைக்கு வேண்டிய அம்சங்களை அறிந்து, வாழக்கற்றுக் கொள்கின்றனர். எவ்வொருவன் நல்ல கல்வியைக் கற்றுக் கொள்கின்றானோ அவன் தன்னுடைய தரத்தையும், வாழ்க்கை முறையையும் மேம்படுத்திக் கொள்வான். அவ்வாறற்ற நிலைமையே வாழ்க்கைத் தரப் பின்னடைவை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

வாழ்க்கைத் தரத்தில் கீழ் நிலையைக் கொண்டிருக்கும் பெரும்பாலானவர்கள் எழுத்தறிவு குறைந்தவர்கள். இக்குடும்பங்களிலுள்ள மாணவர்கள் வாழ்வில் பலதரப்பட்ட நலச் சிக்கல்களை எதிர்கொள்கிறார்கள். இந்நிலைமையானது மாணவர்களைச் கருத்தூன்றிக் கற்று, மனப்பதிவு கொண்டு கற்க முடியாத நிலையைத் தோற்றுவிக்கின்றது. அத்துடன் பெரும்பாலான மாணவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதுடன், கல்வியில் ஆர்வமின்மை, பாடசாலை ஒழுங்கு பேணப்படாமை, சுத்தம், சுகாதாரம் பேணப்படாமை, அடிப்படைக் கல்வியின்மை, அடிப்படை உரிமைகள் பற்றிய அறியாமை, வீட்டிலுள்ள பெரியோர் பிள்ளைகளை வழி நடத்துதல் இல்லை, கற்பதற்கான உபகரணங்களைக் கையாள்வதில்லை போன்ற இன்னோரன்ன காரணங்களுடன் கல்வியும் கற்பதாக, கற்பிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

குறிப்பிட்டுக் கூறத்தக்க விடயமாகச் சில மாணவர்களுக்குப் பிறப்புப் பதிவுச் சான்றிதழே இல்லாத நிலைமை காணப்படுகிறது. சிறுவர் உரிமை அமைப்புக்கள், சிறுவர் துஷ்பிரயோகங்களை அனைவருக்கும் அறிமுகப்படுத்தி கட்டாயக் கல்வி பற்றிய அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றன.

கல்வியானது சமூக, பொருளாதார பண்பாட்டுக் காரணிகளிடையே ஒப்பிடும்போது முக்கியமான ஒன்றாகக் கூறலாம். இவ்வகையில் மக்கள் யாவரும் ஒரே வாழ்க்கைத் தரத்தைக் கொண்டவரல்லர். இவர்களிடையே வர்க்க முரண்பாடுகள் காணப்படுவதால் கல்விச் சமத்துவம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலைமைகளில் மாணவர்களின் இடைவிலகல் போக்கையே அதிகம் காண்கிறோம்.



வாழ்க்கைத் தரப் பின்னடைவைக் கொண்ட குடும்பங்களிடையே உளவியல் சிக்கல்களும், நோய்களும் வெளிப்படக் காண்கின்றோம். கல்வி என்பதை எட்டாக்கனியாகவே உணரத்தலைப்படுகின்றனர்.

வறிய மாணவர்களைக் கொண்ட குடும்பங்கள் "சுயபிரதிமை" பற்றிய எண்ணக்கரு உள்ளவர்களாகக் காணப்படவில்லை. தமது சமூக, பொருளாதார தேவைகளையோ, உரிமைகளையோ அறிந்து அக்கறை செலுத்துபவர்களாக இல்லை. மாணவர்களும் இதே நிலைமைதான்.

* சிலர் உண்மை கூறுவதில் மிரட்சி, ஒருவித தயக்கம். பொய் கூறுதல்.

* தாழ்வுச் சிக்கல் இயலாமை பற்றிய எண்ணத்தை வளர்த்திருத்தல்.

* சமூக அசைவில் (Social Mobility) நம்பிக்கையற்றும், தமது வளர்ச்சி நிலைமைகள் (Growth) பற்றியோ, முன்னேற்றம் (Progress) பற்றியோ இலக்கின்மை. அடைவுக் கோலங்கள் (Achievment Pattern) பற்றிய உணர்வின்மை.

* இம் மாணவர்களின் சமூகமயமாக்கல் முகவர்களின் வலுவற்ற தன்மை.

* பெரும்பாலான குடும்பங்களில் காணப்படும் மது போதைப்பாவனை, அடிப்படை வசதிகளை நிறைவேற்ற முடியாது வறுமையில் வறுமையை அனுபவிக்கும்போது ஏற்படும் விரக்தி நிலை.

* குடும்ப அங்கத்தவர்களிடையே அன்பு, உறவுத் தேவை நிறைவேற்றப்படாமை.

* இக்குடும்பக் குழுக்களிடையே ஒத்துணர்வின்மை, புரிந்துணர்வின்மை, மணமுறிவுகள்.

* சமூகக் குழுக்களிடையே, இச்சமூகத்திற்குப் பாரபட்சம் காட்டப்படுதல், ஓரங்கட்டப்படல்,சமூக அடுக்கமைவிலே தாழ்ந்தும், சமூக வகுப்பில் கீழ்நிலையிலுமிருத்தல்.

*. நிச்சயமற்ற தன்மை, சூழல், அச்சமூட்டும் மனவெழுச்சி, மலேரியா, வயிற்றோட்டம், சொறி, சிரங்கு போன்ற தொற்று நோய்களை ஏற்படுத்தியுள்ளமை, பல் சம்பந்தமான நோய்கள் ஊட்டச்சத்தின்மை.

இவையாவும் மாணவர்களின் கருத்தொன்றிய கல்வியைப் பாதித்து விடுகின்றது.

வாழ்க்கைத்தரம் ஒரு புறம் கீழ்நிலையிலிருக்க மலசலகூட வசதியோ, மலசலகூடப் பாவனை பற்றிய அறிவோ இவர்களிடம் காணப்படாமையும் சுகாதார நிலைமைகளை மேலும் மோசமாக்கியுள்ளது. அத்துடன் நல்ல குடிநீர் வசதியோ, சுத்தமான நீர்ப் பயன்பாடு பற்றிய அக்கறையோ இவர்களிடம் காணப்படவில்லை.

இன்று கட்டாயக்கல்வி, இலவசக்கல்வி, சீருடை விநியோகம், சத்துணவுத்திட்டம் யாவும் மாணவர்களை ஊக்குவிப்பதற்காக விஸ்தரிக்கப்பட்டாலும், குறிப்பிட்ட சமூக ஏற்றத் தாழ்வுகளும், சிந்தனையாலும், மனப்பான்மையாலும் சமூகத்தில் அடக்கி ஒடுக்கப்பட்ட நிலைமைகளும் இலக்குகளின்றிய பயணமுமாக இவ்வறிய மாணவர்களின் வாழ்க்கை தொடர்கின்றது. மனித சமூகங்கள் சிறப்பாக வாழ்வதற்கு கல்வி முக்கியமானதாகக் கருதப்படுகின்ற அதேவேளையில், கல்வியானது ஏன்? ஒரு பிரிவிற்குள் கட்டுப்படுத்தப்படுகின்றது. பூர்த்தியாகாத கல்வியறிவைக் கொண்டிருப்பவர்களில் பெரும்பான்மையானோர் உழைக்கும் கீழ்த்தட்டு மக்களைச் சேர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

உழைக்கும் தொழிலாளர், விவசாய மக்களிலிருந்து இன்றைய நிலைமையில் கல்வி கற்றுயர்ந்த புத்தி ஜீவிகள் கூட தாம் சார்ந்திருந்த கிராமிய அமைப்பிலிருந்து விலகி நகர் நோக்கிய பயணமும், அதுவுமின்றி தாம் சார்ந்த தொழிலாளர் அமைப்பை முன்னோக்கி வளர்ப்பதில் ஆர்வமற்றவர்களாகவே காணப்படுகின்றனர். கிராமிய நிலைமைகளில் அச் சமுதாயத்தில் கல்வி கற்றவர்கள், அச்சமுதாயத்தால் வளர்க்கப்பட்டவர்கள், அவர்களுடைய தாய்ப்பாலிலே ஊட்டி வளர்க்கப்பட்ட குணங்கள், உளப்பாங்கு, பழக்கவழக்கம், சிந்தனை ஆகிய அனைத்தும் மனிதர்களைத் தங்களைப் பற்றியே சிந்திக்க அக்கறை கொள்ளச் செய்கின்றன. தமது நிலைமையை உயர்த்தும் முன்னேற்ற கரமான குறிகாட்டிகளுடன் அந்தஸ்து எனும் வட்டத்திற்குள் நின்று கொண்டு தாம் சார்ந்த சமூக மேம்பாட்டில் அக்கறை கொள்ளும் மனநோக்கே கிடையாது.

உலக சமூகங்கள் அனைத்திலும் அடிப்படைத் தேவைகள் (Basic needs) உண்டு. இந்த அடிப்படைத் தேவைகளின் திருப்தி அளவு (Amount Of Satisfaction) வேறுபடுகிறதே அன்றி ; தேவைகளற்ற சமூகம் உலகில் இல்லை. உடலின் நிலைப்பிற்கும் அதன் நலத்திற்கும் 'உடலியற் தேவைகள்' (Physiological needs) இன்றியமையாதவை. உதாரணமாக, பசி,தாகம், உறக்கம், பாதுகாப்பு, அன்பு, மரியாதை இவை நான்கையும் மாஸ்லோ அடிப்படைத் தேவைகளென வகுக்கின்றார். இவ் அடிப்படைத் தேவைகள் நிறைவேறாத மாணவனால் எவ்வாறு கல்விகற்கமுடியும்.

மெல்லக் கற்கும் மாணவர்களும், மீத்திறனற்ற மாணவர்கள், கிரகித்தல் திறனற்ற மாணவர்கள், ஆர்வமற்ற மாணவர்கள் எனப் பலதரப்பட்ட நிலைமைகளிலும் காணப்படும் மாணவர்களிடையே அவரவர் நிலைமைகளுக்கேற்ப அவரவருக்குரிய அணுகுமுறையே (approach) தேர்ந்தெடுக்கப்படவேண்டியது.

அடிப்படை அறிவற்ற காரணங்களினால் ஒரே வகுப்பில் மீண்டும் தங்கியிருத்தல், பரீட்சையில் சித்தியடையாதிருத்தல் ஆகியன அதிகரித்துள்ளன. இவ்வாறான தன்மைகள் கற்பித்தல் முறைமையானது வீண் விரயத்தை ஏற்படுத்துவதையே எடுத்துக்காட்டுகின்றன.

எழுத்தறிவில்லாத, வாசிப்புத் திறனற்ற மாணவர்களுக்கு இந்நிலைமைகளிலிருந்து மீட்டெடுக்காமல் மென்மேலும் கல்வி கற்பித்தலானது ஒரு திணிப்புச் செயற்பாடாகி பயனற்றதாகி விடுகின்றது.

வாழ்க்கைத்தரப் பின்னடைவில் வறுமையில் சிக்கித் தவிக்கும் மாணவர்களிடையே சூழலுக்கேற்ப நலத்தைப் பேணக் கூடிய வகையில் செயற்பட வேண்டும். சூழலை உருவாக்க கிராமப்பாடசாலைகள் முக்கிய கவனத்தை எடுக்கவேண்டும். பாடசாலை நலம் என்பது ஒரு கூட்டு முயற்சியாகும்.

கல்வியை ஒரு நகர்வுப் பொருள் எனும் அடிப்படையில் நோக்கும் போது அதன் நோக்கம் மனிதப் பண்புகளின் வளர்ச்சி, நல்லொழுக்க வளர்ச்சி, ஒரு நல்ல பிரஜையை உருவாக்குதல், ஒரு அமைதியான பரம்பரையைத் தோற்றுவித்தல் ஆகியனவாக. அமையும். இங்கு கல்வி ஒருவனுக்கு ஒரு அணிகலமாக விளங்குகிறது. ஒருவரின் நிலைமையைச் சோபிக்கச் செய்வதுடன் சமுதாய ரீதியாக கலாசாரத்தை நடைமுறைப் படுத்துவதும், பரிமாற்றுவதும் கல்வி மூலம் நிகழ்கிறது. ஏனைய சமூக சேவையைப் போல கல்வியும் ஒரு சமூக சேவையாக அமைகிறது.

கல்வியை ஒரு மனித உரிமையாகக் கருதும் போது அங்கும் நுகர்வுக் கருத்துத் தொனிக்கிறது. சமூக ஏற்றத் தாழ்வின்றி, சகலருக்கும் கிடைக்கவேண்டிய ஒரு உரிமை எனக் கருதி இவ்வுரிமையைச் சமுதாயத்தில் சகலருக்கும் கிடைக்கக்கூடிய முறையில் கருமமாற்ற வேண்டும். எழுத்தறிவற்றோர் அதிகம் உள்ள ஒரு சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட கட்டம் வரை கல்வியானது ஒரு நுகர்வுப் பொருளாக அமைவதைத் தடுக்க முடியாது. ஏனெனில் சமுதாயத்தின் நிலைப்பாட்டுக்கு எழுத்தறிவு அவசியமானது.

ஆரம்பக் கல்விக்கான அடித்தளம் முறையாக இடப்படுவதில் கூடிய அக்கறை செலுத்துதல் இன்றியமையாததாகும். முதியோர்கல்வி, பெற்றோர் கல்வி என்பன கூட அடிப்படையில் முறைமைப்படுத்தப் படினும், கடின உழைப்பின் மூலமே அடைவு மட்டங்களை குறிப்பிடத்தக்க நிலையிலேனும் காணலாம்.

சமூக முரண்படின்றி, சமூக, விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சியானது பாடசாலையூடாகவே ஏற்படுத்தப்படவேண்டும். கிராமிய சூழல்களிலும், பின்தள்ளப்பட்ட சமூக நிலைமைகளிலும் தொழில்நுட்ப வளர்ச்சியானது பாடசாலையூடாகவே ஏற்படுத்தப்படவேண்டும். "பேர்னாட் ரசல்" கூறுவது போல் தொழில் நுட்ப வளர்ச்சி மனித சமுதாயம் முழுவதற்கும் நிச்சயம் பயனளிக்கின்றது. ஆனால் சமு தாயத்தில் எந்தப் பிரிவு சார்ந்தவர்க்கு பயனளிக்கிறது என்பது குறிப்பிட்ட அந்த சமுதாயக் கட்டமைப்பைப் பொறுத்தே அமைகிறது என்கிறார்.

எமது சமூகத்தில் வாழ்க்கைத் தரம் கீழ் நோக்கியுள்ள மாணவர்களின் கல்வி நிலைமைகளில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூக அணிதிரட்டாளர்கள், சமூக ஊக்கு விப்பாளர்கள் ஆகியோருடைய பங்கு அளப்பரியது என்கிறார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)




# பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்



கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் தொடர் லண்டனில் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் இரண்டாம் சுற்றுப்போட்டியில் 15 ஆம் நிலை வீராங்கனையான கிம் கிளைஸ்டர்ஸ் அமெரிக்காவின் மரிசா இர்வினை சந்தித்தார். அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய கிளைஸ்டர்ஸ் 6-1,6-1 என்ற நேர் செட்களில் எளிதான வெற்றி பெற்றார். இந்த வெற்றியை பெற இவருக்கு வெறும் 44 நிமிடங்களே தேவைப்பட்டன.

மற்றொரு போட்டியில் 9 ஆம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் அனஸ்டாசியா மிஸ்கினா, ஜப்பானின் நகமுராவை 6-4,6-3 என்ற செட்களில் வீழ்த்தினார். செர்பியாவின் ஜெலினா ஜான்கோவிக், ஆர்ஜென்ரீனாவின் மரியானா டியாஸ் ஒலிவாவை 6-3,7-5 என்ற செட்களில் வென்றார். ஆண்கள் இரண்டாவது சுற்றில் 24 ஆம் நிலை வீரரான அமெரிக்காவின் டெய்லர் டென்ட் சக நாட்டு வீரரான கெவின்கிம்மை 6-3,6-4,6-4 என்ற செட்களில் வென்றார்.

செவ்வாய்க்கிழமை நடந்த ஆண்கள் முதல் சுற்றுப்போட்டியில் பிரிட்டனின் டிம்ஹெம்மேன், பின்லாந்தின் ஜார்கோ நியமின்னை 3-6,6-7,6-4,7-5,6-2, என்ற செட்களில் வென்றார். இந்த வெற்றியை பெற ஹென்மேன் சுமார் 3 மணி 32 நிமிடங்கள் போராடவேண்டியிருந்தது.

பிரெஞ்ச் ஓபன் சம்பியனான ஸ்பெயினின் ரபேல் நாடல் அமெரிக்காவின் வின்சென்ட் ஸ்பாடாவை 6-4,6-3,6-0 என்ற செட்களில் வீழ்த்தி இரண்டாம் சுற்றுக்கு முன்னேறினார். ஹெனின் தோல்வி-பெண்கள் ஒற்றையரில் பிரேஞ்ச் ஓபன் சம்பியனான பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின் முதல் சுற்றில் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். இவர் 76ஆம் நிலை வீராங்கனையான கிரீசின் எலினி டானிலிடுவிடம் 6-7,6-2,5-7 என்ற செட்களில் போராடி தோற்றார்..

# அவுஸ்திரேலிய வீரர்களை அச்சுறுத்திய பேய்கள்



அவுஸ்திரேலிய அணியை பேய் வேறு பயமறுத்துகிறதாம். வெள்ளை உடையில் அலையும் பேய்களை நேரில் பார்த்ததாகக் கூறி அலறுகிறார் ஷேன்வாட்சன்.

அவுஸ்திரேலிய வீரர்கள் செஸ்டர் லீ-ஸ்டிரீட்டில் உள்ள லம்லி கேசில் ஹொட்டலில் தங்கியுள்ளனர். நேற்று அதிகாலை நான்கு மணிக்கு திடீரென எழுந்த வாட்சன், பேய் அலைவதை பார்த்து பயந்து போயுள்ளார். பின்னர் பிரட்லீ ரூமிற்குச் சென்று தஞ்சம் தேடியுள்ளார். அந்த அனுபவத்தை ஷேன் கூறுகையில், ஜன்னல் திரையை மூடி விட்டு படுக்கப்போனேன். காலை நான்கு மணி இருக்கும். கண் விழித்தேன். திரை விலகியிருந்தது. ஜன்னல் வழியாக வெளியே பார்த்தால் அந்தப் பயங்கரம் தெரிந்தது. வெள்ளை உடையில் நிறைய பேய்கள் நடந்து சென்று கொண்டிருந்தன. இது கனவு அல்ல.

உண்மையைத்தான் சொல்கிறேன். ஏனென்றால் அப்போது தொலைபேசி மூலம் வந்த செய்தியை எழுதிக்கொண்டிருந்தேன் என்று நடுங்கியவாறு கூறினார்.

இந்த ஹொட்டலில் கொல்லப்பட்ட ஒருவரின் ஆவி அலைவதாக கூறப்படுகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இதே ஹொட்டலில் தங்கிய மேற்கிந்திய வீரர்களும் பயந்து போயுள்ளனர். இந்த சம்பவத்தால் வீரர்கள் இரவு முழுவதும் தூங்கவில்லை. மிகவும் களைப்பாக இருந்தார்கள். காலையில்தான் துணிச்சலை வரவழைத்துக்கொண்டார்கள். என அவுஸ்திரேலிய அணியின் ஊடக அதிகாரி தெரிவித்தார்.

# இந்தியாவில் தொடங்கும் ஹொக்கிப் போட்டி



சம்பியன்ஸ் டிராபி ஹொக்கியில் இந்தியாவுக்கு கடும் சவால் காத்திருக்கிறது. முதல் போட்டியில் இந்திய அணி வலிமை மிக்க அவுஸ்திரேலியாவைச்சந்திக்க வேண்டியுள்ளது.

சென்னை ராதா கிருஷ்ணன் அரங்கில் வரும் டிசம்பர் 10இல் சம்பியன்ஸ் டிராபி ஹொக்கி போட்டி துவங்குகிறது. இதில் இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, கொலண்ட், ஸ்பெயின், ஜேர்மனி ஆகிய உலகின் 6 முன்னணி அணிகள் பங்கேற்கின்றன. கடந்த முறை லாகூரில் நடந்த போட்டியில் பாதுகாப்புக் காரணங்களுக்காக அவுஸ்திரேலியா பங்கேற்கவில்லை. இம்முறை போட்டி சென்னையில் நடப்பதால் பங்கேற்க சம்மதம் தெரிவித்துள்ளது.

சென்னையில் சம்பியன் டிராபி போட்டி இரண்டாவது முறையாக நடக்கிறது. இங்கு 1996 இல் நடந்த போட்டியின் போது ஹொலண்ட் அணி கோப்பையை கைப்பற்றியது. சம்பியன்ஸ் டிராபி வரலாற்றில் ஜேர்மனி அதிகபட்சமாக 8 முறை கோப்பை வென்றுள்ளது.

ஹொலண்ட் அவுஸ்திரேலிய அணிகள் தலா 7 முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளன. 11முறை பங்கேற்றுள்ள இந்திய அணி 1982 இல் வெண்கலம் வென்றதே சிறந்த செயல்பாடு, இம்முறை போட்டி சொந்த மண்ணில் நடப்பதால் உள்ளூர் ரசிகர்களின் ஆதரவோடு இந்தியா சாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று வெளியான அட்டவணைப்படி முதல் போட்டியே இந்தியாவுக்கு சவாலானதாக அமைந்துள்ளது. ஒலிம்பிக் சம்பியன் அவுஸ்திரேலியாவை இந்திய அணி டிசம்பர் 10 இல் சந்திக்கிறது.

டிசம்பர் 14 இல் பாகிஸ்தான் எதிர்கொள்கிறது. டிசம்பர்16 இல் நடக்கும் போட்டியில் எதென்ஸ் ஒலிம்பிக் இறுதியில் மோதிய அதே அவுஸ்திரேலியா. ஹொலண்ட் மோதுவது சுவாரஸ்யமான விஷயம்.

ஜேர்மனியில் கான்படரேசன் கால்பந்து தொடர் நடந்து வருகிறது. நுர்ம்பர்க்கில் நடந்த ஜேர்மனிக்கு எதிரான போட்டியில் ஆர்ஜென்ரீனாவின் எஸ்டிபன் கேம்பியசோ அபாரமாக செயல்பட்டு இரண்டாவது கோல் அடித்தார். இதன்மூலம் தனது அணியை தோல்வியிலிருந்து மீட்ட மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கிறார். இந்தப்போட்டி 2-2 என்ற கோல் கணக்கில் சமன் ஆனது.

# சிம்பாப்வேக்கு செல்லும் நியூசிலாந்து அணி அறிவிப்பு!



சர்ச்சைக்குரிய சிம்பாப்வே தொடருக்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. காயம் குணமான நிலையில் ஷேன் பாண்ட் மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார்.

நியூசிலாந்து அணி வரும் ஆகஸ்டில் இரண்டு டெஸ்ட் மற்றும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் பங்கேற்பதற்காக சிம்பாப்வே செல்கிறது. இதற்கான முன்னணி வீரர்கள் அடங்கிய நியூசிலாந்து அணி அறிவிக்கப் பட்டுள்ளது. காயம் குணமான நிலையில் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளரான ஷேன் பாண்ட் மீண்டும் அணியில் இடம் பெற்றுள்ளார். முத்தரப்பு தொடரில் நியூசிலாந்து சிம்பாப்வே அணிகளுடன் இந்தியாவும் விளையாடுகிறது.

முன்னதாக சிம்பாப்வே அதிபர் ராபர்ட் முகாபே வெள்ளை இன மக்களுக்கு எதிராக ஆட்சி நடத்துவதால் இங்கிலாந்து ஆவுஸ்திரேலியா போன்ற அணிகள் அங்கு சுற்றுப்பயணம் செல்ல மறுத்தன. பின்னர் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி) நெருக்கடியினால் இரண்டாம் தர அணியை அனுப்பியது. இந்நிலையில் நியூசிலாந்து அணி செல்ல உள்ளது. நியூசிலாந்து பிரதமர் ஹெலன் கிளார்க் இச்சுற்றுப்பயணத்தை ரத்துச் செய்யுமாறு கிரிக்கெட் சபைக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஆனால் பாதுகாப்பு காரணங்களுக்காக ரத்துச் செய்யும் பட்சத்தில் நியூசிலாந்து கிரிக்கெட் சபை சுமார் 10 கோடி ரூபாவை அபராதமாக ஐ.சி.சிக்கு வழங்க வேண்டும். இதனால் நியூசிலாந்து அணி கட்டாயம் அனுப்பப்படும் என அந்நாட்டு கிரிக்கெட் சபை தலைவர் மார்டின் ஸ்னேடன் கூறியுள்ளார்.

(19 ஆம் பக்கத்தொடர்ச்சி....)

* இச் சமூக நிலைமைகளைப் புரிந்து கொள்வதற்கான மனத் தெளிவு, நிதானம், சேவை மனப்பாங்கு எல்லாவற்றுக்கும் மேலாக அச்சமூகத்தவருக்காக தம்மை அர்ப்பணிக்க வேண்டியது அவசியம்.

* குறிக்கப்பட்ட ஒவ்வொரு மாணவர்களின் வாழ்க்கைத் தரத்தைக் கண்டறிதல், பிரச்சினைகளை உள்வாங்குதல், தனியாள் வரலாறுகளைத் தயாரித்தல், தீர்வுகளுக்கான திட்டங்களை வகுத்தல்.

* அச்சமூகத்தவருக்குப் பொருத்தமானவை எனக் கருதக் கூடிய திட்டங்களை அறிமுகப் படுத்தல், உதாரணமாக குடும்பத் திட்டமிடல், பிள்ளைகளை பாரமரித்தல், சுயதொழில் ஊக்குவிப்பு வாய்ப்புத் தொடர்பான திட்டங்களை முன்வைத்தல்.

* மாணவர்களிடையே தத்தம் ஆளுமைக்கேற்ப நடிபங்குப் பாத்திரங்களை ஏற்பதற்கான கருத்துருவங்களை வழங்கல்.

*இம்மாணவர்களுக்கிடையேயும், பெற்றோர்களுக்கிடையேயும் சுயபிரதிமை (Self images) பற்றிய உணர்வினை ஏற்படுத்தி புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுத்தல் போன்ற விழுமியங்களை ஊட்டுதல்.

* ஒன்று திரட்டல் அணுகுமுறை வாயிலாக, சமூக மதிப்பீட்டைப் பெற்று, அச்சமூகத் தவரே தம்மைப் புரிந்து கொண்டு புனரமைக்கச்செய்தல்.

* இறுதிவரை தொடர்ந்து தமது கல்வி அடைவு மட்டங்களின் இலக்குகளை உயர்த்துவதற்கான உற்சாகத்தை, ஊக்குவிப்புத் திட்டங்களை வழங்குதல்.

'வறுமை' எனும் குறிகாட்டியுடன் வாழும் மாணவர்களின் மேம்பாட்டு மட்டங்களில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிகளும், பங்களிப்புக்களும் மறுக்கவோ, மறக்கவோ முடியாதவை.

எனவே கல்வி மனித வள முதலீடாகும். வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றகரமான நிலைமைகளை எதிர்நோக்குவதற்கு குறிப்பிட்ட சமூகக் குடும்பங்களிடையே வருமானத்தை ஈட்டக்கூடிய பொருளாதார ஊக்குவிப்புகளும், அத்துடன் சமூகப் பொருளாதார மாற்றங்களும் இன்றியமையாதவை.

# மனித மனங்களும் அதன் நடத்தைகளும்

மாதங்கி

பூமியில் மனிதன் பிறந்தது முதல் இறப்பது வரை எத்தனையோ தேவைகள் அவனைச் சூழ்ந்துள்ளன. ஆனால் இத்தேவைகளும் ஆசைகளும் கூட அவனது சூழலினாலும் இயல்பூக்கத்தாலும் மரபாலும் பெறப்படுகின்றன. இவையாவும் அனைத்து உயிர்களுக்கும் ஒரே தன்மையுடையதாக அமைவதில்லை. அவற்றின் சூழலிற்கும், சமூகத்திற்கும் ஏற்ப மாறுபடுகின்றன. தம்முள்வேறுபடுகின்றன.

எண்ணங்கள், கற்பனைகள், சிந்தனைகள் எல்லோருக்கும் உண்டு. ஒருவனது எண்ணங்கள் மனதிலே பதிவாகின்றன என்பர். ஆனால் அது தவறு. புலன்களால் பெறப்படும் நுகர்வுகள் மூளையில்தான் பதிவாகின்றன. தோன்றும் எண்ணங்கள் பதிவாவதும் மூளையின் சிந்தனைப் பகுதியில்தான். மூளையும் மனமும் வெவ்வேறானதாகக் கூறுவர். உளவியலாளர்கள் மனப்பகுதி என்று மூளையின் இடது புறத்தை ஆய்வுகளிலே குறிப்பிடுவர். ஆனாலும் இதயம், நெஞ்சம், குருதி போன்ற இடமெல்லாம் மனம் பரவி நிற்கிறது என்று கூறுவர். மனம் ஓர் உறுப்பல்ல; அது பழக்கத்தினால் வந்து விட்ட ஒரு போலி உறுப்பாகவே கொள்ளப்படுகின்றது.

மனித மனமும் நடத்தையும் தொடர்பான பல பரிமாணங்களை எம் முன் நாம் காண்கின்றோம். ஒல்போட் எனும் அறிஞர் இயற்கையான சுபாவங்களிலிருந்தே மனவெழுச்சிகளும், உள மூட்டங்களும் கிளர்ந்தெழுவதாகக் குறிப்பிட்டுள்ளார். தோமஸ் மற்றும் செஸ் போன்ற அறிஞர்கள் மனித சுபாவங்களிலிருந்தே, வெளிப்பாடாக நடத்தைக் கோலங்கள் அமைவதைச் சுட்டிக் காட்டியுள்ளனர். மனித மனங்கள் இயற்கையில் ஏற்படும் விவேகங்களாய் மனித நடத்தையுடனும், ஆளுமையுடனும் தொடர்புடையதாய் அமைந்துள்ளமை ஆய்விற்குட்பட்டிருப்பதைக் காணலாம்.

பி.எப்.ஸ்கின்னர், எபிரகாம் எச். மாஸ்லோ, கார்ல் ஆர். ரொஜர்ஸ் முதலியோர் முற்றிலும் உளவியல் தளத்தில் நின்று நடத்தைகளையும், சுய இசைவாக்கத்தையும், தன்னியல் நிறைவையும் (Self Actualization) விளக்கியமையால் நடத்தையும் இசைவாக்கலும் பற்றிய அணுகுமுறைமை முழுமை அடையாமற் போய்விட்டது. இதனை மற்றொரு விதத்தில் கூறுவதானால், சமூக இயக்கங்களுடனும், முரண்பாடுகளுடனும் மனித மனங்களின் இயல்பான சுபாவங்கள் ஒன்றிணைக்கப்படாத விடத்து மட்டுப்பாடுகள் தொடர்ந்து கொண்டேயிருக்கும் என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

சிக்கல் பொருந்தியதும், ஒன்றிணைந்ததுமான சமூக இயக்கங்கள் தனிமனித அலகு ஒவ்வொன்றின் மூலமும் தாக்கங்களை ஏற்படுத்தியவண்ணமுள்ளன. இந்நிலைமைகளில் மனித மனங்களின் நிலைமைகள் பற்றிய பங்கு பற்றல் அவதானம், நேர்காணல் சரியான நம்பகத் தன்மையுடையனவே நன்மை பயப்பனவாய் அமைந்தும் விடுகின்றன.

சமூக முரண்பாடுகள் சிறியனவாயும், பெரியன வாயும் பலதரப்பட்டும் இருக்கும் நிலைமையில் மனித நடத்தைக் கோலங்களும், அதற்கேற்ப இசைவு படுதலும் எண்ணில் அடங்காத முடிவிலிகளாய்ப் பெருக்கெடுத்துச் செல்கின்றன. அந்நிலைமையில் இசைவாக்கத்தின் பொழுது எழும் உராய்வுகளும், பிறழ்வுகளும், மனித மனங்களில் தாக்கத்தை ஏற்படுத்திச் சமூகச் சுமைகளாக மாறும் பொழுதுகளில் அவை மனித மனங்களில் நெருக்கடிகளை ஏற்படுத்தியும் விடுகின்றன.

மனம் என்பது சூழலினால், சமூக நடத்தைத் தாக்கங்களினால்



தோன்றுகிறது. எல்லோருக்கும் மனம் என்பது ஒன்றல்ல. அவரவர் சூழலுக்கும் சமூக எதிர் வினைகளுக்கும் ஏற்ப மாறுபடும். அவ்வாறில்லையாயின் ஆபிரிக்காவிலே ஓநாய்களோடு வளர்க்கப்பட்ட ‘அனா’ என்ற சிறுவன் ஓநாய்களைப் போலல்லாது மனிதனாகவே வளர்ந்திருக்க முடியுமல்லவா? ஆரம்பத்தில் மனித உறுப்பும் உயிருமே பல தாக்கங்களுக்குட்பட்டு வளர்ச்சி நிலையை அடையும். பின் அது படிப்படியாக வளரும். அதே வேளையில் சமூகத் தாக்கங்களுக்கு ஈடு கொடுக்கவும் தன்னைத் தயார்ப்படுத்துகின்றது. அப்பொழுது தான் அதற்கு மனம் எனும் பதத்திற்குரிய விருத்தி ஆரம்பிக்கிறது.

‘சமூகம்’ எனும் பதத்துனுள்ளே, அதன் அடிக்கட்டுமானத்தில் ஒரு குழுமமானது மனித மனங்களில் ஏதோ ஒரு வடிவிலான ஒத்த ஓட்டங்கள் அத்திவாரமிடப்பட்டு, அதனை அடிப்படையாகக் கொண்டு மேற்கிளம்பும் சமூகக் கட்டமைப்பு, சமூக இயக்கம் என்பன நிர்ணயிக்கப்படுகின்றன, எனும் உண்மை உள்ளடக்கப்படுகின்றது.

தொடர்ந்து யுத்த அழுத்தங்களின் மத்தியில் அமுங்கி இருந்த எம் தமிழ் மக்களுக்கு இடப்பெயர்வுகள், இயற்கை அனர்த்தங்கள், உயிரழிவுகள், பொருளாதாரக் காரணிகளின் பின்னடைவுகள் போன்றன அச் சமூக மனங்களில் பெருத்த, எதிர்பாராத மாற்றங்களை உள்வாங்கும் மனப்பாங்குகளை வெவ்வேறு ஆழங்களில் பதித்து, முன்னர் நிலவிய சமூகப் பண்பிலும் ஒழுங்கமைப்பிலும் பெருத்த கட்டமைவு மாற்றங்களை உள்வாங்கி ஒரு புதிய சமூக உருவாக்கத்தை (A New Social Formation) தோற்றுவித்துள்ளது என்றே கொள்ள முடிகிறது.

இன்றைய பாதிக்கப்பட்ட சமூகங்களில், மனித மனங்களில் சமூக நிறுவனங்களான குடும்பம், பாடசாலை, தேவாலயம், கோயில், ஏனைய அமைப்புக்கள் ஆகியவற்றினை தொலை நோக்கினூடு பார்த்தால் தெள்ளெனத் தெரிவது பயம், விரக்தி, அதிர்ச்சி, சோகம் எனும் உணர்வுத்தளங்களே. இவ்வுணர்வுகள் கூட உளவியல் ரீதியில் உரிய வெளிப்படுத்தல்களுடன் அடிமனங்களில் பதிக்கப்பட்டுள்ளதா? அல்லது முழுச் சக்தியையும் ஒன்றுதிரட்டி உயிருடனேயே புதைக்கப்பட்டுள்ளதா? என்பதோ, திடீர் அதிர்ச்சிகளை நாளாந்தம் மனித மனங்கள் எவ்வாறு உட்பதித்துத் தமது நாளாந்த நிகழ்வுகளில் ஈடுபட்டுக் கொள்கின்றன? என்பது அறிய முடியாததாகவே உள்ளது. மனிதர்கள் தமக்கேற்ற விதங்களில் போலி நியாயங்களை உருவகித்து சமூக நெருக்கடிகளை உண்டு பண்ணிய பொழுதுகளில் மனித மனங்களில் உணர்வுச் சட்டகம் இறுக்கப்பட்டு சமூக இயக்கம் நடைபெறுகிறது.

இந் நூற்றாண்டில், மனிதனின் நுகர்ச்சிக் கோலங்களிலும், அசை வியக்கங்களிலும் (Mobility) விரைவான மாற்றங்கள் நிகழத் தொடங்கியுள்ளன. நவீன அங்காடிகளில் முன் காணப்படாத நுகர்வுப் பொருட்கள் இன்று ஏராளமாகக் கிடைக்கின்றன. இதுவும் ஒரு வகைச் சமூக நெருக்கடியை உருவாக்கியுள்ளது. நுகர்ச்சிக் கோலங்கள் மட்டுமல்லாது மனிதர் பிரயாணம் செய்யும் அசைவுத் தூரங்களும், இடப்பெயர்ச்சியும், தொடர்பாடல் முனைப்புக்களும், விசைகொண்டு செயற்படத் தொடங்கியுள்ளன. இந்நிலையில் மனித இசைவாக்கம் என்பது "தொடர்பாடல் நிலைப்பட்ட இசைவாக்கம்" (Communication Adjustment) என்ற எண்ணக்கருவினால் விளக்கப்படுகின்றது. சமூக மாற்றங்களைத் தொடர்பாடற் சாதனங்களின் தனிநபருக்குரிய நுகர்வுச் சுட்டிகளினாலும் குறிப்பிட்டு விளக்குவர்.

மனித இசைவாக்கத்தைத் தொடர்பாடற் சாதனங்கள் ஒருபுறம் வளமாக்கி வருகின்றவேளை, மறுபுறம் இசைவாக்க உராய்வுகளையும் அவை ஏற்படுத்தி விடுகின்றன. தென்னிந்திய திரைப்படங்களின் போக்கு பல்வேறு விதமான சமுதாயச் சீரழிவுகளை எம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றது. வன்முறையை வளர்ப்பதிலும், சமூக அநீதிகளுக்கு பக்கபலமாக இருப்பதற்கும் தொடர்பு சாதனங்கள் கைகொடுத்துதவுகின்றன. கருத்துக்களை மிகைப்படுத்தி, வெவ்வேறு தப்பான, புரிதலில்லாத அர்த்தங்களைக் கூறி மனித மனங்களை நோகடித்து, வியாபார நோக்கிலும், பக்கச் சார்பு கருதியும் சில தொடர்பாடற் சாதனங்கள் பணியாற்றுகின்றன.

மனித மனங்களில், முற்சாய்வு என்பது ஒரு வகை மனப்பாங்காகும். இது குழுக்களுக்கிடையிலான, தனியன்களுக்கிடையிலான முரண்பாட்டை விளங்கிக் கொள்வதற்குப் பெரிதும் பயன்படுகிறது. பிறரைப் பற்றிய உண்மை நிலையை அறியாமல், பிறரைப் பற்றி எதிரான சிந்தனையை ஏற்படுத்தும் மனப் போக்காகும் ‘பிறருக்கு எதிரான முறையில் சிந்திக்கவும், செயற்படவும் இவை நம்மைக் கட்டுப் படுத்தும் மன நிலையாகும்’ என்று நியூகோம்ப் எனும் அறிஞர் விளக்கம் தருகின்றார். நேர்மையற்ற தீர்ப்பாக இந் நிலைமை உருவாக்கம் பெறுகிறது. "எங்கட ஆள் செய்தது என்றால் சரிதான்", "அவை எவளவு பெரியாட்கள்", "அவை இருக்கிற இருப்பு தெரியுமே" என அமைவதுடன் புறக் குழு நடத்தை எல்லாமே பிழை எனக் காணவும் வழி வகுக்கும். இவற்றிற்கு ஆதாரமாக வலுவுள்ள மனவெழுச்சிகளும், விருப்பு, வெறுப்புகளும் காணப்படுகின்றன. முற்சாய்வின் விளைவாகவே பாரபட்ச உணர்வு ஏற்படுகின்றது.

சிக்மன்ட் புரொயிட் எனும் உளவியலாளர், இட் (Id), அகம் (Ego), அதியகம் (Superego) எனும் மூன்று ஆளுமைக் கட்டமைப்பிற்கு இடையிலான முரண்பாடுகளால்தான் முற்சாய்வு மனப்பாங்கு தூண்டப்படுகின்றது என்கிறார். மனித மனங்களிலே இவை பல்வேறு தாக்கங்களை உண்டு பண்ணிக் குறிப்பிட்ட தனி நபருக்கோ, குடும்பத்திற்கோ, சமூகத்திற்கோ பல்வேறு விதமான அச்சுறுத்தலை வழங்கும் தூண்டியாக அமைகிறது. பிரசாரம் அல்லது கொள்கை பரப்புதல் மூலமும் முற்சாய்வு எண்ணங்கள் பெறப்படுகின்றன. நன்நோக்கத்திற்காகச் செய்தி பரப்புதல், எடுத்துக் காட்டாக விழிப்புணர்வு பிரசாரங்கள் சமுதாய நன்னோக்குக் கருதியவை. மாறாக உண்மைகளைத் திரித்துக் கூறுபவர்களும் பிரசாரங்களின் வழி தமது அநியாயங்களுக்கு பூச்சுக்கள் பூசி மறைத்துவிட திடசங்கற்பம் பூண்டவர்களாகக் காணப்படுவர்.

உண்மையான, ஆராய்ச்சி மனப்பான்மை கொண்ட கல்வியறிவு பெற்றவர்களிடத்தில், ஏனையவரை விட முற்சாய்வெண்ணம் குறைவு எனக் கூறப்படுவதையும் மனதில் கொள்ளலாம். ஆயினும் பண வருமானம் அதிகரிக்கும்பொழுது தனிநபர்களின் நடத்தைகளிலே மாற்றங்கள் ஏற்படுமாயினும், மகிழ்ச்சி அதிகரிக்கும் என்பதற்கு உத்தரவாதமில்லை. சமூகம் சமநிலையில் இயங்க வேண்டும். ஆனால் புள்ளிவிபரங்களைப் பொதுமையாக்கிசமூக, பொருளாதாரச் சுரண்டலை நியாயப் படுத்தி விட முடியாது.



*(மிகுதி அடுத்தவாரம்)*



# ஊளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 11

**பகுதி -52**

தனக்கும் களைப்பா இருக்கிறதெண்டு அவ சொன்னவ. உடுப்புத் தோய்க்கிறவாவுக்கு கட்டில் இல்ல. நிண்டு கொண்டு தான் அவ உடுப்புத் தோய்க்கிறவ. இயந்திரங்கள கவனிக்கிறவ. சில நேரத்தில இந்தப் பிள்ள உடுப்புத் தோய்க்கிற அறைக்குப் பேறவன். அவவுக்கு களைப்பா இருந்தா அவ படுக்கையில போய் ஓய்வெடுக்கலாமே எண்டு அவன் கேட்கிறவன்.

தனக்கு வேலை செய்யுறதுக்குத்தான் சம்பளம் தாறது ஓய்வெடுக்கிறதுக்கு இல்ல எண்டு அவ சொல்லுறவ. அவ ஒரு சாய்ஞ்சாடுற கதிரய கொண்டு போய் அவவட அறையில வைச்சிருக்கலாமெண்டு அம்மா சொன்னவ. நாப்பது வருசமா அவ இந்தக் குடும்பத்துக்கு உடுப்புத் தோய்க்கிறா. என்ர கடவுளே! அவ இடைக்கிடை ஓய்வெடுக்கக் கூடாதா? எண்டு சமையலாள் சொல்லுறவ. சாய்ஞ்சாடுற கதிர சத்தம் போடுமெண்டா அப்பிடி ஓய்வெடுக்க ஏலாதெண்டு உடுப்புத் தோய்க்கிறவ சொல்லுறவ. அப்பிடி சத்தம் போட்டா அது அந்த மனுசனக் குழப்பும். அப்பிடிக் குழப்பி விட்டா கடவுள்தான் எங்கள காப்பாத்த வேணுமெண்டு உடுப்புத் தோய்க்கிறவ சொல்லுவா. அவர் வேணுமெண்டா போய் சோப் தண்ணீருக்க தலையை ஓட்டட்டும் எண்டு சமையலாள் கோவத்தோட சொல்லுறவ. பிறகு உடுப்புத் தோய்க்கிற இடத்தில இந்தப் பிள்ளைக்கு பிடிக்கக் கூடிய ஒண்டும் இல்லையெண்டு சொல்லி மேல அனுப்பிவிடுவா. இந்த பிள்ளையும் மேல போயிடும்.

இந்த நேரத்தில டிப்ஸ் செய்து வைத்திருந்த புதிரை தவறுதலாக கீழே தட்டிவிழுத்தி விட்டேன். நான் கீழே குனிந்து அதை நேராக்கிச் சரிப்படுத்தி விட்டேன். டிப்ஸ் சடாரென்று எனது பக்கமாக தன் பார்வையைச் செலுத்தினான்.

"நீங்கள் என்ன செய்யிறீங்கள்?" என்று கேட்டான்.

"நான் நீங்கள் செய்து வைத்திருந்த புதிரை காலால தட்டி விழுத்திப் போட்டன். குழலூதியின்ர மகன் ரொம் ரொம் கழண்டு போனான்." என்று சொன்னேன்.

டிப்ஸ் ஆர்வத்தோடு என்னைப் பார்த்தான். "நீங்கள் என்ன சொன்னனீங்கள்?" என்றவன் "நீங்கள் அப்ப என்ன சொன்னனீங்கள் எண்டு விளங்கயில்ல" என்று முடித்தான்.

''நான் தவறுதலா புதிரை தட்டிவிழுத்திப் போட்டன். குழலூதியின்ர மகன் ரொம் ரொம் பிரிஞ்சு போனான் எண்டு சொன்னனான்'' என்றேன்.

"அப்பபடியோ?'' என்றான் டிப்ஸ். அவன் தன்னுடைய செயற்பாடுகளில் எவ்வளவுக்கு மூழ்கியிருப்பதாகத் தோன்றினாலும் இந்த அறையில இடம் பெறுகிற எந்த ஒரு நகர்வும் அவனுக்கு உணர்வாகிக் கொண்டு தான் இருந்தன. முழங்காலிட்டு குனிந்து கொண்ட அவ்ன் புதிரை நான் சரியாக பொருத்தியிருக்கிறேனா என்று பார்த்தான். அந்த சோதனையில் அது சித்தி பெற்றிருந்தது. எழுந்து நின்ற அவன் விளையாட்டு அறையின் பூட்டுடன் விளையாடினான்.

"பூட்டட்டா?'' என்று கேட்டான்.

"கதவ பூட்ட விரும்புறீங்களா?' என்று கேட்டேன்.

"ஓமோம்'' என்றான் டிப்ஸ். பிறகு கதவைப் பூட்டினான். "இதைப் பூட்டியாச்சு.'' என்றான்.

ஒரு கணம் கடந்து சென்றது.

"ஓம் இப்ப அது பூட்டியிருக்குது. சரி. இப்ப நீங்கள் அதத் திறவுங்கோ பாப்பம். நீங்க போற நேரம் வந்திட்டுது.''

''ஓமோம் எனக்கு வீட்ட போக விருப்பமில்லையெண்டு உங்களுக்கு தெரிஞ்சாலும் திறக்கத்தான் வேணும்'' என்றான் டிப்ஸ்.

"ஓம் உங்களுக்கு வீட்ட போறவிருப்பம் இல்லையெண்டு எனக்குத் தெரிஞ்சாலும், நீங்க போக வேண்டிய நேரம் எண்டு சில நேரங்கள் இருக்குது. இது அதுமாதிரி ஒரு நேரம் தான்.''



எனக்கு முன்னால் வந்து நின்ற அவன் எனது கண்களுக்குள் நேராக பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தான். பெருமூச்சொன்று அவனிடமிருந்து கிளம்பியது.

"ஓம்'' என்றான். "எனக்குத் தெரியும். இஞ்ச கனக்க வேலை செய்யலாம். ஆனா கடசியில எப்போதுமே நான் போகத்தான் வேணும்'' சொல்லிவிட்டு கதவை நோக்கி நடந்தான்.

"உங்கட கோட்டும் தொப்பியும்....''

"ஓம் உங்கட கோட்டும் தொப்பியும்' என்றவன் திரும்பிப் போய் கோட்டை எடுத்து அணிந்து கொண்டான். தொப்பியை சடாரென்று தலையின் மீது அறைந்து புகுத்திக் கொண்டான் "என்ர தொப்பியும் கோட்டும்'' என்றான். நிமிர்ந்து என்னைப் பார்த்தான். "போயிற்று வாறன் மிஸ் ஏ. இன்னொருக்காவும் வியாழன் வரும். ஒவ்வொரு கிழமையிலயும் வியாழன் இருக்குது. போற்று வாறன்''

மண்டபம் நெடுக நடந்து வரவேற்பு அறைக்குள் சென்றான். அவன் போவதை நான் பார்த்துக் கொண்டே இருந்தேன். திரும்பிப் பார்த்த அவன் கையை அசைத்தான் "போயிற்று வாறன்" என்று மீண்டும் சென்னான்.

சின்ன வயது. சின்ன உருவம். ஆனா நிறைந்த வலு. பின்பு நான் ஜேக்கைப் பற்றி எண்ணினேன். இந்தப் பிள்ளையுடைய வளர்ச்சியில, அவர் காட்டின புரிந்துணர்வும் மென்மையான பரிவும் எந்தளவுக்கு முக்கியமான பகுதியாக ஆகிவிட்டிருக்கிறது




என்று அவர் அறிந்திருப்பாரா என்று எண்ணிக் கொண்டேன். குறியீடு போல் அவர் எடுத்துக் கொடுத்த நுனிக்கிளையையும் மெலிந்து களைத்து தேய்ந்து போயிருந்த அந்தச் சிறிய இலையையும் பற்றி எண்ணிக் கொண்டேன். உள்ளார்ந்த ஆர்வத்துடன் டிப்ஸ் கேட்ட கேள்வியை நினைத்துக் கொண்டேன்.

''அவர ஒரு நண்பன் எண்டு சொல்லலாமா?'

## அத்தியாயம்- 12

ஒவ்வொரு வாரத்திலும் வியாழக்கிழமை உண்டு. அதை அடுத்து வரும் வாரமும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை எனினும் டிப்ஸால் விளையாட்டு அறைக்கு வர முடியவில்லை. அவனுக்கு சின்ன முத்து போட்டிருந்தது. அவனுடைய தாயார் என்னோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு அன்றைய சந்திப்பை இரத்துச் செய்துகொண்டிருந்தார். அதற்கு அடுத்த வாரம் அவன் போதியளவுக்கு குணமடைந்திருந்ததோடு விளையாட்டு சிகிச்சை அமர்வுக்கென உரிய நேரத்தில் வந்து சேர்ந்தான். அவனுடைய முகம் இன்னமும் அதைத்துப் போயிருந்தது. வெளிறியிருந்தது. எனினும் வரவேற்பறைக்குள் வரும்போதே,"சின்ன முத்து எல்லாம் போயிற்றுது. இப்ப எனக்குச் சுகம்'' என்று சொல்லிக் கொண்டே வந்தான்.

"சின்ன முத்து எல்லாம் உண்மையாவே போயிற்றுதா?' நான் அவனை நம்பாதது போல் அவனிடம் கேட்டேன்.

"ஓம் எல்லாம் போய்ச் சேர்ந்திற்றுகள். வாங்கோ விளையாட்டறைக்குப் போவோம்.

நாங்கள் எனது அலுவலகத்தை தாண்டிச் சென்றபோது டிப்ஸ் எனது அலுவலகத்தினுள் எட்டிப் பார்த்தான் எனது அறையில் இருந்த பதிவு செய்யும் கருவிகளை இருவர் திருத்திக்கொண்டிருந்தனர்.

"எங்கட அலுவலகத்தில இரண்டு பேர் இருக்கினம்'' என்றவன், "இல்ல உங்கட அலுவலகத்தில இரண்டு பேர் இருக்கினம்'' என்று திருத்திக்கொண்டான்.

"ஓம் நாங்க விளையாட்டறைக்குள்ள இருக்கயிக்க அவையள் இஞ்ச வேலை செய்வினம்'' என்று அவனுக்குச் சொன்னேன்.

"உங்கட அலுவலகத்துக்க வேற ஆக்களையும் விடுறனீங்களா?'' என்று கேட்டான்.

"ஓம். சில நேரங்களில விடுறனான்.''

''அங்க அவையள் என்ன செய்கினம்?''

"பதிவு செய்யுற கருவிகளில சிலத திருத்துகினம்''

நாங்கள் விளையாட்டறைக்குள் செல்லும்போதே தனது கோட்டையும் தொப்பியையும் கழற்றிவிட்ட டிப்ஸ், அவற்றை ஒரு கதிரையின் மீது எறிந்தான்.

"போன வியாழன் வராதது ஒரே சலிப்பா இருந்துது'' என்று சொன்னான்.

ஓம் எனக்கு விளங்குது [illegible]

''சின்னமுத்து வந்து [illegible] போனது எனக்கும் கவலையாத்தான் இருந்துது''

"கெதியா சுகமாக வேணுமெண்டு நீங்கள் அனுப்பின பிரார்த்தனை மடல் எனக்கு கிடைச்சது அது எனக்குச் சந்தோசமா இருந்தது. அப்பிடி அட்டைகள் வாறது எனக்கு நல்ல விருப்பம்.''

"அப்பிடி நீங்கள் விரும்புறது எனக்கும் சந்தோசமாயிருக்குது''

"கெதியா சுகமாகச் சொல்லி அந்த மடல் சொல்லினது. என்னைக் காணாம உங்களுக்கு ஏக்கமா இருக்குதெண்டு அதில இருந்துது.''

"ஓம் அப்பிடித்தான் அதில இருந்தது''

"நீங்கள் அனுப்பின றோசா கிளை எனக்கு நல்லாப்பிடிச்சுக் கொண்டுது. இரண்டு பக்கமும் பூக்களோட இருந்தது நல்ல வடிவா இருந்துது. எனக்கு நல்ல சந்தோசமா இருந்துது. அத கொஞ்சக் காலம் தண்ணிக்குள்ள வைச்சா வேர் விடும் எண்டு அப்பா சொன்னவர். பிறகு தோட்டத்தில நாட்டினா அது மரமா வளரும் எண்டும் சொன்னவர். அப்பிடி நடக்குமோ மிஸ்?' டிப்ஸ் கடைசியில் கேட்டான்.

"அப்பா இதச் சொன்னவர் எண்டா சொன்னனீங்கள்? அதப்பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்கள்?'' என்று நான் பதிலுக்குக் கேட்டேன்.

"அவர் சொன்னது சரியெண்டுதான் நினைக்கிறன். ஆனா நானே அத கவனிச்சு என்ன நடக்குதெண்டு பாக்கப்போறன்.'' என்றான் டிப்ஸ்.

"ஓம் விஷயங்கள தெரிஞ்சு கொள்ளுறதுக்கு அதுகும் ஒரு வழிதான்'' என்றேன்.

தன்னுடைய தந்தை சொன்னது பற்றி டிப்ஸ் சொன்னது எனக்கு ஆர்வமூட்டுவதாக இருந்தது. அந்த உரையாடல், டிப்ஸ்ஸை நெருங்குவதற்கான அவனது தகப்பனின் புதிய அணுகு முறையா? அல்லது டிப்ஸ்ஸிடமிருந்து எந்தப் பதில் வினையும் இல்லாத போதும் விடயங்களைப் பற்றி டிப்ஸ்ஸுக்கு விளக்குவதற்கு அவர் பல முயற்சிகளை எடுத்திருக்கக் கூடுமா என்று அறிந்து கொள்வது கடினமானதாக இருந்தது.

(தொடரும்)

---

(16 ஆம் பக்கத்தொடர்ச்சி)

நாடு சுவீடன்தான். பெரிய நாடு, தலைநகர் ஸ்ரொக்ஹொல்ம் தவிர மற்ற இடங்களில எங்கட சனம் அங்கையிஞ்சை எண்டு சிதறித்தான் இருக்கிது. 10 ஆயிரம் மட்டிலவரும். சுவீடன் மக்களும் ஒருகாலத்தில கஸ்ரங்களால அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தவை தான். ஆனால் இண்டைக்கு இரும்புத்தாது உட்பட இயற்கை வளங்களும், மனிதஉழைப்பும் சேர்ந்து நாட்டை நல்ல நிலைமைக்கு உயர்த்தியிருக்கு. இந்த ஸ்கன்டிநேவியக்காரரின்ரை பேர் களைப் பார்க்க நல்ல பம்பலாய் இருக்கும். உதாரணத்துக்கு ஒருத்தருக்கு கந்தையா பேர் எண்டால், அவற்றை மகனுக்கு கந்தையாவின்ரை பிள்ளை எண்டமாதிரி இருக்கும். அப்படியெண்டால் பேரனின்ரை பேர் எப்பிடியிருக்கும் எண்டு கேட்டுப்போடாங்கோ! உலக அதிசயங்கள் எவை எண்டு கேட்டால் 7 ஐயும் ஒண்டு விடாமல் சொல்லுவீங்கள். அரச பரம்பரையின்ரை கல்லறைக்காக எவ்வளவு மினைக்கெட்டு எழுப்பப்பட்ட பிரமிட்டுகள்! சண்டையில தூக்கிக் கொண்டு வந்த எதிரி மன்னன்ரை மனிசி மும்தாஜில வைச்ச ஏதோ ஒரு இதுக்காக சாஜகான் கஜானாவைக் காலி செய்து கட்டின தாஜ்மகால் எண்டதுகளோடை, அண்மையில கட்டி முடிக்கப்பட்ட டென்மார்க்குக்கும், சுவீடனுக்கும் இடையிலான பாலத்தை யோசிச்சுப்பாருங்கோ ! எவ்வளவு அர்த்தமும், பிரயோசனமானதுமெண்டு. அந்தப் பெரிய நீட்டுக்கு, எவ்வளவு வடிவான பாலம் பாருங்கோ அது. பார்க்கப்போன இடத்தில நல்ல நல்ல படங்களைத் தாங்கிய போஸ்ற் கார்ட்டுகள் வித்திச்சினம். வாங்கி 4 பொக்கெற்றுக் குள்ளை போட்டன். பொக்கெற்றோட அணைஞ்சிருந்த நெஞ்சு எரிஞ்சிது. எட! எங்கட நாட்டிலையும் இரணைமடுக்குளம், சுண்டிக்குளக்கரை, பறவைகள் சரணாலயம் எண்டு வடிவான இடங்கள் எத்தினை இருக்கிது. ஆறாவது ஏதாவது அடிச்சு விக்கிறாங்களோ ? எங்கட பிரசுரங்கள், பதிப்பாலயங்கள் எல்லாம் தங்கட விளம்பரப்பலகையளில உணர்ச்சி வசப்படிற மாதிரி பேர்வைக்கிறதுக்குத்தான் ஆக்கள் ! மற்றம்படி வெறும் வாய்தான்!! எட நாங்கள் நாங்கள் வாழிற சுற்றுப்புறச் சூழலின்ரை அழகை ரசிக்க விரும்பாததுகளை வேற என்னண்டாம் சொல்லிறது !

அப்பிடி நாடுகள் எல்லாம் இருக்கிது. நானும் விசா முடியப் போகுது. 3 மாசம் ஆகுதெல்லே ! என்னதான் இஞ்சை எங்கட சனங்களோட சந்தோசமாய் இருந்தாலும், சொந்தநாடெண்டு அந்த உரிமை, அதை விட்டுப்பிரிஞ்சிருக்கிற துயரம்... சொல்லி விளங்காது அதெல்லாம். கெதியில சந்திப்பம் ! ஆ . . இன்னுமொரு விசயம் நான் எழுதிற தகவல்களை எல்லாம் ஒழுங்காய், தொடர்ந்து படிச்சு நினைவில வைச்சுக்கொண்டு வாங்கோ! இருந்தாப்போல ஒரு வினா விடைப்போட்டி மாதிரி (நான் எழுதின விசயங்களுக்கிள்ளை இருந்து) ஒண்டு வைச்சு திறமான என்னோட 'பேரப்பிள்ளை'யைத் தேர்ந்தெடுத்து பரிசு எல்லாம் தருவன். நான் சீரியசாய் தான் சொல்லிறன். சரியோ! எதுக்கும் பத்திரிகையை வாசிச்சு முடிச்சுப்போட்டு எறிய முதல், எல்லாம் ஞாபகத்தில இருக்கோ எண்டு 2 தரம் உறுதிசெய்து கொள்ளுங்கோ. நான் வாறன் அப்ப!

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

பாவலன் பதில்கள்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.



# பாவலன் பதில்கள்

*பாவலனே!*
*ஒட்டுண்ணிபோல் ஒட்டி வாழ்பவர்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்?*

*ப.பாமேஸ்வரி,*
*யாழ்ப்பாணம்.*

அவர்கள் வாழ்பவர்கள் அல்ல! பிழைப்பவர்கள்.

*பாவலனே!*
*எனது நண்பி ஒருவரை விரும்புகின்றாள் ஆனால் வீட்டில் சம்மதமில்லை. வீட்டிலும் மாப்பிள்ளை பார்க்கும் படலம் தொடங்கிவிட்டது. என்னமுடிவெடுக்கலாம் என்பதை எனது நண்பிக்காக தருவாயா?*

*ப.நாகேஸ்வரி,*
*இரணைமடு.*

முதலில் உமது நண்பியை அவர் விரும்புகிறாரா என்பதை சொல்லவில்லையே!

*பாவலா!*
*எமது தமிழ் மக்கள் இனியும் பொறுத்தது போதும் பொங்கியெழும் காலம் கனிந்துவிட்டது. போராடித்தான் எமது உரிமைகளைப் பெறவேண்டும் என உறுதியெடுத்துள்ளார்கள். இதற்கு சிங்கள அரசும் அதன் கைக் கூலி இராணுவமும் முகம் கொடுப்பார்களா?*

*கு.மயூதரன்,*
*சிறுப்பிட்டி.*

முகம்கொடுப்பார்களோ என்னவோ, ஆனால் உயிரைக் கொடுப்பார்கள்! (இழப்பார்கள்)

*அன்பின் பாவலா!*
*வீதியில் நின்ற ஒருவனுக்கு திட்டமிட்டு வந்த மூன்று பேர் கொண்ட குழுவினர் தடி, பொல்லால் அடித்துவிட்டு வீரவசனம் பேசுகின்றார்கள் அவர்களின் வீரம் பற்றிய தங்கள் கருத்து?*

*ஓவியன்,*
*செம்மலை.*

சினிமா கற்பித்த வீரம்.

*பாவலா!*
*அகதி என்ற அந்தஸ்து தமிழர்களைவிட்டு எப்போது நீங்கும்?*

*சதீஸ்,*
*செல்வாநகர்.*

அச்சம் அகற்றி போராடத் துணியும்போது.

*பாவலா!*
*மண்மீது காதல் கொண்டால் போராளி, பெண் மீது காதல் கொண்டால் காதலன், பதவி மீது காதல் கொண்டால்.....?*

*அ.மதனகுமாரன்,*
*கொடிகாமம்.*

அரசியல்வாதி.

*பாவலரே!*
*புத்தர்சிலைகள் சமாதானத்தை குழப்பும்போல் உள்ளது உங்கள் கருத்து?*

*ஆ.லூசியாமேரி,*
*முழங்காவில்.*

புத்தர் வெறும் அம்பு மட்டும்தான். வில்லாகிச் செயற்படுபவர்கள் வில்லன்களான பிக்குமார்களும் பேரினவாதிகளுமே.

*பாவலா!*
*சந்திரிகா ராஜினாமா செய்தால் இலங்கை அரசியல் எப்படியிருக்கும்?*

*ஆ.ஆழிவேல்,*
*ஆயம்.*

வழக்கம் போல் குப்பையாகவே இருக்கும்.

*பாவலா!*
*இந்தக் காலத்தில் சில நண்பர்கள் நல்லவர்கள் மாதிரி நடித்துவிட்டு துன்பம் வரும்போது விலகிவிடுகிறார்கள் ஏன்?*

*கோ.செல்வமலர்,*
*பரந்தன்.*

கவலைப்படாதீர்கள். நீங்கள் துன்பத்திலிருந்து விலகியதும் அவர்கள் மீண்டும் வந்து சேர்ந்து விடுவார்கள்.

*பாவலா!*
*கடவுளை நேரில் கண்டு நாலுவார்த்தை கேட்கவேண்டும் முகவரி ஏதும் உம்மிடம் உண்டா?*

*ஆனந்தி,*
*ஆயப்பகுதி.*

நாலுவார்த்தை கேட்க நேரிலா செல்லவேண்டும். தொலைபேசியில் கேட்கலாமே.

*பாவலரே!*
*ஜே.வி.பி இனி என்னசெய்யப் போகின்றது. உமக்குத்தெரியுமா?*

*தர்மினி,*
*கிளிநொச்சி.*

இது வரை என்னச் செய்ததோ அதைத்தான்.

*பாவலரே!*
*சுதந்திரக் கட்சியின் எதிர்காலம் பற்றி ஒருவரி கூறுமேன்?*

*யாமினி,*
*யாழ்ப்பாணம்.*

அநுராவின் கையில் அவஸ்தைப்படப் போகிறது.




சொன்னா நம்பமாட்டியள் நான் கலியாணங் கட்டின காலந்தொட்டு ஒரே அடியுமாக்கினையுந் தான்... இவற்ற சொல்லக்கேட்டு ஆச்சியப்புதந்த சீதனக்காணியெல்லாம் வித்துப்போட்டு வன்னிக்க வந்தம் இப்ப... இவருக்கு நான் கிழவியாம்... என்ன வேண்டாமாம்... அவளொரு அலம்பி... அவளோட தான் கூட்டு... (அழுகை)

அ... உது சட்டவிரோதம்... ஆளைப்பிடிச்சு உள்ளுக்க போடோணும். நீங்கள் இப்ப ஆரோட இருக்கிறியள்.

நான் பக்கத்தில அம்மான்ர தங்கச்சி வீட்டில... இஞ்ச இதில பாருங்கோ, இந்தத் தழும்பு இவர் சிலாகையால அடிச்சு வெடிச்சகாயம் பாருங்கோ... ஏழு தையல் போட்டது. (விம்மல்)

நீங்கள் ஆஸ்பத்திரிப் பொலிசில சொல்லேல்லயே.

அவை கேட்டவைதான் நான் காட்டுக்கத்தியப் பிழையா வீசினதில வெட்டிப்போட்டு தெண்டனான். (மூக்குறிஞ்சல்)

ஏன் அப்பிடிச்சொன்ன நீங்கள்-பிடிச்சுக்குடுத்திருக்கலாமே.... ம்... இப்ப என்ன பிரச்சினை

அவளட்டப் போறத நிப்பாட்டவேணும் அவளாலதான் பிரச்சினை.

சரி ... சரி எல்லாத்தையும் விபரமா எழுதித்தாங்கோ ரெண்டு பேரையுங் கொஞ்ச நாளைக்கு மறியலுக்கு அனுப்பச் சரிவரும்.

“........................”

கடைசியா எப்ப அடிச்சவர். எத்தினை மணிக்கு அவளட்டப்போறார்.

இப்ப ஆறுமாசமா அவர் என்னோட பிரச்சினையில்லை...

சரி... அவளட்டப் போறது என்னமாதிரி.

அவளட்டையும் இப்ப அவ்வளவாய் போற மாதிரித் தெரியேல்ல?!!

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -125



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நிலையப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -125

........................................................................

........................................................................

........................................................................

........................................................................

பெயர் : ........................................................................
முகவரி : ........................................................................
........................................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -124



**மு.கங்கா,**
**இல:-04 சோலை,**
**வன்னேரிக்குளம்.**

## பரிசுக்குரிய வரிகள்

*தள்ளாத வயதினிலே சோதனைகள்*
*பல வந்த போதும்*
*தன் மானமும் தைரியமும் கொண்டு*
*தளராது உழைத்து நம் வாழ்வை உயர்த்திடுவீர்.*

## பாராட்டுக்குரிய வரிகள்

*தடிகளைக் கூடுகளாக்கும் கலைஞனே!*
*தேச மூலவளத்தில் கைத்தொழில் செய்து*
*தமிழீழத்தை வளப்படுத்தும் பரம்பரையின்*
*சொத்தே! நீ தனிமரமல்ல; தோப்பு.*

திருமதி ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*புலுமச்சி நாதன்குளத்துப்*
*பூர்வீகச் சின்னமொன்று*
*நார் கோர்த்து வரிகிறது-நலிந்தவுடல்*
*உயிர்ப் பூவை வாழவைக்க.*

கு.சாந்தி,
கிளிநொச்சி.

*அன்று இளைத்து இளைத்து ஓடினேன்*
*குண்டுகளில் இருந்து உயிர் பிழைக்க- இன்று*
*இழைத்து இழைத்து வாழ்கிறேன்*
*வரப்போகும் தமிழீழத்திற்கு வளம் சேர்க்க.*

சி.ஜெயபாபு,
கிளிநொச்சி.

*களப்பணி செய்ய பிள்ளைகளை அனுப்பி*
*கைப்பணி செய்து குடும்பச் சுமையை ஏற்ற*
*தேசத்தின் தந்தையே-தமிழன்*
*தலைகுனியான் என தரணிக்கு உணர்த்துகிறாயோ?*

சு.செல்வி,
பரந்தன்.

இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்




அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு

## 2 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 - 02 - 1947



மறைவு 16 - 07 - 2003

அமரர்

### சின்னப்பிள்ளை ஆறுமுகம்

(உதவிக்கல்விப்பணிப்பாளர்)

அப்பா!உமைப்பிரிந்தோம்
எனச்சொல்லும் விதியை என்செய்வோம்
உமையெண்ணி ஓர் பொழுதும்
தேம்பாமல் நாமில்லை-நிதம்
தோன்றும் உம் நினைவை
எதுவும் பிரித்தல் முடியாது
ஆண்டிரண்டு சென்றாலும் -நாம்
உந்தன் நினைவுத்தடம்
மாறாமல் உள்ளோம். உணர்வீர்கள்
உங்கள் இனியமுகம் -என்றும்
எங்களோடு இருக்கும்.

குடும்பத்தினர்,
4ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

(6285)

## 8 ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 26 - 08 - 1974



தாயக மண்ணில் 24 - 06 - 1997

### கப்டன் ஜெயச்சந்திரன்

சிதம்பரப்பிள்ளை (சிவநாதன்)

சம்பவம்:பெரியமடுவை நோக்கி முன்னேறிய ஜெயசிக்குறு
இராணுவத்தினருடனான தாக்குதலில்

செந்தாளம் பூவாய் சிரித்திடும்
பொன்முகத்துடன்
பொங்கி எழுந்தாய் சந்திராவே
தேசமதை காத்திட
தலைவன் பயணமதில்
பாசப்பூவாய் மலர்ந்திட்ட சந்திராவே-உம்
பயணமது தொடர நாம் உள்ளோம்
ஜெயச்சந்திராவே நெஞ்சமதில் -உம்
நினைவுடன் நாம் இன்று.

முகவரி:
புலுமச்சிநாதகுளம்,
மாங்குளம்.

தகவல்:
சி. சுதாசீலன்,
(போராளி)

(6280)













இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆனி–10 | 24–06–2005 | வெள்ளிக்கிழமை | ஓசை–126


உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V.பந்தல் சேவை
முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-12122) விநாயகர் வீதி, சுவிலிட்டி.

## பொதுக்கட்டமைப்பு உடன்பாடு

# கைச்சாத்து இடப்பட்டுவிட்டதென

# வெளியான தகவலுக்கு அரசு மறுப்பு!

## இன்று பாராளுமன்றத்தில் ஆவணம் சமர்ப்பிக்கப்படும் என உறுதி

(கொழும்பு)

**நேற்றைய தினம் பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் அரசாங்கத் தரப்பு கையொப்பம் இட்டுள்ளதாக வெளியான தகவலை அரசாங்கத்தரப்பு நேற்று மறுத்துள்ளது. இது பொய்யான தகவல் எனக்கூறிய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பொதுக்கட்ட மைப்புக் குறித்த ஆவணம் இன்று அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.**

பொதுக்கட்டமைப்பில் அரசதரப்பினர் கையொப்பம் இட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச பாராமன்றத்தில் இது தொடர்பான கேள்வி எழுப்பியதற்கு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு மறுத்துள்ளார். இருப்பினும், அமைச்சரிடம் மீண்டும் கேள்வி எழுப்பிய விமல் வீரவன்ச பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றுக்கண்டிருக்கையிலேயே கையொப் பம் இடப்படுமா? என வினவினார்.

இதற்குப் பதலளித்த அமைச்சர் இது தொடர்பில் இன்று பாராளுமன்றத்தில் அரசாங்கம் அறிக்கை ஒன்றை வெளியிடும் எனவும் பதிலளித்தார்.

## நோர்வேத் தரப்பினர் நேற்று கிளி.க்குத் திடீர்விஜயம்!

(அலுவலக செய்தியாளர்)

நோர்வே தூதரகத்தின் உயர் அதிகாரிகள் தமிழீழ விடுதலைப்புலிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

நேற்றுக் காலை விசேட உலங்குவானூர்தி மூலம் கொழும்பில் இருந்து கிளிநொச்சியை வந்தடைந்த நோர்வேத் தூதரகத்தின் அதிகாரிகள் இருவரையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் கைலாகு கொடுத்து வரவேற்றார். இவ்வாறு வருகை தந்த நோர்வேத் தரப்பினர்களில் இலங்கைக்கான நோர்வேத் தூதரகத்தின் முதலாவது செயலாளரும் ஒருவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் 45 நிமிடங்கள் வரை இச்சந்திப்பு இடம்பெற்றது. எனினும் இச்சந்திப்புப் பற்றிய விபரங்கள் எவையும் எந்தத் தரப்பில் இருந்தும் வெளியிடப்படவில்லை. (லோ, தீ)

## இன்று பிற்பகலில் இருந்து சந்திரிகாவிற்கு சுபவேளையாம்

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு இன்று பிற்பகலிலிருந்து சுபவேளை ஆரம்பிப்பதால் அதன்பின்னர் அரசாங்கத்தரப்பு பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் கையொப்பமிடலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றன.

சனாதிபதி சந்திரிகா சாத்திரங்கள் மீது நம்பிக்கை கொண்டவர் என ஏற்கெனவே அறியப்பட்டதொன்றே.

## பொதுக்கட்டமைப்பு குறித்து பாராளுமன்றில் இன்று அறிக்கை

இன்று பாராளுமன்றம் கூடும்போது சமூகசேவைகள் அமைச்சர் சுமேத ஜெயசேன ஆழிப்பேரலை அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்புத் தொடர்பான அறிக்கையினை சமாப்பிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்த முகாமைத்துவ கட்டமைப்புத் தொடர்பில் அறிமுக உரையினை ஆற்றுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் சனாதிபதி கோரிய போதிலும் பிரதமதர் அதனை நிராகரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.

இதனை அடுத்தே சுமேத ஜெயசேனவை இந்த அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு சனாதிபதி பணித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. சனாதிபதி செயலகத்தால் தயாரிக்கப்படும் விசேட அறிக்கை நாளை காலை 9.30இற்கு பாராளுமன்றத்தில் வாசிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஹெல்கேசன் இந்தியா பயணம்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன், நேற்று இரவு இந்தியாவுக்குச் சென்றுள்ளார். பிரதியமைச்சர் விதார் ஹெல்கேசன் பெங்களூருக்குப் புறப்பட்டுச் சென்றுள்ள தாக கொழும்பு கட்டுநாயக்க விமானநிலைய வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள் ளன. இதேசமயம், அவர் இன்று காலையில் மீண்டும் கொழும்பு திரும்பலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## அஸ்கிரிய மகாநாயக்கரிடம் பொதுக்கட்டமைப்பு வரைவை வழங்கி ஆசி பெற்றார் சனாதிபதி சந்திரிகா

பொதுக்கட்டமைப்பு வரைவுடன் அஸ்கிரிய மகாநாயக்கரை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று சந்தித்துப் பேசினார்.

காலை உலங்குவானூர்தி மூலம் கண்டி தலாதா மாளிகைக்குச் சென்ற சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தேச பொதுக்கட்டடைப்பு தொடர்பான ஆவணத்தை அஸ்கிரிய மகாநாயக்கர் உடுகம சிறிபுத்தரகித்த தேரரிடம் கையளித்து அவரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுள்ளார்.

சனாதிபதியுடன் நிதியமைச்சர் சரத் அமுனுகமவும் மத்திய மாகாண முதலாமைச்சர் மொண்டி கொப்பல்லாவையும் சனாதிபதியின் செயலாளர் ஒருவரும் தலதாமாளிகைக்குப் பயணம் செய்துள்ளனர்.

அஸ்கிரிய மகாநாயக்கரைச்சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களைச் சந்தித்த நிதியமைச்சர் சரத் அமுனுகம, பொதுக்கட்டமைப்பு தொடர்பான ஆவணத்தை அஸ்கிரிய மகாநாயக்கரிடம் சனாதிபதி காண்பித்து ஆசி பெற்றுக் கொண்டதை உறுதிப்படுத்தினார் உத்தேசப் பொதுக்கட்டமைப்பினால் நாடு பிளவுபடாது என அஸ்கிரிய

(IV ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படின் சனாதிபதி மீது குற்றவியல் பிரேரணை

**-ஜா.ஹெல உறுமய அறிவிப்பு**

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் பொதுக்கட்ட மைப்பு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டால், சனாதிபதி மீது குற்றவியல் பிரேரணையும் அதேவேளை, அரசாங்கத்தின் மீதும் பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரவுள்ளதாகவும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது. நேற்று

(IV ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை முடக்கும்வரை போராட்டம் தொடருமென்கிறது ஜே.வி.பி

பொதுக்கட்டமைப்பு நடைமுறைப்படுத்துவதை முடக்கும் வகையில் இன்று முதல் அமைதியான முறையில் போராட்டங்களை நடத்த உள்ளதாக ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.மாணவர்கள், தொழிலாளர்கள், புத்திஜீவிகள் உள்ளிட்டோரைத் திரட்டி பொதுக்கட்டமைப்பு முடக்கப்படும்வரை போராடுவோம் என்றும் இன்று முதல் சிறிலங்காவின் ஒரு புதிய அரசியல் அத்தியாயம் தொடங்கும் என்றும் அமரசிங்க கூறினார்.

## அரச சேவைகளைப் புறக்கணிக்க இல. தொ.சங்க சம்மேளனம் கோரல்

உத்தேசப்பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று நாடு முழுவதும் அரசசேவை ஊழியரை வேலை நிறுத்தத்தில் இறங்குமாறு அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனக் கூட்டமைப்பு கோரியுள்ளது. அனைத்து அரச நிறுவனங்களிலும் இன்று கறுப்புக்கொடிகளைப்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பாதுகாப்பு சனாதிபதியின் பணிப்பில் அதிகரிப்பு

கொழும்பில் அசம்பாவிதங்கள் ஏற்படலாம் என அச்சம் காரணமாக மேலதிக படையினரும் பொலிசாரும் கொழும்பில் தீவிர பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் குறித்த அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதால் அதனை அடுத்து வன்முறைகள் ஏற்படலாம் என எச்சரிக்கப்பட் டுள்ளது. வன்முறைகளில் ஈடுபட முனைபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு பொலிசாருக்கு சனாதி பதியால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது

## வரிவிளம்பரம்

### SPOKEN ENGLISH

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு அடிப்படை இலக்கணத்துடன் பயிற்சி ஆரம்பம:04.07.2005 மாலை 5.மணி இடம்: அன்னை வேளாங்கன்னி ஆலயம் முன்பாக உதயநகர் கிழக்கு. ஆசிரியர் க.யோகன் (BBA&NDE) (6288)

### இன்று சனிமாற்றம் எப்படி?

இன்று (24.06.2005) சனி மாற்றம் எங்கும் விற்பனையாகின்றது. ரூ 15/= (நூறுவது ஜெயந்தி-கடவுள் சுவாமிகளின் தெய்வீகவரலாறும் அடங்கியது) ஜோதிடக்கணிப்புக்களுக்கு கணிப்பாசிரியர்-PROF சத்தியதாஸன், ஆனைக்கோட்டை T/P-077/6547175 (5387)

### சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு

4ஆம் கட்டை மல்லாவி வீதி,வன்னிவிளான்குளத்தில் இயந்திரத்தால் செய்த சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு.

5"x6"x12"- ரூபா.23.00
4"x6"x14"- ரூபா .20.00
(6211)

### தவறிவிட்டது

17 ஆம் திகதி அன்று கிளிநொச்சிக்கும் புதுக்குடியிருப்புக்கும் இடையில் கையடக்கத் தொலைபேசி ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. இதை கண்டெடுத்தவர்கள் லிமற் கணினி மையம் கிளி நொச்சி அல்லது ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (6174)

### பெயர் மாற்றம்

5ஆம் வாய்க்கால் பரந்தனில் வசிக்கும் சின்னத்தம்பி நாகேந்திரன் ஆகிய நான் எனது பெயரை நாளையிலிருந்து சின்னத்தம்பி தீபன் என மாற்றம் செய்துள்ளேன். (6296)

---

சந்தியதர்சன் பூஜிதா ஞாபகார்த்தப் போட்டிகளில்

# இளந்தாரகை, சந்திரோதயா, கிளி/ம.வி. அணிகள்

## சம்பியன் பட்டங்களைப் பெற்றன!







(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட அமரர் சத்தியதர்சன் பூஜிதா ஞாபகார்த்த உதைபந்தாட்ட, வலைபந்தாட்ட, மென்பந்தாட்ட இறுதிப் போட்டிகளும், பரிசளிப்பு நிகழ்வுகளும் வெகுசிறப்பாக நடைபெற்றுள்ளன.

முன்னதாக நேற்றுக்காலை 11.00 மணியளவில் கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமான மென்பந்தாட்ட இறுதிப் போட்டியில் நியூஸ்ரார், இளந்தாரகை அணியினர் மோதிக் கொண்டனர். நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று இளந்தாரகை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் அணி இருபது ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குகநாத் 24 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்துவீச்சில் யோகீசன், கீர்த்தி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 95 என்ற வெற்றி இலக்கு நோக்கி ஆடிய இளந்தாரகை அணி 18.3 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் சாரங்கன் 35 ஓட்டங்களையும், யோகீசன் 28 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் மயூரன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இப்போட்டியில் சிறப்பாட்டக்காரராக சாரங்கன் தெரிவானார்.

தொடர்ந்து மாலை 3.30 மணிக்கு உதைபந்தாட்ட இறுதிப்போட்டி தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமானது. உதைபந்தாட்டப் போட்டியில் சந்திரோதாயா அணியை எதிர்த்து உழவர்ஒன்றிய அணி மோதியது. இரு அணிகளும் போட்டியின் இடைவேளையின்போது 1-1 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தன. ஆனால், இடைவேளையின் பின் சந்திரோதயா அணி மேலும் ஒரு கோலைப் போட்டு 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதேவேளை, வலைபந்தாட்ட இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கிளி. மகா வித்தியாலய அணி உருத்திரபுர அணியைத் தோற்கடித்தது.

கிரிக்கெட் போட்டிக்கு நடுவர்களாக பூ. சுபானந்த், குமார் ஆகியோரும், உதைபந்தாட்டத்திற்கு எஸ். சாரங்கன், வீ. சிவநேசன், பிரியங்கன் ஆகியோரும், வலைபந்தாட்டத்திற்கு மனோன்மணி, விஜயநிதி ஆகியோர் கடமையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து மாலை ஆறு மணியளவில் பரிசளிப்பு வைபவம் இடம்பெற்றது. வலைபந்தாட்டப்போட்டியில் வெற்றிபெற்ற கிளி. ம.வி. அணிக்கான கேடயத்தை கிளி. நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் போர்ப்பிரியன் வழங்கினார். மென்பந்து கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெற்ற இளந்தாரகை அணிக்கான கேடயத்தினை கிளி. மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா வழங்கினார். உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற சந்திரோதயா அணிக்கான கேடயத்தை தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் வழங்கினார். அத்துடன் சிறந்த போட்டியாளர்களுக்கும், நடுவர்களுக்குமான பரிசில்கள் வழங்கப்பட்டன.

(லோ,தீ)


வடமாகாணத்தில் முதன் முதலாக

அறிமுகப்படுத்துகின்றோம்!





Indoor-out door Large format Digital Printing

6அடி முதல் 300 அடி வரை

- ☆ வியாபார நிறுவனங்களுக்கான பெயர்ப்பலகைகள், பனர்கள்
- ☆ CDக்களுக்கான ஸ்ரிக்கர் பிறிண்டிங்
- ☆ ஆலயங்களுக்கான திரைச்சீலைகள்
- ☆ வாகனங்களுக்கான அலங்கரிப்புகள் (ஸ்ரிக்கர்)
- ☆ சினிமாத் திரையரங்குகளுக்கான போஸ்ரர்கள்
- ☆ திருமணப் பந்தல்களுக்கான வர்ண அலங்கரிப்புகள்
- ☆ ஸ்ரூடியோக்களுக்கான Background அலங்கரிப்புகள்

புதியனவற்றை அறிமுகப்படுத்துவதில்

இன்றைய முன்னோடிகள்

Output medias
-Sticker paper
-Flex paper
-Coated paper
-Backlit Film
-Photo paper
-Vinyl paper

MOORTHY LAZER DIGITAL COLOUR LAB

Jaffna Road, Manipay
T.P:- 0212222884

Stanley Road Jaffna
T.P:- 0714168475

(சி.12228)

# கேள்வி அறிவித்தல்

## பிரதம பொறியியலாளர் அலுவலகம்
## கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) கிளிநொச்சி

01. கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கிளிநொச்சி கட்டடங்கள் திணைக்கள பிரதமபொறியியலாளர் அலுவலக கேள்விச்சபையால் 2005ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிவரை கிருஷ்ணன்கோவில் வீதியில் உள்ள கிளிநொச்சி கட்டடத்திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத் தினால் அலுவலக நேரத்தில் ஏற்றுக்கொள்ளப் படும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாக எமது அலுவலகத்தினால் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவரால் முறைப்படி அங்கீகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் கேள்விகள் திறக்கப்படும் போது சமுகமளிக்கும்படி அறிவுறுத்தப்படுகின் றனர்.

02. நிர்மாணப்பயிற்சி நிறுவத்தினால் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்குச் கீழ்க் குறிக்கப்படும் தரவுகளையுடைய அல்லது அதற்கு மேற்பதிவு செய்யப்பட்ட ஒப் பந்தக் காரர்கள் மட்டும் கேள்விப்பத்திரங்கள் கோருவதற்கு தகுதியுடையவராவார்.

03. ஒப்பந்தப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணிப்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும். இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியது மான பதிவுப்புத்தகத்தை, கிருஷ்ணன்கோவில் வீதியில் உள்ள கிளிநொச்சிக் கட்ட டத்திணைக்கள பிரதம பொறியியலாளர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்வி வைப்புப்பணத்தை கிருஷ்ணன்கோவில் வீதி யில் உள்ள கிளிநொச்சிக் கட்டடத்திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத் தில் செலுத்தி பற்றுச்சீட்டைப்பெற்று, கேள்விப்பத்திரங்களை 2005ஆம் ஆண்டு யு,லை மாதம் 7ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிவரை நிறைவேற்றுப் பொறியி யலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சியில் பெற்றுக்கொள்ள லாம்.

| இல | வேலையின் விபரம் | பதிவு செய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|---|---|
| 01 | திருத்தவேலை வாகனத்தரிப்பிடம், வெளி நோயாளர் பிரிவு, பளை | M-9 | 2400. 00 | 250. 00 |
| 02 | மீள் நிர்மாணம், மிகுதி வேலை, சுகாதார வைத்திய அதிகாரிஅலுவலகம் கிளிநொச்சி. | M-8 | 20900. 00 | 500. 00 |
| 03 | திருத்தவேலை மகப்பேற்று விடுதி, சுற்றயல் கூறு, முழுங்காவில். | M-9 | 1200. 00 | 100. 00 |
| 04 | திருத்தவேலை ஆண்கள் விடுதி,வெளி நோயாளர் பிரிவு, சுற்றயல் கூறு , அக்கரா யன் குளம். | M-9 | 6000. 00 | 250. 00 |
| 05 | திருத்தவேலை களஞ்சிய அறை வெளி நோயாளர் பிரிவு, கிளிநொச்சி. | M-9 | 12000. 00 | 500. 00 |
| 06 | திருத்தவேலை மலசலகூடம், சுற்றயல் கூறு, முழுங்காவில். | M-9 | 1200. 00 | 100. 00 |
| 07 | சுற்று வேலி அமைத்தல், மலசலகூடத் திருத்தம்,மத்தியமருந்தகம், வன்னேரிக் குளம். | M-9 | 1200. 00 | 100. 00 |
| 08 | சுற்று வேலி அமைத்தல், டித்தியமருந் தகம், வட்டக்கச்சி. | M-9 | 1800. 00 | 250. 00 |
| 09 | திருத்தவேலையும், பராமரிப்பும், மலசல கூடம், பளை. | M-9 | 1200. 00 | 100. 00 |

05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விபரங்களை கிளிநொச்சி, கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளர் அவர்களிட மிருந்து வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

எந்திரி சு. சுந்தரகுமார்,
பிரதம பொறியியலாளர்,
கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்),
கிளிநொச்சி.

(சி.12230)

**எமது குட்டியின்**
**31ஆம் நாள் கண்ணீர் பூக்கள்**
**சபிண்டீகரண அழைப்பிதழ்**

| மடியில் பூத்தது | மண்ணில் சாய்ந்தது |
|---|---|
| 25 | 25 |
| 05 | 05 |
| 1987 | 2005 |



அமரர் சிவநாதன் லிங்கேஸ்வரி(குட்டி)
(பளை மத்திய கல்லூரி மாணவி)

கண்சிமிட்டும் புன்சிரிப்பில்
கண்காணா இடம் சென்று- எம்மை
கண்ணீரில் ஆழ்த்திவிட்டதேனம்மா!

இன்று (24–06–2005) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் அன்னாரின் நினைவாக நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

கச்சாவெளி, பளை.

தகவல்: –
சிவநாதன் சத்தியா

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) MP ஒப்பந் தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழே சுட்டிக்காட்டப்பட்ட கேள்விக்கான கேள்வி வைப் புப்பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி-27.06. 2005- 04.07. 2005 வரை

02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திக்தி:-05.07.2005 நண் பகல் 12 மணிவரை

03 கேள்வி திறக்கப்படும் திகதி:-05.07.2005 பிற்பகல் 2.00 மணி (திறக் கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுக மளிக்கலாம்)

04 கேள்வியை ஏற்கவோ, மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.

05 மூல கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு செய லாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, தலைமை யலுவலகம், மானிப்பாய் என்ற முகவரிக்கோ அல்லது தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியிலோ 2ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக கிடைக்கக் கூடிய தாக அனுப்பப்படல் வேண்டும். ஒரு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், செட்டித் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

06 மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

| வேலை விபரம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப்பணம் | Vat வரி 15% |
|---|---|---|---|
| நவாலி வடக்கு குடத் தனைவீதி புனரமைப்பு | 1250.00 | 250.00 | 35.50 |
| நவாலி சென்பீற் றர்ஸ் வீதி புனரமைப்பு | 5000.00 | 500.00 | 75.00 |
| ஆனைக்கோட்டை பொதுநூலகம் திருத் தம் | 2500.00 | 300.00 | 45.00 |
| மானிப்பாய் பட்டின உப அலுவலகம் திருத்தம் | 250.00 | 100.00 | 15.00 |
| முள்ளிய வளை கலைவாணி ச.ச.நி. மீள்.புனரமைப்பு | 2000.00 | 300.00 | 45.00 |

திரு. மேரிஜோசப் சாந்தசீலன்,
செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

(சி.12231)

# அளம்பில் திலீபன் மருத்துவசேவை மூன்றாம் ஆண்டு பூர்த்தி

(அலுவலக செய்தியாளர்)

தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவை அளம்பிலில் ஆரம்பிக்கப்பட்டு இன்று மூன்றாவது வருட சேவையினைப் பூர்த்தி செய்கின்றது.

எமது தேசியத்தலைவரின் தூர நோக்கு சிந்தனையில் மருத்துவ வசதிகள் குன்றிய பின்தங்கிய கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு 24-06-2002ஆம் ஆண்டு அளம்பில் பிரதேசத்தில் மக்கள் நலன்கருதி லெப். கேணல் திலீபன் மருத்துவ சேவை ஆரம்பிக்கப்பட்டது.

அன்று முதல் இரண்டரை வருட காலமாக இம்மருத்துவ சேவையின் வைத்தியராக சிறப்பு மருத்துவப் போராளி திருமதி செவ்வானம் சேவையாற்றி வந்ததுடன், மக்களுக்கு மருத்துவ ஆலோசனைகளையும், சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் வழங்கி மருத்துவசேவையினை விரிவுபடுத்தினார். அவரது மாற்றத்தினைத் தொடர்ந்து சிறப்பு மருத்துவப்போராளி செல்வி. இ. அமுதம் வைத்தியராகப் பொறுப்பேற்றதுடன் அவருடன் இணைந்து மருத்துவப் போராளி செல்வி அமர்தியும் சேவை புரிந்து வருகின்றார். இப்பிரதேசவாழ் மக்களின் உதவியுடன் அபிவிருத்திக் குழுவினரின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் மூலம் மேறபடி மருத்துவமனை துரித வளர்ச்சி கண்டுள்ளதுடன் இப்பிரதேச மக்களின் மருத்துவத் தேவையினைப் பூர்த்தி செய்து வருகின்றது. மலேரியா, உயர் குருதி அழுத்தம், நீரிழிவு, சுவாசத் தொற்று மற்றும் பலதரப்பட்ட நோய்களுக்கான சிகிச்சைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் 2002ஆம் ஆண்டு அளம்பில் பிரதேசத்தில் 8328 நோயாளர்களும், 2003 ஆம் ஆண்டு 14,553 நோயாளர்களும், 2004ஆம் 12,657 நோயாளர்களும், 2005ஆம் ஆண்டு நேற்று வரை 13,525 நோயாளர்களும் சிகிச்சை பெறறுள்ளனர்.

அளம்பில், குமுழமுனை, செம்மலை, உடுப்புக்குளம், நாயாறு, ஆறுமுகத்தான்குளம், உப்புமாவெளி, முறிப்பு, பூதன்வயல், சிலாவத்தை, தியோகுநகர் ஆகிய கிராமங்கள் உள்ளடங்கலாக மேற்படி மருத்துவ சேவை இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# மக்கள் வாழ்விடங்களிலிருந்து சிங்களப்படைகளை வெளியேறக்கோரி தீவகத்தில் கண்டனப்பேரணி

## -பொது அமைப்புக்கள் ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் வாழ்விடங்களிலிருந்து சிங்களப்படையை வெளியேறக்கோரியும், பௌத்த சிங்கள பேரினவாத வெறியைக் கண்டித்தும் எதிர்வரும் திங்கட்கிழமை தீவகத்தில் மாபெரும் கண்டனப்பேரணி நடைபெறவுள்ளது.

தீவகம் வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இப்பேரணி ஊர்காவல்துறையில் நடைபெறவுள்ளது.

ஊர்காவல்துறை பாலையடிச் சந்தியில் ஆரம்பமாகவுள்ள இப்பேரணியானது ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் சென்றடைந்து பிரதேச செயலரிடம் மகஜர் கையளிக்கப்படவுள்ளது.

கடந்த 90ஆம் ஆண்டு தீவகத்தை சிங்களப்படைகள் ஆக்கிரமித்ததையடுத்து இன்றுவரை இயற்கை வளங்களை இழந்ததோடு தொழில் செய்யும் உரிமை மனித வாழ்வுரிமைகூட முற்றாகப் பறிக்கப்பட்டு தீவகமக்கள் துன்ப துயரங்களோடு அடிப்படை வசதிகள் எதுவுமற்று வாழ்ந்து வருகின்றனர்.

எனவே, எமது மக்களின் நியாய பூர்வமான வேண்டுதலை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்டும் முகமாகவுமே இப்பேரணி நடைபெறவுள்ளது. இப்பேரணிக்கான சகல ஏற்பாடுகளும் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றது. படையினர் எமது வாழ்விடங்களை விட்டு வெளியேறும் வரை தொடர் போராட்டங்களை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதில் தீவகமக்கள் அனைவரும் அணிதிரண்டு தமிழினத்தின் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவளிக்கும்படியும் ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (33,27,சு)

# தெளிவான பெரும்பான்மையின்றி மா.சபைகளை கைப்பற்றமாட்டோம்

## – ஐ.தே.கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

தெளிவான பெரும்பான்மையின்றி எந்தவொரு மாகாண சபையினதும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுந்திரக் கூட்டமைப்பிற்குள் எழுந்துள்ள நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி எந்தவொரு மாகாண சபையினதும் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டிய தேவை ஐக்கிய தேசியக் கட்சிக்கு இல்லை என்று அக்கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஏதேனும் மாகாண சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றுமாயின் தெளிவான பெரும்பான்மையோடு கட்சியின் கொள்கைகளுக்கமைய மக்களுக்கு சேவையாற்றும் வகையிலேயே அதிகாரத்தைக் கைப்பற்றும் என்றும் அவர் கூறியுள்ளார். பலத்தைக் காண்பிப்பதற்காக மட்டுமே அதிகாரத்தைக் கைப்பற்ற தமது கட்சி விரும்பவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இன்னும் சிறிது காலத்தினுள் நாட்டின் பெரும் பதவியை வகிக்கும் கட்சியாகப் போகும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாகாண சபைகளின் ஆட்சியைப் பிடித்து வைத்திருக்க வேண்டிய அவசரம் இல்லை என்றும், தங்களுக்கு அதிகாரம் உள்ளது என்பதை நிரூபிக்க முடியாவிடில் மாகாண சபைகளைக் கலைத்துவிட்டு மக்களின் தீர்ப்பை அறிய தேர்தலுக்குச் செல்ல வேண்டியதுதான் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# ஓமந்தை திடீர் புத்தர்சிலை அகற்ற ஏழு நாட்கள் காலக்கெடு!

வவுனியா ஓமந்தை பிள்ளையார் கோவில் வளவினுள் திணிக்கப்பட்ட திடீர் புத்தர்சிலையை ஏழு நாட்களுக்குள் அகற்ற வவுனியா பொது மக்களின் அமைப்புக்கள் கெடுவிதித்துள்ளன.

திடீர் புத்தர்சிலையை அகற்றுவது தொடர்பாக வவுனியா மாவட்ட போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு காரியாலயத்தில் நேற்றுப் பிற்பகல் தமிழர் தரப்பினருக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையேயான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இதில் வவுனியா மாவட்ட அரசியல் துறையினர். பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஓமந்தை பிள்ளையார் கோவில் குருக்கள் மற்றும் சிறில்ங்கா இராணுவப்பிரதிநிதி ஆகியோர் பங்கேற்றனர்.

ஓமந்தை பிள்ளையார் கோவில் குருக்கள் பேசுகையில், பரம்பரை பரம்பரையாக அந்தக் கோவிலை தாங்கள் நிர்வகித்து வந்ததாகவும் திடீரென்று சிங்கள இராணுவம் கோவில் வளவினுள் புத்தர்சிலையினை வைத்துவிட்டு தமது பாரம்பரியமான இடம் என்று கூறுவதில் எந்த விதமான அர்த்தமும் இல்லை என்றும்,

இதுதொடர்பாக வவுனியா சிறிலங்காப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்து இருக்கின்றோம். நேற்று முன்தினம் இந்தச் சிலையினை அகற்ற உடன் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் தான் வவுனிய[illegible]ன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளோம் என்று குருக்கள் எச்சரிக்கை விடுத்தார்.

வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ஞனம் பேசுகையில், இராணுவத்தினர் அந்தப் பகுதி மக்களுக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர். பாரம்பரியமாக தமிழர்களின் சே[illegible]ாக இருந்த பிள்ளையார் கோவில்வளவினுள் திடீர் புத்தர்சிலையை வைத்துவிட்டு அது தங்களுடையதுதான் என்று சொல்வதானது தமிழர்களின் மத உரிமையை மீறுவதாக இருப்பதாகவும், இதன் காரணத்தினால் வவுனியாவில் வாழும் தமிழ்மக்கள் விரக்தியும், வேதனையும் அடைந்த நிலையில் உள்ளதாகவும் கூறினார்.

எதிர்வரும் ஏழு நாட்களுக்குள் இந்தச் சிலை எடுக்கப்படாவிட்டால் வவுனியா மாவட்டம் தழுவி மக்கள் பாரிய போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்றும், சிலையை வைத்த ஓமந்தை சிங்கள இராணுவமே மேற்படி சிலையை அகற்ற வேண்டும் என்றும் கூறினார்.,


## அஞ்சடி வானில் ஆங்கில வெள்ளம்

இங்கிலிஷ் வேர்க்ஷொப்

122, வில்சன் வீதி,

கிளிநொச்சி.

வளர்ந்தோருக்கும்சிறுவர்களுக்குமான

புதிய பிரிவுகள்.

விரைவில் ஆரம்பம்.

பதிவுகள்: [illegible]7.06.2005 இலிருந்து

மே[illegible]கொள்ளப்படும்.

([illegible]5942)


## அரச...

பறக்கவிட்டு காரியாலயங்களுக்கு முன்னால் பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவது என்றும் நடந்த கூட்டமைப்பின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று நடந்த அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் நிறைவேற்றுக்குழுக்கூட்டத்தில் சுமார் 80 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## அஸ்கிரிய...

மகாநாயக்கர் தெரிவித்துள்ளார். எனக் கூறிய நிதியமைச்சர் அந்தச் சந்திப்பு பற்றிய மேலதிக தகவல்களை வெளியிட மறுத்துள்ளார்.

மல்வத்தை மகாநாயக்கர் நேற்றைய தினம் இரத்தினபுரிக்குச் சென்றுள்ளதால் பொதுக்கட்டமைப்பு ஆவணம் பற்றி அவருக்கு விளக்கமளிக்க முடியாது போனதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சனாதிபதியின் தலதாமாளிகைப் பயணம் காரணமாக கண்டி நகரில் நேற்று பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

## ஹெல்கேசன்...

இதேவேளை, நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன், நேற்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள, எதிர்க்கட்சித் தலைவருடைய உத்தியோகபூர்வ வாச ஸ்தலத்தில் நடைபெற்றுள்ள [illegible]தச் சந்தி[illegible]க்கான [illegible] வேத் தூர[illegible]னஸ் பிறஸ்கரும் கலந்து கொண்டுள்ளார்.

# துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் மட்டு.இல் இளைஞனின் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நாவற்குடாவில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலத்தை நேற்றுக் காலை சிறிலங்காப் பொலிசார் மீட்டனர்.

தலையிலும், கழுத்திலும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் காணப்பட்ட இந்த சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. மட்டக்களப்பு நீதிபதி எச். எம். அஜ்மீர சடலம் இருந்த இடத்தைப் பார்வையிட்டார்.

அவரது உத்தரவிற்கு அமைய அடையாளம் காண்பதற்காக தற்போது மட்டக்களப்பு வைத்தியசாலையில் அந்தச் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

## பொதுக்கட்டமைப்பு...

பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதமொன்றில் கலந்துகொண்டு பேசிய ஜாதிகஹெலஉறுமயவின் தலைவர் எல்லாவலமேதானந்ததேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செய்துகொள்ளப்படுவதைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

தமக்குக் கிடைத்திருக்கும் நம்பிக்கை[illegible] தகவலின்படி பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுவிட்டதாகவும் இன்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ள எல்லாவலமேதானந்ததேரர்,அரசசார்பற்ற நிறுவனங்களின் வழிகாட்டலின் கீழ் அரசாங்கம் இவ்வாறு நடந்துகொள்ளுமாயின், பௌத்தர்களைத் திரட்டி, பாரிய போராட்டங்களை நடத்தப்போவதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.


## திரு இங்கிலீஷ்வே

திருநகர்

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்.

* முழுநாள் வகுப்புக்கள் நான்கு மாதங்கள்
* மாலை நேர வகுப்புக்கள் ஆறு மாதங்கள்

யூலை 03ஆம் திகதி ஆரம்பம்

பெயர்களை முன்கூட்டி பதிவு செய்யவும்.

(சி.12229) நிர்வாகம்.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது